விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 12 வெள்ளிக்கிழமை (28.07.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 221

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-9174)

# ரவி கருணாநாயக்க ஏற்படுத்திய கரும்புள்ளியை அவரே நீக்க வேண்டும்



ரவி கருணாநாயக்க



ராஜித சேனாரத்ன

அமைச்சர் ராஜித சேனாரத்ன

(கொழும்பு) கொள்கை பேதமின்றி மத்தியவங்கி பிணைமுறி ஊழல் சம்பந்தமாக அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் நடவடிக்கையால் அரசுக்கு பாரிய அசாதாரண தன்மை ஏற்பட்டுள்ளது. அது அரசுக்கு பெரிய கரும்புள்ளியாகவுள்ளது. அதை அவரே நீக்க வேண்டுமென அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## தடை நீடிக்கும் ஐரோ.ஒன்றியம் அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் ரத்துச் செய் 24☛

## மகிந்த பறித்தது உச்ச நீதிமன்றம் தடுத்தது

(கொழும்பு)

தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியதாக குற்றம்சாட்டி, கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் அமைந்துள்ள தமிழர் ஒருவருக்கு சொந்தமான 23☛

## விளக்க மறியல் கைதி தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

வழக்கு விசாரணைக்காக நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்பட்ட திருட்டு குற்றச்சாட்டு விளக்கமறியல் கைதி ஒருவர் நீதி மன்றிலிருந்து தப்பி ஓடிய சம்பவம் 24☛

## டெங்கு ஒழிப்பு நடவடிக்கையால் பரீட்சைக்கு இடையூறு ஏற்படாது

### வடக்கு மாகாண கல்வித் திணைக்களம்

(கொழும்பு)

தேசிய டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சி திட்டத்தின் மூலமாக அனைத்து பாடசாலை மாணவர்கள், சுகாதார அதிகாரிகள், அரச ஊழியர்கள், பொது மக்கள், முப்படையினர், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினர்களின் ஒத்துழைப்புடன் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இதன்படி பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு 24☛

## நாட்டை சிறப்பாக நிர்வகிக்க அரசுக்கு முதுகெலும்பு வேண்டும்

### இரா.சம்பந்தன் வலியுறுத்தல்

(கொழும்பு)

பணிப்பகிஷ்கரிப்பினாலோ, சதித்திட்டங்களைத் தீட்டியோ, அத்தியாவசிய சேவைகளைக் குழப்பியோ அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாதென எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவை குழப்பப்படுவதை நிறுத்தவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முயற்சித்ததாக எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், அத்தியாவசிய சேவைகளைக் குழப்புவது ஜனநாயகத்திற்கு விரோதமான செயல் என்பதுடன் அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது 23☛

## வேலைநிறுத்தம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் வரி வழங்குவது தொடர்பில், இன்று முன்னெடுக்கப்படவிருந்த வேலைநிறுத்தம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 24☛

## கெமுனு விஜயரத்ன பொலிஸில் முறைப்பாடு



(கொழும்பு)

அதிவேக பேருந்து அனுமதிக்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சபை நடைமுறைப்படுத்தும் அனுமதிப்பத்திர டெண்டர் 24☛

## இளஞ்செழியனை இலக்கு வைத்தவர் வெளிநாட்டுக்கு தப்பினாரா?

### நாமல் ராஜபக்ஷ சந்தேகம்


(கொழும்பு)

நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து நடத்தப்பட்டதாக கூறப்படும் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் உண்மையான சூத்திரதாரி வெளிநாட்டுக்கு தப்பி ஓடியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொரளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே இதை கூறியுள்ளார்.

தொடர்ந்து தெரிவிக்கையில், நாட்டில் மக்கள் 23☛

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுபிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தப் பெருமானின் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமா 24☛

## மயூரனின் பதவிக்காலம் நேற்றுடன் முடிவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரனின் பதவிக்காலம் முடிவடைந்ததையிட்டு, நேற்றைய அமர்வுடன் அவர், சபையிலிருந்து வெளியேறினார்.

வடமாகாண சபையின் 100ஆவது அமர்வு 24☛

## வாள் வெட்டால் இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலி கலட்டி சந்தியில் இடம்பெற்ற வாள்வெட்டில் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் புலோலி பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய தினேஸ்குமார் சலோஜிதன் என்ற இளை 24☛

## அமைச்சர் விஜயகலாவிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது

### தமிழ்மாறன் குறித்தும் விசாரிக்க பணிப்பு

(யாழ்ப்பாணம்)

மகளிர் விவகார மற்றும் சிறுவர்கள் உரிமைகள் தொடர்பான ராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனிடம், புங்குடுதீவு மாணவி படுகொலை வழக்கு குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது.

குறித்த கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான சுவிஸ்குமார், சம்பவம் இடம்பெற்ற போது ஊர் மக்களினால் சுற்றிவளைத்து மின் கம்பம் ஒன்றில் கட்டியிருந்ததாகவும் அவரை பொலிஸாரிடம் ஒப்படைக்காது விடுவித்தமை தொடர்பில் விஜயகலா மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டு குறித்து அமைச்சர் விஜயகலாவிடம் வாக்கு மூலமொன்றை பதிவு செய்து கொள்ள 24☛

## வரட்சி நிவாரணத்திற்கு ரூ. 40 மில். ஒதுக்கீடு

### வடக்கில் ஓர் இலட்சம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் கடும் வரட்சியுடன் கூடிய கால நிலையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க 40 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இடர் முகாமைத்துவ அமைச்சு இந்த நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். ஜனாதிபதி செயலகம் இடர் 23☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புலிகள் மீதான தடையை இந்தியாவிலும் நீக்க வேண்டும்

## பா.ம.க நிறுவுநர் ராமதாஸ்

(சென்னை)

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது கடந்த 26 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள தடையை நீக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பா.ம.க நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடை செல்லாது என்று ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதன்மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 26 நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது செயல்படுத்தப்பட்டு வந்த தடை நீக்கப்படும். இது வரவேற்கத்தக்கது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டிருப்பது கடந்த 3 ஆண்டுகளில் இது மூன்றாவது முறையாகும். கடந்த 2005ம் ஆண்டில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்ட தடையை லக்சம்பர்க்கில் உள்ள ஐரோப்பிய நீதிமன்றம் கடந்த 2014 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நீக்கியது.

அதை எதிர்த்து ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் செய்யப்பட்ட மேல்முறையீட்டை விசாரித்த நீதிமன்றம் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் அளித்த தீர்ப்பில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடை நீக்கப்பட்டது செல்லும் என்று தீர்ப்பளித்தது. அதற்கு எதிராக செய்யப்பட்ட மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டு விடுதலைப்புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கம் அல்ல. அது விடுதலைக்காக போராடும் இயக்கம் என்று இப்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட நாடுகள் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடை விதித்திருந்தன. இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து இங்கிலாந்து தவிர ஐரோப்பிய ஒன்றியத்தில் அடங்கியுள்ள 26 நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்படும். தொடர்ந்து கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் தடை உடைக்கப்பட வாய்ப்புகள் உள்ளன. இலங்கைத் தமிழர்களுக்கு தாயகத்தை அமைப்பதற்காக உலகம் முழுவதும் உள்ள தமிழர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்ல இந்தத் தீர்ப்பு பெரிதும் உதவியாக இருக்கும்.

உலகில் எந்த நாடும் விடுதலைப் புலிகளால் நேரடியாக பாதிக்கப்பட்டு அந்த இயக்கத்தை தடை செய்யவில்லை. மாறாக, விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு திட்டமிட்டு செய்த பரப்புரையால் தான் தடை விதிக்கப்பட்டது. அதுமட்டுமின்றி, இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடை விதிக்கப்பட்டிருந்ததால் அதை பின்பற்றி அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளும் தடைகளை விதித்தன.

எனவே, இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத் தின் மீது கடந்த 26 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ள தடையை நீக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் ராமதாஸ். (மு-11)


## விற்பனையாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் எமது புடைவை கடைக்கு அனுபவம் உள்ள ஆண்/ பெண் பணியாள் தேவ்வ. நேரில் வரவும்.

**சிவகணேசன் ரெக்ஸ்**
41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(9951)

## பெண் அலுவலக உத்தியோகத்தர் தேவை

வடமராட்சிப் பகுதியில் இயங்கும் எமது நிறுவனத்துக்கு O/L, A/L படித்த கணனி அறிவுள்ள பெண் அலுவலக உத்தியோகத்தர் தேவை.
வயதெல்லை : 21 - 31
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
viexco1234@gmail.com
தொடர்புகளுக்கு : 071157 3116
(9944)

## கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க முக்கிய கலந்துரையாடல்

கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் முக்கிய கலந்துரையாடல் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை 28.07.2017 பிற்பகல் 5 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே இவ் ஒன்றுகூடல் நிகழ்வுக்கு உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை முதல்வர் அவர்கள் கேட்டுக் கொள்கின்றார். இவ் ஒன்றுகூடலில் பல்வேறு செயல் திட்டங்கள் பற்றி கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலைச் சமூகம்
(9949) கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்



குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க் வளமுடன்

யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை பெருமையுடன் வழாங்கும்
சாதாரண மனிதனை முழுமனிதனாக்கும் மனவளக்கலையின் ஆரம்ப
ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள்

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- காயகல்ப பயிற்சி
- எளியமுறை தியானப் பயிற்சிகள்
- அகத்தாய்வு பயிற்சிகள்

இடம்: யாழ்ப்பாணம், அறிவுத்திருக்கோவில்
காலம்: 29.07.2017 (ஞாயிறு) மாலை 05.00 மணி

அகத்தாய்வு-03
29.07.2017-30.07.2017காலை 09.00 மணிக்கு நடைபெறும்.
மீள்பயிற்சி அன்பர்களும்கலந்து கொள்ளலாம்.

வழங்குபவர்
தமிழகத்திலிருந்து வருகைதந்திருக்கும் மனவளக்கலை பேராசிரியர்
அருள்நிதி இந்திரா சண்முகசுந்தரம் அவர்கள்.

வேதாத்திரி மகரிஷி ஆன்மீக மற்றும் உள்ளுணர்வுக் கல்வி
2017,2018 கல்வியாண்டுக்கான வேதாத்திரி மகரிஷியின் ஆன்மீக மற்றும் உள்ளுணர்வுக் கல்வி நிலையத்தினாலும் தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் மூலமாகவும் தொலைதூரக் கல்வி (DISTANCE EDUCATION) பட்டயம் (DIPLOMA) சிறப்புபட்டயம் (ADVANCE DIPLOMA) சான்றிதழ்கள் பெறும் வழியிலான ஆன்மீக மற்றும் உள்ளுணர்வுக் கல்வி ஆகஸ்ட் மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.
விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்

0212227772, 0714403268, 0771235646
வாழ்க வளமுடன்
யாழ்.அறிவுத்திருக்கோவில்
மனவளக்கலைமன்ற அறக்கட்டளை
இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-9185)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## தவத்திரு யோகர் சுவாமிகள் நற்சிந்தனைப் பாடல்கள் பயிற்சி வகுப்புகள்

30.07.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று பயிற்சி வகுப்பு ஆரம்பமாகின்றது.

- **இடம் : யோகர் சுவாமிகள் மண்டபம்**
  **யா/ கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்**
- **காலம் : ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும்**
- **நேரம் : முற்பகல் 9.00 - 11.00**

ஆர்வமுடையவர்கள் அனைவரையும் கலந்து பயனடையுமாறு அன்போடு அழைக்கின்றோம்

அதிபர்
யா/ கொழும்புத்துறை இந்து ம.வி
தொ.பே: 021 222 6230
(9941)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.சிவபாதம் நந்தகுமார்

மீண்டும் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளராக இன்று (28.07.2017) பதவி ஏற்கும் உயர்திரு. சிவபாதம் நந்தகுமார் அவர்களை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

கல்விக்கு தொண்டாற்றி பரிவுடனே
உதவிடும் காருண்யனே
நீண்டகாலம் உம் சேவை
இப்பாரினிலே நிலைக்கட்டும்
சகல சௌபாக்கியங்களும் பெற்று
பல்லாண்டு காலம் வாழி மனதார
வாழ்த்துகின்றோம்.

- வடமராட்சி கல்விச் சமூகம்
(சி-9188)


## மரண அறிவித்தல்



### பழனிநாதன் பிரபாகரன் (பிரபா)

சுழிபுரம் மேற்கு சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், கற்சிலையடி, கற்சிலைமடுவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட பழனிநாதன் பிரபாகரன் (பிரபா) (பிரதேச சபை ஊழியர் -புதுக்குடியிருப்பு) அவர்கள் நேற்று (27.07.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பழனிநாதன் மற்றும் தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், வேதவனம் - விமலாம்பிகை தம்பதியினரின் அன்பு மருமகனும், கஜேந்தினி (குயிலா) அவர்களின் அன்புக் கணவரும், சுபிஷா (மாணவி -கற்சிலைமடு அ.த.க பாடசாலை), துபிக்ஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சறோஜினிதேவி (சறோ - வவுனியா), சிறிவள்ளி (சில்லாலை), சுழிபுரத்தைச் சேர்ந்த சாந்தினி, தேவி (நீதி), சிவநாயகம் (கட்டார்), செல்வதி மற்றும் வெள்ளாங்குளம் மன்னாரைச் சேர்ந்த கருணாகரன் (கருணா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகாலிங்கம் (வவுனியா), ஜெயசீலன் (சில்லாலை), சுழிபுரத்தைச் சேர்ந்த மணியழகன், காலஞ்சென்ற ஜெகதீஸ் மற்றும் பாஸ்கரன், கமலாதேவி (வெள்ளாங்குளம், மன்னார்), தயாழினி மற்றும் விமலேந்திரா, நிருபரன், நிவேதிகன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2017) வெள்ளிக்கிழமை கற்சிலையடி, கற்சிலைமடுவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் பேராறு பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



பண்டாரவன்னியன் சிலையடி,
கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்.
(சி-9187)

தகவல் : குடும்பத்தினர்
077 678 7338

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க்கந்தன் மஹோற்சவம் இன்று ஆரம்பம் கொடிச்சீலை நேற்றுக்காலை எடுத்துவரப்பட்டது




(படங்கள்:- உ.சாளின், பொ.சோபிகா)

(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தன் ஆலயப் பெருந் திருவிழா இன்று (28.07.2017) காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இதனை முன்னிட்டு பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை நேற்றுக் காலை ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டு ஆலயத்தின் பிரதம குருக்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

நல்லூர்க்கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த திருவிழா முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறவுள்ளன.

நல்லூர்க் கந்தனின் கொடிச்சீலை வருடா வருடம் செங்குந்தர் பரம்பரையினரால் வழங்கப்பட்டு வருவது வழக்கமாகும்.

வழமைபோல் இம்முறையும் கல்வியங்காட்டு பகுதியிலுள்ள செங்குந்தர் பரம்பரையைச் சேர்ந்தவர்களின் வீட்டிலிருந்து காலை 8 மணிக்கு நடைபெற்ற விசேட வழிபாடுகளைத் தொடர்ந்து எடுத்து வரப்பட்ட கொடிச்சீலை கல்வியங்காடு வேல் மடம் முருகன் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டு சிறிய தேரில் வைத்து நல்லூர் ஆலயத்திற்கு எடுத்து வரப்பட்டது.

முற்பகல் 10 மணியளவில் நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கொடிச்சீலை ஒப்படைக்கப்பட்டது. (இ-4-9-102)

# கடத்தல் மற்றும் காணாமல் போதலில் இரட்டை நிலைப்பாடு இருக்கமுடியாது

## அமைச்சர் மனோ இடித்துரைப்பு



(கொழும்பு)

கடத்தல் மற்றும் காணாமல்போதலில் வடக்கிற்கும், தெற்கிற்கும் இரட்டை நிலைப்பாடுகள் இருக்க முடியாது என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். அத்துடன், இவ்வாறான சம்பவங்கள் தெற்கில் நடந்தால் அரச பயங்கரவாதம் என்றும், வடக்கில் நடந்தால் அரச நிர்வாகம் என்றும் கூறுவது எந்த விதத்தில் நியாயம் எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடத்தல் மற்றும் காணாமல் போதல் என்பவற்றில் இரட்டை நிலைப்பாடுகள் இருக்க முடியாது. இங்கு ஒரு சட்டம், அங்கு ஒரு சட்டம் இருக்க முடியாது. காணாமல் ஆக்கல் என்ற குற்றத்தை நாம் எல்லோரும் ஒழிக்க வேண்டும். அதன் ஒரு அங்கமாகவே இந்த காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அவலம் வடக்கில் மட்டுமல்ல, தெற்கிலும் 1971, 1989 ஆண்டுகளில் இடம்பெற்றது. 1971 இல் 10,000 பேர் காணாமல்போனதாக சொல்லப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அன்று ஒரு மனித உரிமை போராளியாக இருந்து 60,000 பேர் காணாமல் போனதாக சொன்னார். அந்த வகையில், தெற்கில் காணாமல் போனவர்கள் பெரும்பாலும் சிங்களவர்கள்.

இன்று கொழும்பில் இராணுவத்தினர், பெற்றோல் விநியோக நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இராணுவம் என்பது; ஒரு தங்கக் கத்தி என பெருமை பேசலாம். ஆனால், கத்தி தங்கமாக இருந்தாலும், குத்தினால் இரத்தம் வரும்எனவே இன்று சேவைகளில் ஈடுபடும் இராணுவத்தினர் நாளை ஆட்களை கடத்தலாம். இது நேற்றும் நடந்தது. இன்றும் நடக்கிறது. நாளையும் நடக்கலாம்.

எனவே காணாமல்போனோர் அலுவலகம் அமைப்பது, தமிழருக்கு மட்டுமல்ல, முழு நாட்டுக்கும் பிரயோசனமானது என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# இந்திய ஜனாதிபதியுடன் நெருங்கிப் பணியாற்ற நான் விரும்புகின்றேன்

## ஜனாதிபதி மைத்திரி வாழ்த்துச் செய்தி

(கொழும்பு)

இரு நாடுகளுக்கும் இடையில் இருந்துவரும் பலமான கூட்டுறவு மற்றும் இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கு இந்தியாவின் புதிய ஜனாதிபதியுடன் நெருங்கிப் பணியாற்றத் தான் விரும்புவதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் புதிய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த்துக்கு, அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். "இந்தியாவின் புதிய ஜனாதிபதியுடைய தொலைநோக்கும் முதிர்ச்சியும், நாட்டிலுள்ள அனைத்துச் சமூகங்களையும் தழுவிய நல்லிணக்கம் மற்றும் ஐக்கியத்தை அடைவதற்குப் பாரிய பங்களிப்புச் செய்யும்"

"மேலும், உங்களது அறிவும் ஆட்சித் திறமையும் சுபீட்சத்தையும் அபிவிருத்தியையும் அடைவதில் நாட்டுக் கும் மக்களுக்கும் பாரிய பங்களிப்புச் செய்யும். இந்த உயர்ந்த ஸ்தானத்தில் உங்களது பதவியானது, உங்களது நாடு அதன் நோக்கங்களை அடைவதற்கான முயற்சியில் ஓர் உந்துசக்தியாக இருக்கும் என்பதில் சந்தேக மில்லை".

இரு நாடுகளுக்கும் இடையில் இருந்துவரும் பலமான கூட்டுறவு மற்றும் இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கு இந்தியாவின் புதிய ஜனாதிபதியுடன் நெருங்கிப் பணியாற்றத் தான் விரும்புவதாகவும் ஜனாதிபதி மைத்திரி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# புலிகள் மீதான தடைநீக்கம்! நாமல் எம்.பி கடும்கண்டனம்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கப் பட்டியலிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் அதியுயர் நீதிமன்றம் நீக்கியமையை, ஒன்றிணைந்த எதிரணியின் எம்.பியான நாமல் ராஜபக்ஷ, கடுமையாக கண்டித்துள்ளார்.

தன்னுடைய டுவிட்டரில் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ள அவர், பயங்கரவாத செயற்பாடுகளுக்கு அவர்கள், நேரடியாக நிதியுதவியளிப்பர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# திருமண வீடு மரண வீடானது மூவர் அடுத்தடுத்து கிணற்றில் வீழ்ந்து பலி!

(கொழும்பு)

கிரிவுல்ல - அதுருவெல பிரதேசத்தில் கிணற்றில் வீழ்ந்து மூவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பிரதேசத்தில் உள்ள வரவேற்பு மண்டபத்தில் திருமண நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த திருமண நிகழ்விற்கு வந்திருந்த ஒருவர், வரவேற்பு மண்டப வளாகத்தில் பலகைகளினால் மூடப்பட்டிருந்த கிணற்றில் வீழ்ந்துள்ளார்.

இதனையடுத்து, அவரை காப்பாற்றுவதற்காக இருவர் முற்பட்டுள்ள நிலையில், அவர்களும் கிணற்றில் வீழ்ந்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த நிகழ்வுக்கு வந்திருந்த ஏனைய தரப்பினர் கிணற்றில் வீழ்ந்த மூவரையும் கிணற்றில் இருந்து மேலே கொண்டுவந்து வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். எனினும், அவர்கள் மூவரும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்துள்ளவர்கள் 38, 39 மற்றும் 41 வயதான அதுருவெல மற்றும் மாரவில பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

சடலங்கள் தம்பதெனிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், பிரேத பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன.

சம்பவம் தொடர்பில் கிரிவுல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலி டெஸ்ட்; இலங்கை திணறல்



இந்தியாவிற்கு எதிராக காலியில் நடைபெற்று வரும் முதல் டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடி வரும் இலங்கை அணி, நேற்றைய 2ஆவது நாள் ஆட்ட நேர நிறைவில் 5 விக்கெட்டுக்களை 154 ஓட்டங்களை எடுத்து தடுமாறி வருகிறது.

இந்திய - இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்ட் காலியில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி, முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. தவான் (190), புஜாரா (144*) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இந்தியா 3 விக்கெட்டுக் கள் இழப்பிற்கு 399 ஓட்டங்களை எடுத்திருந்தது.

புஜாரா 144, ரஹானே 39 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

நேற்று 2ஆவது நாள் ஆட்டம் நடந்தது. ஆட்டம் தொடங்கியதும் புஜாரா 150 ஓட்டங்களைக் கடந்தார். தொடர்ந்து விளையாடிய அவர் 153 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். மறுமுனையில் விளையாடிய ரஹானே 57 ஓட்டங்கள் எடுத்த நிலையில் குமார பந்தில் ஆட்டம் இழந்தார்.

அடுத்து வந்த அஸ்வின் அதிரடியாக விளையாடி 47 ஓட்டங்களும் விக்கெட் காப்பாளர் சஹா 16 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்க, இந்தியா 2ஆவது நாள் மதிய உணவு இடைவேளையின் போது 7 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 503 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

மதிய உணவு இடைவேளை முடிந்து மீண்டும் ஆட்டம் தொடங்கிய போது, ஜடேஜா 15 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். 8ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக ஹர்திக் பாண்டியா உடன் மொகமட் ஷமி ஜோடி சேர்ந்தார். இருவரும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள்.

ஷமி 30 பந்துகளில் 3 சிக்ஸருடன் 30 ஓட்டங்கள் சேர்த்தார். மறுமுனையில் ஹர்திக் பாண்டியா சிறப்பாக விளையாடி அறிமுக போட்டியிலேயே அரைசதம் அடித்தார். இந்த ஜோடி 9ஆவது விக்கெட்டுக்கு 62 ஓட்டங்கள் குவித்தது.

இந்திய அணி 600 ஓட்டங்கள் எடுத்திருக்கும் போது கடைசி விக்கெட்டாக ஹர்திக் பாண்டியா ஆட்டமிழந்தார். அத்துடன் இந்திய அணியின் முதல் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

உமேஷ் யாதவ் 10 பந்துகளில் தலா ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் 11 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் வேகப்பந்து வீச்சாளர்கள் பிரதீப் 132 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும் குமார 131 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

பின்னர் இலங்கை அணி முதல் இன்னிங்ஸை தொடங்கியது. தொடக்க வீரர்களாக கருணாரத்னவும் உபுல் தரங்கவும் களம் இறங்கினார்கள்.

கருணாரத்ன நிதானமாக விளையாட உபுல் தரங்க அதிரடியாக விளையாடினார். கருணாரத்ன 2 ஓட்டங்கள் எடுத்த நிலையில் உமேஷ் யாதவ் பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து குணதிலக களம் இறங்கினார். இவரை 16 ஓட்டங்களிலும் அடுத்து வந்த குசல் மெண்டிஸை டக்அவுட்டிலும் வெளியேற்றினார் மொகமட் ஷமி.



உபுல் தரங்க 44 பந்துகளில் 10 பவுண்டரிகளுடன் அரைசதம் அடித்தார். தொடர்ந்து விளையாடிய தரங்க 64 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரன்அவுட் முறையில் ஆட்டம் இழந்தார்.

அடுத்த வந்த விக்கெட் காப்பாளர் டிக்வெல 8 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அஸ்வின் பந்தில் வெளியேறினார்.

6ஆவது விக்கெட்டுக்கு மத்யூஸ் உடன் பெரேரா ஜோடி சேர்ந்தார். மத்யூஸ் சிறப்பாக விளையாடி அரைசதம் அடித்தார். அத்துடன் 2ஆவது நாள் ஆட்டம் முடியும் வரை மேலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டார்.

இலங்கை அணி நேற்றைய 2ஆவது நாள் ஆட்ட நேர நிறைவில் 5 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 154 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மத்யூஸ் 54, பெரேரா 6 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

தற்போது வரை இந்தியா 446 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது. இன்றைய 3ஆவது நாள் ஆட்டத்தில் மத்யூஸ் விக்கெட்டை விரைவாக வீழ்த்தினால் இந்தியா 300 ஓட்டங்களுக்கு மேல் முன்னிலை வகிக்க வாய்ப்புள்ளது.

### சர்வதேச சம்பியன்ஸ் கிண்ணம்

## ரியல் மட்ரிட் அணியை பந்தாடியது மன்செஸ்டர் சிட்டி

சர்வதேச சம்பியன்ஸ் கிண்ணத்துக்கான கால்பந்து தொடரில் ரியல் மட்ரிட் அணியை 4-1 என வீழ்த்தியது மான்செஸ்டர் சிட்டி.

கால்பந்து அணிகளுக்கு இடையிலான முன்னணி லீக் தொடர்கள் இன்னும் ஆரம்பமாகவில்லை. இந்த தொடர்கள் நடைபெறுவதற்கு முன்பாக தற்போது அணிகளுக்கு இடையிலான சர்வதேச சம்பியன்ஸ் கிண்ண தொடர் நடைபெற்று வருகிறது.

நட்பு ரீதியான இந்த தொடரில் நேற்று அமெரிக்காவின் லொஸ் ஏஞ்செல்ஸ் நகரில் நடைபெற்ற போட்டியில் ஸ்பெயின் நாட்டின் முன்னணி கால்பந்து கழக அணியான ரியல் மட்ரிட், இங்கிலீஷ் பிரிமீயர் லீக் அணியான மான்செஸ்டர் சிட்டி அணியை எதிர் கொண்டது.

இரு அணி வீரர்களும் சிறப்பான ஆடிய போதிலும் முதல் பாதி நேரத்தில் இரண்டு அணிகளாலும் கோல் அடிக்க முடியவில்லை.

ஆனால் 2ஆவது பாதி நேரத்தில் மாஸ்செஸ்டர் சிட்டி அணி வீரர்கள் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி கோல் மழை பொழிந்தனர்.

ஆட்டத்தின் 52ஆவது நிமிடத்தில் ஒஸ்டாமெண்டி, 59ஆவது நிமிடத்தில் ஸ்டெர்லிங் 59, 67 நிமிடத்தில் ஸ்டோன்ஸ், 81ஆவது நிமிடத்தில் பிராஹிம் டயஸ் அடுத்தடுத்து கோல் அடித்தனர்.




ஆட்டத்தின் கடைசி நிமிடமான 90ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணியின் ஒஸ்கர் ஆறுதல் கோல் அடித்தார். இதனால் மான்செஸ்டர் சிட்டி 4-1 என ரியல் மட்ரிட் அணியை வீழ்த்தி அசத்தல் வெற்றியை ருசித்துள்ளது.

மற்றொரு போட்டியில் பார்சிலோனா 1-0 என மான்செஸ்டர் யுனைட்டட் அணியையும் யுவான்டர் 3-2 என பிஎஸ்ஜி அணியையும் வென்றன.

## நீரைச் சிக்கனமாக பயன்படுத்த சென்சர் குழாய் அறிமுகம்

### வ.மா.க.திணைக்களத்தில் இன்று நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் தற்போது நிலவும் கடும் வரட்சி காலநிலையில் குழாய் நீரை சிக்கனமாக உபயோகிக்கும் வகையில் மொரட்டுவ பல்கலைக்கழக மாணவர்களால் அமைக்கப்பட்ட சென்சர் குழாய் மாதிரி வடிவமைப்பு இன்றைய தினம் காலை 9 மணிக்கு மருதனார்மடத்தில் அமைந்துள்ள வடமாகாண கல்வித் திணைக்களத்தில் அறிமுகப்படுத்தப் படவுள்ளது.

வடமாகாண கல்வித் திணைக்களம் மற்றும் யுனிசெப் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்படும் இந்த சென்சர் குழாய் வடிவமைப்பு மாதிரியை யாழ்ப்பாணத்தை சேர்ந்த மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் கற்கும் மாணவர்களான திருச்செல்வம் ஜெனார்த்தன் மற்றும் யோகநாதன் ரகுநாத் ஆகியோர் வடிவமைத்துள்ளனர்.

இச் செயற்பாடானது சிறந்த முறையிலான நீர்முகாமைத்து செயற்பாடாகவும் யௌவன பருவ இளைஞர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரும் ஒரு சந்தர்ப்பமாகவும் நோக்கப்படுகிறது.

மேலும் வட மாகாண கல்வித்திணைக்களமானது இச் சென்சர் குழாய்களை வலயக் கல்விப் பணிமனைகளிலும் பாடசாலைகளிலும் பரீட்சார்த்தமாக விரிவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளது. (ந-9)

## குக் அபாரம்; இங்கிலாந்து ஸ்திரம்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது டெஸ்டில் அலெஸ்டர் குக் அரைசதம் அடித்து கைகொடுக்க இங்கிலாந்து ஓரளவு வலுவான நிலையை அடைந்தது.

இங்கிலாந்து சென்றுள்ள தென்னாபிரிக்க அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டிகளின் முடிவில் தொடர் 1:1 என சமநிலையில் உள்ளது.

இந்நிலையில் மூன்றாவது டெஸ்ட் லண்டனில் உள்ள ஓவல் மைதானத்தில் நேற்று ஆரம்பமாகியது. நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணித் தலைவர் ஜே ரூட் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இங்கிலாந்து அணிக்கு ஜென்னிங்ஸ் (0) மோசமான ஆரம்பம் கொடுத்தார். இங்கிலாந்து ஒரு விக்கெட்டுக்கு 62 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழையால் போட்டி சிறிது நேரம் தடைப்பட்டது. ரொம் வெஸ்ட்லே (25), அணித் தலைவர் ஜே ரூட் (29) பெரிய அளவில் சோபிக்கவில்லை. அதன்பின் இங்கிலாந்து, 3 விக்கெட்டுக்கு 114 ஓட்டங்



கள் எடுத்திருந்த போது மீண்டும் மழையால் போட்டி நிறுத்தி வைக்கப்பட்டது.

பொறுப்பாக ஆடிய மற்றொரு ஆரம்ப வீரர் அலெஸ்டர் குக் அரைசதம் கடந்தார். ரபாடா 'வேகத்தில்' டேவிட் மலான் (4) போல்டானார். இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுக்கு 149 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, மழையால் போட்டி மீண்டும் தடைப் பட்டது.

முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுக்கு 171 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழையால் முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. குக் (82), பென் ஸ்ரோக்ஸ் (21) ஆட்டமிழக்காமல் இருந்தனர். தென்னாபிரிக்க அணி சார்பில் பிலாண்டர 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த

# மெய்ப்பாதுகாவலர் சரத் ஹேமச்சந்திரவின் மனைவிக்கு பதவியுயர்வுடன் மீள பொலிஸ் பதவி



நல்லூர் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் உயிரிழந்த உப பொலிஸ் பரிசோதகர் ஜீ.எம். சரத் ஹேமச்சந்திரவின் மனைவிக்கு பொலிஸ் உப பரிசோதகர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவினால் இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

சரத் ஹேமச்சந்திரவின் மனைவி, கடந்த 9 ஆண்டுகளுக்கு முன்னதாக பொலிஸ் சேவையிலிருந்து விலகியிருந்தார். தற்போது அவரது கணவன் உயிரிழந்துள்ள நிலையில், அவருக்கு பதவி உயர்வுடன் வீட்டுக்கு அருகாமையில் உள்ள பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த சரத் ஹேமச்சந்திரவுக்கு கௌரவம் அளிக்கும் நோக்கில் இவ்வாறு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலராக, சரத் ஹேமச்சந்திர கடந்த 15 வருட காலமாக பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை-பீரிஸ்


மாகாணசபைத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கூட்டு எதிர்க்கட்சியினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவிற்கு, கூட்டு எதிர்க்கட்சி எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சட்டத்தரணி ஊடாக இது குறித்து அறிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் மூன்று மாகாணசபைகளின் பதவிக் காலம் பூர்த்தியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த மாகாணசபைகளுக்கான தேர்தல்களை சட்டத் திருத்தம் மேற்கொண்டு அனைத்து மாகாணசபைகளுக்கான தேர்தல்களையும் ஒன்றாக நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. எனினும் உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கூட்டு எதிர்க்கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது. (இ-7)

# மைத்திரியுடன் பேசத் தயார் மகிந்த கேள்விக்குப் பதில்



(கொழும்பு)

நாட்டின் நலனுக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட எவருடனும் பேசத் தான் தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட எம்.பியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

டுவிட்டர்கணக்கின் ஊடாக, கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார்.

இதன்போது, நாட்டில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேசத் தயாரா? எனக் கேட்டபோது, தான் யாருடனும் பேசத் தயார் என்று கூறினார்.

இலங்கை உள்நாட்டு விடயங்களில் வெளிநாடுகளின் தலையீடு உள்ளதா? எனக் கேட்டபோது, வெளித்தரப்பினரின் நிகழ்ச்சி நிரல்களை அரசாங்கம் நடை முறைப்படுத்தும்போது வெளிநாட்டுத் தலையீட்டுக்கு அவசியமில்லை என அவர் கூறி னார்.

மகிந்த அரசாங்கத்தில் யாவரும் ஊழல் செய்யாதவர்களாக இருந்தனரா? என்று கேட்ட போது, அரசியல் நோக்கமின்றி யாரும் விசாரணை செய்யலாம் என்றார்.

"இந்த அரசாங்கத்துக்கு எதிராக கடுமை யான ஊழல் குற்றச்சாட்டுகளிலும் இதேயளவு விசனத்தைக் கொண்டிருப்பீர்கள் என நம்புகின்றேன்" என்றும் அவர் பதிலளித்தார்.

கேள்வி:- தற்போது யாழ்ப்பாண துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் உணர்த்தும் விடயம்?

பதில்:- குறித்த சம்பவம், விசாரணை செய்யப்பட வேண்டும். இது, பலவீனமடைந்து வரும் சட்டமும் ஒழுங்கு நிலையைக் காட்டுகிறது.

கேள்வி:- நாட்டின் நீதி நிலைமை பற்றிய உங்களது கருத்து என்ன?

பதில்:- நீதித்துறையின் சுயாதீனத்தில், இன்னமும் நம்பிக்கை கொண்டுள்ளோம். ஆனால், நீதித்துறையில் தலையீடுகளை மேற்கொள்ள முயற்சிகள் இடம் பெறுகின்றன என்றும் பதிலளித்தார். (இ-7)

# 21 கிலோ கேரளக் கஞ்சா சக்கோட்டையில் நேற்று மீட்பு



அல்வாய் வடக்கு சக்கோட்டைப் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 21.950g கேரளக் கஞ்சாவினை மீட்டதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டும் உள்ளதாக பருத்தித்துறை மதுவரித்திணைக்கள பொறுப்பதிகாரி சமிந்த சிறிமான் தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை இந்தியாவில் இருந்து கடல்மார்க்கமாக கஞ்சா கடத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினையடுத்து மதுவரித்திணைக்கள உதவி ஆணையாளர் என்.சோதிநாதன், மதுவரித்திணைக்கள அத்தியட்சகர் மதன் மோகன் ஆகியோரின் வழிநடத்தலில் பருத்தித்துறை மதுவரித்திணைக்களத்தினர் கடற்படையினரின் உதவியுடன் அப்பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அப்போது சக்கோட்டையில் உள்ள வீடு ஒன்றின் பின்புறத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 21.950g கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதுடன் அவ் வீட்டின் உரிமையாளரான 52 வயதுடைய நபரையும் கைது செய்ததாக மதுவரித்திணைக்களப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (இ-60)

# தப்பிச் செல்ல முற்பட்ட கைதி மீது துப்பாக்கிச்சூடு

அத்தனகல்ல நீதவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து தப்பிச் செல்ல முற்பட்ட சந்தேகநபர் ஒருவர் சிறைச்சாலை அதிகாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

வழக்கு விசாரணைகளுக்காக நேற்று குறித்த சந்தேகநபர், நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

இதன்போது, தப்பிச் செல்ல முற்பட்ட அவர் மீது, பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக, சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

மேலும், காயமடைந்த குறித்த சந்தேகநபர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# இராசி பலன்

28.07.2017
(ஆடி 12, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
பஞ்சமி முற்பகல் 10.44 மணிவரை
உத்தரம் முற்பகல் 9.02 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
நல்லூர்க் கந்தன் கொடியேற்றம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் சதயம் | | சூரி ராகு செவ் |
| | | | புத |
| | சனி | | குரு சந் |

**மேடம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நல்லவர்களின் அறிவுரையும், ஆதரவும் கிடைக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**இடபம்:** வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைபேசி வழியில் பொன்னான தகவலொன்று வந்து சேரலாம்.

**கடகம்:** பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** இறை வழிபாட்டால் இன்பங்கள் கூடும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பேச்சில் இனிமை பிறக்கும், சான்றோர் சந்திப்புண்டு.

**கன்னி:** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, சிந்தனை மிகுதியான நாள்.

**துலாம்:** புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழும் நாள், ஒருசில வேலைகளுக்காக சற்று அலையும் சூழ்நிலை ஏற்படலாம், சஞ்சலங்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்:** வியக்கும் தகவல்கள் வந்து சேரும் நாள், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, கௌரவமான நாள், போசன நன்மையுண்டு.

**தனுசு:** தொழில் ரீதியாக புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** ஏட்டிக்கு போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** துயரங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, எடுத்த காரியத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**மீனம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வாய்ப்புண்டு, குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும் நாள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சபையின் சிபார்சுகளை புறந்தள்ளும் பொதுச்சேவை ஆணைக்குழு

## கவனம் செலுத்துவதாக முதலமைச்சர் தெரிவிப்பு


(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் சிபார்சுகளை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு புறந்தள்ளுவது தொடர்பில் கவனம் செலுத்துவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண சபையின் 100 ஆவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது.

இதன் போது மாகாண சபையின் முறைப்பாட்டு குழுவின் விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. அதில் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவடக்குமாகாண சபையின் பரிந்துரைகளை தட்டிக்கழிப்பதாக சபைக்கு அறியத் தரப்பட்டுள்ளது. மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவடக்குமாகாண சபையின் பரிந்துரைகளை உதாசீனம் செய்வது தொடர்பில் மனவருத்தத்தை தெரிவித்தஅவைத்தலைவர்சிவஞானம்

அரச உத்தியோகத்தர்களின் பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள், இடமாற்றங்கள் தொடர்பில் பரிசீலிப்பதற்கு வடக்கு மாகாண சபையின் முறைப்பாட்டு குழுவிற்கு அதிகாரம் உள்ளது. இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு வடக்கு மாகாண சபைக்கும் போதிய அதிகாரம் உண்டு. இந்த சபை எல்லாவற்றுக்கும் மேலானது. ஆகவே யாரும் இந்த சபையை மீறி செயற்பட முடியாது.

எனவே வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு வடக்கு மாகாண சபையின் சிபார்சுகளை உதாசீனம் செய்வது தொடர்பில் சபை தனது மனவருத்தத்தை தெரிவித்து கொள்கின்றது என அவைத்தலைவர் சிவஞானம் தெரிவித்தார். இதன் பின்னர் கருத்து தெரிவித்த முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இந்த விடயம் தொடர்பில் உரியவர்களுடன் பேசி எனது முடிவை சபையில் அறிவிப்பேன் என்றார். (இ-4)





கைதடி நபீல்ட் பாடசாலையின் பழையமாணவர் சங்கப்பொன்விழா அண்மையில் நபீல்ட் பாடசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டதுடன், பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் என பல நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். இந் நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள், விருந்தினர்கள் உரைகள் என்பன இடம்பெற்றதுடன், மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## 'பணுவில் 03' மலரிற்கான ஆக்கங்கள் கோரலும் 'கலைவாரிதி' விருதுக்கான சிபார்சுகளை ஏற்றலும்

வலி.மேற்கு பிரதேச செயலகமும் வலி.மேற்கு பிரதேச கலாசாரப்பேரவையும் இணைந்து 2015 ஆம் ஆண்டு முதல் "பணுவில்" பிரதேச மலரினை வெளியிட்டு வருவது வழமையாகும். அந்த வகையில்இவ்வாண்டும்அதன் மூன்றாவது வெளியீடாக "பணுவில்-03" இனை கலாசார விழாவின் போது வெளியீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே பிரதேசத்தின் கல்விப்புலம் சார்ந்தோர்கள், பிரதேச எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் மற்றும் துறை சார் ஆர்வலர்களிடமிருந்து மானிடவியல், தொல்லியல், பிரதேச தொன்மங்கள். நாட்டுப்புறவியல், வழக்காறுகள், வரலாறு, சமூகவியல், கலை, இலக்கியம், ஆன்மீகம், ஆவணப்படுத்தல், பண்பாடு பழக்கவழக்கங்கள், பிரதேசத்தின் அபிவிருத்தி, சுற்றுலா மையங்கள் மற்றும் பொது விடயங்கள் சார்ந்த துறை சார் தரமான ஆக்கங்கள், கட்டுரை, விமர்சனம், சிறு கதைகள், கவிதைகள் மற்றும் பத்தி எழுத்துக்களாக எதிர்பார்க்கப்படுகின்றன.

எனவே துறைசார் ஆர்வலர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் 30.08.2017 ஆம் திகதிக்கு முன்னர் "தலைவர், வலி.மேற்கு பிரதேச கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், சங்கானை" எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு வலி. மேற்கு பிரதேச செயலர் ச. பிறேமினி கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் இவ்வாண்டு இடம் பெறவுள்ள பிரதேச கலாசார விழாவில் கலைவாரிதி விருது வழங்குவதற்கு தகுதியானவர்கள் பற்றிய சிபார்சுப் பிரேரணைகளையும் மேற்குறித்த திகதிக்குள் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் சமர்ப்பிக்க முடியும் எனவும் அறிவித்துள்ளார். (இ-7)

## கலந்துரையாடல்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 22.08.2017 ஆரம்பமாகவுள்ளது. இம் மஹோற்சவத்திற்கான முதலாம் கட்ட ஏற்பாட்டுக் கூட்டம் 04.08.2017 வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் தலைமையில் நடை பெறவுள்ளது.

இக்கூட்டம் தொடர்பாக எம்மால் அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டவர்கள் தவறாது சமுகமளித்து மஹோற்சவம் சிறப்புற நடைபெற தங்கள் ஆலோசனைகளை வழங்குமாறு பிரதேச செயலாளர் ஆர்.ரி.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (இ

## ரூ. 30 லட்சம் செலவில் புதிய கட்டடம் அமைப்பு



(தும்பளை)

தொண்டைமானாறு வளர்மதி சனசமூக நிலையத்திற்கு 30 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தை தொண்டைமானாறு லண்டன் நற்பணி மன்றத் தலைவர் எஸ். ஜெயக்குமார் திறந்து வைத்த பின் விருந்தினர்கள் முன்பள்ளியை பார்வையிடுவதனைப் படத்தில் காணலாம். (இ-19)




## பெற்றோல் பவுசர் வந்தது




வடமராட்சிக்கான முதலாவது பெற்றோல் பவுசர் நேற்று வியாழக்கிழமை முற்பகல் நெல்லியடி எரிபொருள் நிலையத்திற்கு வந்து சேர்ந்தது.

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தம் காரணமாக பெற்றோலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது.

இதனையடுத்து முப்படையினரின் உதவி பெறப்பட்டு பெற்றோல் பவுசர்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட நிலையில் நெல்லியடி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு நேற்று முற்பகல் பெற்றோல் பவுசர் வந்து சேர்ந்தது. (இ-60)

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் "அரும்பு" கல்விச் செயற்றிட்டத்தின்கீழ் நாளை சனிக்கிழமை யாழின் பிரபல தரம்-5 புலமைப்பரிசில் ஆசிரியர் கலாமோகன் பங்குகொள்ளும் முதலாவது இலவச பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இளவாலைக் கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இதில் இளவாலை கிராமப் பாடசாலை மாணவர்கள் உட்பட, அயற்கிராம மாணவர்கள் மற்றும் பரீட்சைக்கு தோற்றவுள்ள ஆர்வமுள்ள மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## நூல் வெளியீட்டு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கலை இலக்கியச் சங்கத்தின் ஏற்பாட்டில் கலாபூஷணம் சு.துரைசிங்கத்தின் அரும் பண்பாட்டுக் கோலங்கள் நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலய திருமண மண்டபத்தில் வைத்திய கலாநிதி அ.ஜெயகுமாரன் தலைமையில் இடம்பெறும். (இ-3)

## வருடாந்த பரிசில் நாள் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசில் நாள் நிகழ்வு அண்மையில் பாடசாலையின் ஆ.சின்னத்தம்பி ஆசிரியர் நினைவரங்கில் அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவரும் தியாகி அறக்கட்டளையின் பிரதிப் பணிப்பாளருமாகிய பொ.விக்னேஸ்வரன் கலந்து கொண்டார்.

திருமதி எழினி விக்னேஸ்வரன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமே தலைவணங்கும் ஒப்பற்ற முருகன் ஆலயம் நல்லூர்

உலகமே வியக்கும் வகையில் கி.பி.948 ஆம் ஆண்டிலிருந்து நல்லூரின் வரலாறு கோடிடப்பட்டு கி.பி.1248, கி.பி.1450, கி.பி. 1591, கி.பி.1621, கி.பி. 1658, கி.பி. 1734, கி.பி.1749, கி.பி.1798, கி.பி.1807, கி.பி. 1823, கி.பி. 1835, கி.பி. 1876, கி.பி. 1928 ஆகிய காலங்களில் ஆலயமானது தன்னை அற்புத மாக்கிக் கொண்டது எனலாம். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்திலும், அதற்கு முன்னரான காலத்திலும் நல்லூரானது தன் இருப்பிடத்தைப் புதுப்பித்த வண்ணமே வந்துள்ளது. இன்று அது பொற்கோவிலாக உலகில் மிளிர்கிறது.

தமிழ் மன்னனான ஆரியச் சக்கரவர்த்தியானவன் தனது பிரதம அமைச்சராக விளங்கிய செண்பகப் பெருமாளுடன் ஆன்மீக வாலாயம் கொண்ட பேறதனால் செண்பகப் பெருமாளினால் கி.பி. 884 ஆம் ஆண்டளவிலே நல்லூர் ஆலயம் கட்டப்பட்டதாக வரலாற்றுத் தகவல் எடுத்தியம்புகின்றது.

எது எப்படியாக இருந்தபோதும் நல்லூரில் முருகனின் திருவருட் கடாட்சம் வானுயரப் பொலிந்து எல்லோருக்கும் வரமாகக் கிடைப்பதனால் தேவர்களும் மனிதர்களும் முனிவர்களும் சித்தர்களும் ஒன்றாகவே வழிபடும் அற்புதம் கிடைக்கின்றது.

செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகளின் சீடர்கள் இப்பொழுதும் நல்லூரில் நடமாடுவது போன்று தேவர்களும் மனிதர்களாக நடமாடுகிறார்கள். நல்லூர் மண்ணில் தெய்வீகமானது மின்சாரமென உடலில் பாய்வது போன்ற உணர்வலைகள் மேலிடுவதை அவதானிக்க முடிகிறது. மஹோற்சவ காலங்களில் மாலைநேரம் முருகன் வெளி வீதி சுற்றிவரும்போது இலட்சோப இலட்ச மக்கள் முருகனால் உள்ளீர்க்கப்படுவதை இந்த மண் மட்டுமல்ல உலகமே கண்டு வியக்கிறது. ஒருநாளா இரண்டு நாளா இல்லை இருபுத்தைந்து நாட்கள் மொத்தம் ஒரு கோடி அடியார்கள் நல்லூர் முருகனோடு வாழ்ந்து வாழ்த்தி வணங்கி வரம் பெற்று வளமோடு வீடேகுகிறார்கள்.

வீடும் நாடும் உலகமும் பேறடைகிறது. அல்லாமலும் ஆடுகிறார்கள், பாடுகிறார்கள், அட்டாங்க-பஞ்சாங்க நமஸ்காரம்- அங்கப்பிரதட்சணம் செய்கிறார்கள், பஜனை, உபந்நியாசம், கதாப்பிரசங்கம், காவடி, தூக்குக்காவடி, பால் காவடி, பன்னீர்க்காவடி, முள்ளுக்காவடி, பாட்டுக்காவடி, புஷ்பக்காவடி, செதில்காவடி, மௌனக் காவடி, நடனக்காவடி, தாளக்காவடி என்று தம்மையே மறந்து முருகனோடு இசைபட வாழ்கிறார்கள்.

மேலும் வேதமந்திரங்கள், திருமுறைகள், இசை அர்ச்சனைகள், நாதஸ்வர கானங்கள், தவில் கச்சேரிகள், வாத்திய முழக்கங்கள், உரையாடல்கள், பட்டிமன்றங்கள், புராண படனங்கள், தொடர்ப் பேச்சுக்கள் என ஒரே தெய்வீக மனம் கமழ்வதனால், முருகன் எல்லோருக்குமே பேறாகின்றான். இலங்கையிலே எந்தக் கோவிலிலும் காண முடியாத ஷேத்திர பாக்கியத்தை இங்கே பெறமுடிகிறது. அது யாதெனில் ஒரு ரூபாவோடு முருகனோடு கதைக்கலாம், பேசலாம், வாழலாம், வாழ்த்தலாம், அர்ச்சனை செய்யலாம், ஆறுதல் பெறலாம்.

**ஒரு ரூபா**

எந்தப் பெரிய கோடீஸ்வரனென்றாலும் சரி, எந்தச் சிறிய ஏழையென்றாலும் சரி, ஒரு நாட்டின் அதி உன்னத தலைவர் என்றாலும் சரி, அர்ச்சனைக்குரிய பற்றுச்சீட்டு ஒரு ரூபாவேதான். ஆதலால் அனைவரும் சமன் என்ற தத்துவம் சைவ சமய வாழ்வியலில் வாழ்ந்து காட்டப்படுகின்றது.

"கோடியிருந்தென்ன?
மாடியிருந்தென்ன?
ஓடி ஓடி உழைத்தென்ன?
தேடி நீ சேர்த்தென்ன?
வாடி நீ வதங்கி என்ன?
நாடியெங்கும் அலைந்தென்ன?
நல்லூரானோடு நாம் வாழ்ந்திட
நமக்குஒருரூபாமட்டும்போதுமே!"

நல்லூரான் அடியார்களுக்கு அளித்த மனமுவந்த வரமிதுவாகும். உலகத்தையே வணங்க வைத்த ஒவ்வொரு ரூபாவும் நல்லூரையே பிரமாண்டமான ஆலயமாக்கிற்று.

**சிறுதுளி பெருவெள்ளம்**

ஆன்றோர்களின் அனுபவமொழிக்கு மிகவும் சரியான உதாரணமாக விளங்குவது நல்லூராகும். கௌரவ மாப்பாண முதலியார் குடும்பங்களின் பயபக்தியான அர்ப்பணிப்பான தொண்டின் பிரகாரம் ஒவ்வொரு சிறுதுளியாக ஒவ்வொரு ரூபாக்களே நல்லூரை வானுயர வணங்குமாறு வைத்துள்ளது. அடேயப்பா!

வானுயர்ந்த கோபுரங்களும்
வைரநெடு மதில்களும்
தேனினிக்கும் மணிகளும்
தெவிட்டாத ஒலிகளும்
கூனிமிர்த்தும் வேதமும்
குஞ்சரிகள் அபிநயமும்
நான் அடங்க வரவழைக்கும்
நல்லூருக்கு யாவருமே சொந்தம்
மீனிருக்கும் கடலிலும்
முருகன் நாமம் ஒலிக்கிறதே
மானிருக்கும் காட்டிலும்
மால்மருகன் இனிக்கின்றான்
யானிருக்கும் இடமெல்லாம்
யாமிருக்கப் பயமேன்? என்று
நானினிக்க வாழ வேண்டுமாயின்
நல்லூரானுக்குப் போதுமே ஒரு ரூபா!

**எஜமான் (எசமான் ஐயர்)**

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தினைப் பன்னெடுங்காலமாக நிர்வகித்துப் பரிபாலனம் செய்பவர்கள் மாப்பாணர் பரம்பரையினரேயாவர். இவ்வருட மஹோற்சவம் 281 ஆவது (இருநூற்றி எண்பத்தொராவது) வருட உற்சவம் என்பது ஒரு அனுமானமேயாகும்.

ஒவ்வொரு வருட உற்சவத்தின் போதும் ஆலயத்தில் ஏதோவொரு மாற்றம் நடந்தே தீரும். எந்தவொரு மாற்றம் நிகழ்ந்தாலும் அடியார்கள் தாமாக உணர்ந்து கண்டு பிடிக்கலாமேயொழிய யாருமே விளம்பரப்படுத்துவதில்லை. இருபத்தைந்து நாட்களுமே முருகனின் அலங்காரம் ஒவ்வொரு நாட்களுக்கும் ஒவ்வொரு விதமாக அமைந்திட ஆவன புரிவார் எசமான்.

வாழையடி வாழையாகப் பரிபாலனம் செய்துவரும் மாப்பாண முதலியார்கள் ஒருபோதும் எவரையுமே அதிமுக்கியத்துவம் கொடுத்து அழைப்பதுமில்லை, அழைப்பிதழ் அனுப்புவதுமில்லை, அழைப்பிதழ் அச்சடிப்பதுமில்லை. பதவிகளையோ பட்டங்களையோ போட்டு சமயத்தை ஒரு போதும் நோதல்படுத்துவதில்லை. நல்லூர் தனித்துவமானதும் தனிப்பட்டதுமான கோவிலாக இருந்த போதும் எந்த ஒரு இடத்திலாவது தத்தம் பெயர்களை எழுதியோ அச்சடித்தோ விளம்பரப்ப டுத்தியோ சுட்டுவதில்லை! அது வல்லவோ சமயம். எந்த ஒரு கோவி லாக அது எதுவாயினும் யார் பெரியவர், யார் தலைவர், யார் ஆசிரியர், யார் வர்ணனையாளர், யார் சிரேஷ்ட உறுப்பினர், யார் முதல்வர், யார் பிரதம விருந்தினர், யார் சிறப்பு விருந்தினர், யார் ஒரு இலட்சம் கொடுத்தது என்பதையெல்லாம் கோவில்களில் ஒலி பெருக்கியில் முழங்குவது தனிப்பட்ட ஒருவரின் புகழுக்கு அத்திபாரமிடுவதாகும். அடியார்களுக்கு எந்தவித இடையூறுமின்றி, பேதமின்றி, குழப்பமின்றி கும்பிட விட்டால் அதுவே பெரிய தொண்டாகும்.

நல்லூர் ஆலயம் ஒன்றில்தான் கோடிகோடியாய்ப் பக்தர்கள் குவிந்தாலும் நிம்மதியாய்க் கும்பிடவும் எம்மை மறக்கவும் முடிகிறது. வேறு சில கோவில்களில் கும்பிடவே முடிவதில்லை. ஒரு ஆலயத்தேர்த் திருவிழாவுக்குச் சென்றிருந்தேன். என் மனதுக்குள்ளேயே ஒரு தோத்திரத்தைப் பாடிக்கொண்டிருந்தேன். என்னைப் போலப் பலர் தோத்திரம் செய்து கொண்டிருந்தனர். ஒலிபெருக்கி முழங்கிற்று, எப்படி? கேளுங்கள். பக்த கோடிகளுக்கு வணக்கம். இந்த ஆலயத்தினை நான் பொறுப்பேற்றதிலிருந்து செய்யப்பட்ட பணிகள் ஏராளம் ஏராளம்.

எல்லாம் கூறியுள்ளேன். இவற்றை எனது காலத்தில் செய்து முடித்திருக்கின்றேன். தொடர்ந்தும் உதவி செய்யுங்கள். பற்றுச்சீட்டினை வாங்கிக் கொள்ளுங்கள் என்று ஸ்ரீமான்கள் அரசியல் மேடைகளில் பேசும் போன்று விஞ்ஞாபனம் விளம்பரமாயிற்று. யாரோகேட்ட மாதிரி ஒரு பொது க்கோவில் என்றும் பாராமல் தான் எண்ணியபடி தான் நினைத்தமாதிரி எதேச்சாதிகாரமாக ஆலயங்களைக் கையகப்படுத்துதல் ஆகவே. ஆகாது. பொதுவாக ஒரு ஆலய அறிவித்தலோடு மட்டும் போதும் பேதமின்றி, ஏதமின்றி, அழைப்பிதழ்களால் தன்னைக் கௌரவப்படுத்துதலின்றி, மற்றவர்களையும் முதன்மைப்படுத்துதலின்றி பொதுவான அறிவித்தல் விடுவதுவே பொதுக்கோயிலுக்கு உரிய கௌரவமாகும். நான் என்ற சொல்லும் எனது என்ற சொல்லும் அழைப்பிதழ்களும் விசேட கவனிப்பும் ஆர வாரமும் மாலைமரியாதையும் ஆகவே ஆகாது. ஏனென்றால் ஆலயத்தில் எல்லோருமே சமம்.



தலைவரை இராஜமரியாதைகளோடு இனங்காட்டி, முகங்காட்டி, வயிறுமுட்டச் சாப்பாடும் கொடுத்து மேடையேற்றுவதுதான் முகாமையென்று பொதுச் சொத்துக்கு வரைவிலக்கணம் கொடுக்கக்கூடாது. தெரிந்தெடுத்து ஒரு சிலருக்கு மட்டும் அழைப்பிதழ் கொடுத்தும் அனுப்பியும் முறையாக கவனித்து வழியனுப்புவது ஆலய சமத்துவத்திற்கு அறமாகாது.

நல்லூர் ஒருபோதும் யாருக்காவது முத்திரையொட்டியோ, முதன்மைப்படுத்தியோ அழைப்பிதழ்கள் அனுப்பி அழைத்துப்படமெடுத்து மனிதர்களை முருக அம்சங்களுக்கு மேலாக ஒரு விழாவை மேனிலைப்படுத்துவது நடைமுறையிலில்லை. அனைவரும் சமன் என்பதுதான் நல்லூரின் தாரக மந்திரம். அதனைச் சரியாகவும் மிகவும் துல்லியமாகவும் கடைப்பிடிக்கிறார்கள். அனுசரிக்கிறார்கள். எந்தப் பெரிய அரசன் வந்தாலும் ஒருரூபா தான் அர்ச்சனைச் சீட்டு அவருக்கு விசேட கவனிப்பு என்று ஒன்றும் இல்லை.

இலங்கையில் அனைவரையும் சமத்துவமாக நோக்கி வழிபட வரந்தர வைப்பது நல்லூர் ஒன்றேதான். எசமானும் ஒன்றுதான். ஏழையும் ஒன்றுதான். இலட்சாதிபதியும் ஒன்று தான். இனி இல்லையென்ற புகழேந்திப் புலவர்களும் ஒன்று தான். கலாநிதிகளும் ஒன்றுதான். கல்விமான்களும் ஒன்றுதான்.

பட்டங்களைச் சுமக்க முடியாமல் சுமக்கும் புண்ணியவான்களும் ஒன்று தான். இதனடிப்படையில்தான் சகல ஆலயங்களும் இயங்க வேண்டுமென்று சமூகம் கையெடுத்துக் கும்பிடுகின்றது.

நல்லூரில் ஒரு அடியாருக்குப் பக்கத்தில் மந்திரியும் கும்பிடுவார். அரசனும் கும்பிடுவார். கூலித்தொழிலாளியும் கும்பிடுவார். விவசாயியும் கும்பிடுவார். முத்தரும் சித்தரும் முனிவரும் கும்பிடுவார். தேவர்களும் கும்பிடுவர். ஆதலால் நல்லூர் சகலருக்கும் வரமாகிறது.

வரலாற்றுச் சிறப்புடைய நல்லூரை வானுயர வாழவும் வரந்தரவும் வணங்கவும் வைத்த பெறுமதியானவர்களது பெயர்களை யாருக்கும் தெரிவிக்காமலும் தெரியப்படுத்தாமலும் இருப்பதுதான் நல்லூருக்கு அழகு. இது ஒரு வழிகாட்டுதலாகும். எசமான், நல்லூர் ஆலயத்தில் ஒரு மூலையில் ஒதுங்கி, ஒரு சாதாரண அடியார் போல வணங்கி நிற்கும் பாங்கு சைவசமயத்திற்கே பேறளிப்பதொன்றாகும். வேறு சில கோவில்களில் எம்பெருமானை முதன்மைப்படுத்து வதிலும் பார்க்க தலைவர்களையே முதன்மைப்படுத்துவதிலும் தலைவர்களும் தாம் பெருமிதம் அடைவதிலும் கண்ணும் கருத்தும் கொண்டவர்களாகவே இருப்பதுவும் சமூகத்திற்கு வெளிச்சமாகிறது. மேலும் தத்தம் புகழை மேடையேற்றுவதாக ஆலயங்களை நாம் சமைத்து விடக்கூடாது. இந்த விடயத்தில் நல்லூரைப் பார்த்து நாம் திருந்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். அந்த வகையில் மாப்பாண முதலியார்களின் முக்கியத்துவம் தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுகிறது. எனக்குத் தெரிந்த வரையில் குறிப்பாக இரகுநாத மாப்பாண முதலியார், ஆறுமுக மாப்பாணர் முதலியார், குமாரதாஸ மாப்பாண முதலியார், சண்முகதாஸ மாப்பாண முதலியார் என எமது சந்ததியினர் உச்சரிக்கும் மகத்துவம் போற்றுதற்கும் வணங்கு தற்கும் உரியது.

**பெருமை**

1519 தொடக்கம் 1561 வரை யாழ்ப்பாணத்தை அரசாண்ட தமிழ் மன்னனது சங்கிலியன் சிலை நல்லூரை அடையாளம் செய்கிறது. முத்திரைச் சந்தியில் பத்திரமாகச் சித்திகரமாகிறது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது கம்பீரமான சிலை சைவத்தையும் தமிழையும் நீடு வாழவும் பீடு பெறவும் செய்வதில் நல்லூருக்குப் பேறளிக்கிறது. இவரது சிலைகள் நாடு முழுவதும் எழுப்பப்படும்போதெல்லாம் நல்லூர் சிவமயமாகிறது. வணங்கப்படுகிறது. நல்லூர் மண்ணில் நாவலரது தூய தமிழும் தோய்ந்த சைவமும் என்றும் விளைந்து கொண்டே இருக்கும்.

அறிஞர் அரசகேசரி ஒரு ஒப்பாரும் மிக்காருமில்லாப் புலவர். அதுமட்டுமல்ல சமஸ்கிருதத்திலும் வல்லவராவார். இதன் பிரகாரம் வடமொழியில் இயற்றப்பட்ட இரகுவம்சத்தை தமிழிலே இயற்றி அதற்கு இரகுவமிசம் எனப் பெயரிட்டுத் தமிழன்னைக்கு மகுடம் சூட்டி நல்லூரை உலகறியச் செய்த பெரும் மகான் ஆவார். இன்னும் பல பெரியார்கள் நல்லூருக்காகவே வாழ்ந்து அதனைப் பேறாக்கியிருக்கிறார்கள். நல்லூர் ஆதீன முன்னாள் முதல்வர் மணிஐயர் அவர்கள் ஆற்றிய சமய சமூகத் தமிழ்ப் பணி நல்லூருக்கு வரமும் வாழ்வும் அளித்துள்ளதுபோல தற்போதைய ஆதீன முதல்வரும் தமிழுக்கும் சம யத்திற்கும் மனம்வாக்குகாயத்தினால் ஆற்றி வருகின்ற பணி நிறைவானதே.

கூழாங்கைச் சக்கரவர்த்தி என்ற சக்கரவர்த்தியே நல்லூரை அழகுற வடிவமைத்து சிறந்த நகராக்கியவன் என்ற பெருமையை யாழ். மண் வைபவ மாலையினால் சொந்தமாக்குகின்றது.

மேலும் சங்கிலித் தோப்பும் வளையும் மந்திரி மனையும் அரண்மனையும் பண்டாரக்குளம், பண்டார வளைவு, இராஜவீதி, சுண்ணாம்பு மதிலரண்கள், சுரங்கப் பாதைகள், வீரமாகாளியம்பாள் ஆலயம், கைலாயநாதர் கோவில், வெயிலுகந்தப் பிள்ளையார் கோயில், சட்டநாதர் கோயில், யமுனா ஏரி, கந்தபுராண வீதி, செல்லப்பா சுவாமிகளும்-யோகர் சுவாமிகளும்- மகிழ்ந்த தேரடி, கொடிச் சீலை உபகாரிகளான செங்குந்தர் பரம்பரையினரின் பரம்பரை வாழ்விடம், நாதஸ்வர தவில் சக்கரவர்த்திகளின் வாழ்விடம், பூமாலை கொடுப்போரின் பூர்வீகமான நிலபுலங்கள், பரம்பரையான பஞ்சசீல ஆசாரியார்களின் இல்லங்கள் மற்றும் கந்தபுராண சைவ கலாசார அடியார்களின் திருப்பதிகள், ஆதீனங்கள், மடங்கள், மண்டபங்கள் யாவுமே நல்லூரை வணங்க வைக்கின்றன.

கே.எஸ்.சிவஞானராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதிக்கு ஆதரவு கோரி போராடும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள்






(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நீதிபதிக்கு ஆதரவு கோரி போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். குறித்த போராட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆல யம் முன்பாக இடம்பெற்றது. குறித்த போராட்டத்தில் காணா மல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பல்வேறு சுலோக அட்டைகளை ஏந்தியவாறு அமைதி போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது ஊடகங் களுக்கு கருத்து தெரிவித்த மக்கள்,

மேற்கொள்ளப்பட்ட துப பாக்கிச்சூட்டு சம்பவத்தை தமிழ் மகன் ஒருவரை ஏவி விட்டு மேற்கொள்ளப்பட்ட தாக குறிப்பிட்டிருந்தனர்.


மேலும் குறித்த சம்பவம் தொடர்பில் நீதியான முறை யில் விசாரணை மேற்கொள் ளப்பட வேண்டும் என்பதை யும் வலியுறுத்தியிருந்தனர்.

இதேவேளை குறித்த போராட்டத்தில் பங்கு கொண்ட அரசியல் கைதிகளை விடு விப்பதற்கான அமைப்பின் தலைவர் வண பிதா சக்தி வேல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் நீண்டகாலமாக இருப்பதற்கு எமது தமிழ் அரசியல் தலைமைகளே காரணம் என்பதையும் குறிப் பிட்டிருந்தார்.

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலை புலிகள் மீதான தடையை நீக்கியமை தொட ர்பில் அரசு எவ்வாறான நிலையில் இருக்கும். குறித்த தடை நீக்கம் மூலம் தமிழ் மக்களுக்கு அரசியல் தலை மைகளால் சாதிக்க முடியுமா? என கேள்விகள் எழுப்பப் பட்டன, பதிலளித்த அவர், இல ங்கை அரசு குறித்த விடயத் தில் திருப்தியடையாத போதி லும், விடுதலைப்புலி களின் தடை நீக்கமானது தமிழ் மக் களின் அரசியல் உரி மையை ஏற்றுக் கொண்டுள்ளமையை உணர்த்துவதாக குறிப்பிட்டி ருந்தார். (3-8-312)

## சாரதியின் தவறால் தடம்புரண்டது வாகனம்



(மல்லாவி)

பூநகரி பொலிஸ் நிலைய பிரிவில் பரந்தன் - பூநகரி வீதியில் 14 ஆவது கிலோ மீற்றர் மைல் கல் பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 12.30 மணியளவில் சீமெந் துக் கலவையுடன் பயணித்த கனரக வாகனத்தின் சாரதி நித்திரை தூங்கியதன் காரணமாக வாகனம் தடம்புரண்டு விபத்துக்குள் ளானது.

இவ்விபத்தில் கை உடை வுகள் ஏற்பட்ட நிலையில் தெய்வாதீனமாக உயிர் தப் பிய சாரதியை வீதியால் சென்ற பொதுமக்கள் மீட்டு கிளிநொச்சி மாவட்ட வைத் தியசாலையில் அனுமதிக்க ப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள் ளதாக பூநகரி பொலிஸ் நிலை யத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (8-15-283)

## மேசன் பயிற்சிக்கான செய்முறைப் பரீட்சை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட தேசிய பயிலுநர் கைத்தொ ழில் பயிற்சி அதிகார சபை யினால் கட்டுமானக் கைத் தொழில் அபிவிருத்தி அதி கார சபை மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதி கார சபை ஆகிய நிறுவன ங்களின் அனுசரணையு டன் முல்லைத்தீவு மாவட்ட த்தில் கட்டுமானத் துறையில் பணிபுரியும் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட மேசன் மற்றும் உதவியாளர்களு க்கான மாதா ந்த கொடுப் பனவுடனான 3 மாத கால NVQ சான்றிதழ் பயிற்சி கடந்த வருட இறுதிப் பகுதி யில் அமுல்படுத்தப்பட்டு நடப்பாண்டில் தை மாதத் துடன் நிறைவுபெற்றது. இவர் களுக்கான இறுதிச் செய்மு றைப் பரீட்சை கடந்த மாதம் நடத்தப்பட்டிருந்தபோதிலும் பலர் இதில் பங்குபற்றத் தவறியமையினால் நாளை 29 ஆம் மற்றும் நாளை மறுதினம் 30ஆம் திகதிக ளில் முள்ளியவளை தேசிய பயிலுநர் கைத்தொழில் பயி ற்சி அதிகார சபையின் அலு வலகத்தில் மேற்படி பரீட்சை நடைபெறவிருப்பதனால் தங் களுக்கு இலவசமாக வழங்க ப்பட்ட உபகரணங்களுடன்தவ றாது கலந்துகொள்ளுமாறு மாவட்ட முகாமையாளர் கேட் டுக்கொள்கின்றார். (8)

## பாதுகாப்பற்ற முறையில் கொட்டப்படும் கழிவுகளிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்-உமையாள்புர மக்கள்

கிளிநொச்சி உமையாள் புரம் பகுதியில் பாதுகாப்பற்ற முறையில் தொடர்ந்தும் கழி வுகள் கொட்டப்படுவதனால் அயல் பிரதேசங்களில் மக்கள் குடியிருக்க முடியாது நிலைமை காணப்படுவதாக பாதிக்கப்ப ட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி நகரிலும் அதனை அண்மித்த பகுதிக ளிலும் பிரதேச சபையினால் சேகரிக்கப்படும் கழிவுகள் மற்றும் அறிவியல்நகரில் அமைந்துள்ள பளைச்சாறு உற்பத்தி நிலையம் மற்றும் ஏனைய தொழிற்சாலைகளி லிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் உமையாள்புரம் பகுதியின் மக்கள் குடியிருப் பிற்கு அண்மையில் உள்ள பகுதிகளில் கொட்டப்பட்டு வருகின்றன.இவ்வாறு கொட் டப்படும் கழிவுகள் பாதுகாப்ப ற்ற முறையில் திறந்த வெளி களில் கொட்டப்படுகின்றது.

அத்துடன், பொதுமக்க ளுக்குச் சொந்தமான சில காணிகளிலும் இவ்வாறான கழி வுகள் கொட்டப்படுகின்றன.

மக்கள் குடியிருக்கும் பகு திக்கு அண்மித்த பகுதிகளில் இந்தக்கழிவுகள் கொட்டப் படுவதனால் தாங்கள் இங்கு குடியிருக்கமுடியாத நிலை காணப்படுவதாகவும் பாது காப்பு வேலிகள் அற்ற நிலை யில் திறந்த வெளியில் வைத் தியசாலைக் கழிவுகள், பொதுச் சந்தைகளில் சேகரிக்கப்படு கின்ற மாமிச வாணிபக்கழி வுகள், உணவகங்களின் கழிவுகள் போன்றன திறந்த வெளிகளில் கொட்டுவத னால் கட்டாக்காலி நாய்கள் மற்றும் காகங்கள் என்பன இந்தக் கழிவுகளை எடுத்து வந்து ஊர்மனைக்குள்போடுகின்றன.

அத்துடன், பொலித்தீன் கழிவுகள் எரியூட்டப்படாத நிலையில் காணப்படுவ து டன் காற்றினால் பல்வேறு திசைகளிற்கும் எடுத்துச்செல் லப்படுகின்றன.

எனவே இவ்வாறான கழி வுகளை உரிய முறையில் அழிப்பதற்கும் புதைப்ப தற் கும் பிராந்திய உள்ளூரா ட்சித் திணைக்களம், மாகாண சபை என்பன நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (3-8-111)

## மாற்றுத்திறனாளிகளின் விளையாட்டு விழா

(கிளிநொச்சி)


சமூக சேவைகள் திணைக் களத்தின் வழித்துணையு டன் உயிரிழை நிறுவனத் தால் வடமாகாண மாற் றுத் திறனாளிகள் விளை யாட்டு விழா நாளை 29 ஆம் திகதி சனிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் 30ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஆகிய நாட்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெ றும்.


கிளிநொச்சி மாவட்டத் தில் நடைபெறும் இவ்விழா வில் மூத்த பிரஜைகள் பங்கு பற்றி விழா சிறப்புற ஒத் துழைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை அலு வலர் கேட்டுக் கொண்டுள் ளார். (3-8-254)




## வவுனியாவில் தேக்குமரக் குற்றிகள் கடத்தல்

### 4 பேர் கைது, வாகனம் பறிமுதல்





வவுனியா எல்லப்பர் மருதங்குளத்தில் தேக்கு மரக்கடத்தலில் ஈடுபட்ட 4 பேர் வவுனியா பொலிஸாரி னால் கைது செய்யப்பட்டுள் ளனர். இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது,

வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரிக்கு கிடைத்த தகவலினை அடு த்து வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி எஸ்.பி.சி.எஸ்.கே.செனரத் தலைமையில் கான்ஸ்டபிள் களான ஜானக்க (39183), அசேல(87224) ஆகியோர் கொண்ட குழு நேற்று முன் தினம் பிற்பகல் 12.30 மணியள வில் எல்லப்பர்மருதங் குளத் தில் வைத்து மொரட்டுவ பகு தியைச் சேர்ந்த கனரக வாக னம் ஒன்றில் ஏற்றிச் சென்ற 20 தேக்கு மரக்குற்றிகளை கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் இக்கடத்தலில் ஈடுபட்ட மொரட்டுவ பகுதியை சேர்ந்த இருவரையும், குடாக் கச்சக்கொடியை சேர்ந்த இரு வரையும் கைது செய்ததோடு தேக்கு மரத்தினை ஏற்றிச் செல்ல பயன்படுத்திய வாக னமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இக்கடத்தல் தொடர்பான மேலதிக விசாரணை வவு னியா குற்றத்தடுப்பு பொலிஸா ரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (3-8-15-250)

## நிறுத்தப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவுகளால் பாதிக்கப்படும் முல்லைத்தீவு மாவட்ட மக்கள்

(முல்லைத்தீவு)

மிகவும் வறுமையான மாவட்டமாக பிரகடனப்ப டுத்தப்பட்டுள்ள முல்லைத் தீவு மாவட்டத்தில் மேற்கொள் ளப்பட்டு வந்த சமுர்த்தி மீளாய் வின் போது ஏற்கனவே சமு ர்த்தி பெற்று வந்த 1600 பேருக்கு சமுர்த்திக் கொடுப்ப னவுகள் நிறுத்தப்பட்டிருக்கி ன்றன.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வு ஆரம்பிக்கப் பட்டு கடந்த 2011ஆம் ஆண்டு இந்த மாவட்டத்தில் பதினொ ராயிரம் பேர் சமுர்த்தி பயனா ளிகளாகத் தெரிவு செய்யப் பட்டு சமுர்த்திக் கொடுப் பனவுகள் வழங்கப்பட்டு வந் தன.

இந்நிலையில் 2012ஆம் ஆண்டிற்குப்பின்னர் மீள்குடி யேற்றம் செய்யப்பட்ட கரைது ரைப்பற்று மற்றும் புதுக்கு டியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுகளில் 24 கிராம சேவை யாளர் பிரிவுகளில் எந்தவித மான சமுர்த்திக் கொடுப்ப னவுகளில் உள்வாங்கப்ப டாது காணப்பட்டன.

இந்நிலையில் 24 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் சுமார் ஏழாயிரத்திற்கு மேற் பட்டவருக்கு சமுர்த்திக் கொடு ப்பனவு தேவையான தொன் றாக காணப்படுகின்றது. ஏற்க னவே சமுர்த்தி பெற்ற 1600 பேருக்கு சமுர்த்திக்கொடுப் பனவானது நிறுத்தப்பட்ட மையானது இந்த மாவட்டத் தில் சமுர்த்தி பெற்று வந்த மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே முல்லைத்தீவு மாவட்டத்தில் 136 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் சமுர்த்திப்பயனாளிகளைத் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென பாதிக் கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (3-8-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று வழங்கிவைக்கப்பட்டன



களத்தின் பிராந்திய பயிற்சி நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சரும் விவசாய அமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட 56 பயிற்சியாளர்களுக்கு நேற்று நியமன கடிதங்கள்

யில் கரந்தகொல்ல என்ற இடத்தில் 2 வருடங்களுக்கு வேதனத்துடனான பயிற்சி இடம்பெறவுள்ளதாகவும் இதன்போது முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.

போரினால் முழுமையாக அழிக்கப்பட்டுள்ள பிரதேசத்தை வளங்கொழிக்கும் ஒரு பிரதேசமாக மாற்றுவதற்கும், பசுமை நிறைந்த ஒரு பூமி






கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்களுக்கான நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு நேற்று மாலை 3 மணியளவில் அறிவியல்நகர் பகுதியில் அமைந்துள்ள கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்

வழங்கப்பட்டன.

வடமாகாணத்தின் 5 மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கும் குண்டசாலை பகுதி

யாக மாற்றுவதற்கும் ஒன்றிணையுமாறு இதன்போது மாகாண முதலமைச்சர் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (3-8-15-312)





2017ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் இருந்து அண்மையில் முல்லைத்தீவு விசுவமடு மகா வித்தியாலயத்திற்கு தமிழர் பண்பாட்டு இசைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

# கரை எழில் இதழிற்கான ஆக்கங்கள் கோரல்

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக கலாசார பேரவையினால் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வருகின்ற கரை எழில் 2017 இற்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

கரை எழில் இதழானது 2011 ஆம் ஆண்டு முதல் பிரதேசத்தின் கலை கலாசார, வாழ்வியல், தொன்மைகள், ஆன்மீகம் மரபுரிமைகள் போன்ற விடயங்களை பிரதிபலிக்கும் வகையிலான கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் ஆவணத்தரவுகள் என்பனவற்றை தாங்கி வெளியிடப்பட்டு வருகிறது.

அவ்வாறே 2017 ஆம் ஆண்டுக்கான ஆக்கங்களும் பிரதேச கலைஞர்களிடம் இருந்து கலாசார பேரவை எதிர்ப்பார்க்கின்றது.

எனவே மேற்படி விடயங்களை பிரதிபலிக்கும் வகையில் ஆக்கங்களை 20-08-2017 இற்கு முன்னதாக தலைவர் பிரதேச கலாசார பேரவை கரைச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (3-8-312)




# தமிழ் இலக்கிய கலைத்திறன் போட்டி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் திருக்குறள் மாநாட்டையொட்டி தமிழ் இலக் கியக் கலைத்திறன் போட்டிகள் ஆண்டு 2 தொடக்கம் ஆண்டு 12 வரை கல்வி கற்கும் மாணவர் மத்தியில் நடத்தப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் இவ் ஆண்டின் போட்டிகளுக்கான வேண்டுகைப்படிவங்கள் பாடசாலை முதல்வர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கண்டாவளை, பூநகரி கோட்டங்களுக்கான வேண்டுகைப்படிவங்களை அந்தந்த கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

நிறைவாக்கிய வேண்டுகைகளை 2017.08.10 ஆம் திகதிக்கு முன்னர் எமது அறிவுறுத்தல் கடிதத்தில் குறிப்பிட்டவர்களிடம் கையளித்துதவுமாறும் இதற்கான தேர்வுகள் புரட்டாதித் திங்களில் நடைபெறும் எனவும் இப் போட்டிக்கான மாணவர் வாழ்வில் திருக்குறள் புத்தகத்தினை கனகபுரம் வீதியில் அமைந்துள்ள சிவா பதிப்பகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தமிழ் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (3-8)

# கிணற்றிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு







(மல்லாவி)

முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள உண்ணாப்பிலவு கிராமத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு செல்லும் கிளை வீதியில் உள்ள பொன்னம்பலம் - கதீசன் என்னும் ஆசிரியர் ஒருவரின் வீட்டுக் கிணற்றில் இருந்து துப்பாக்கிக் குண்டுகள், மிதிவெடிகள், கைக் குண்டுகள் உட்பட பெருமளவான வெடிபொருட்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய விசேட அதிரடிப் படையின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினால் மீட்கப்பட்டு அவை அனைத்தும் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

தற்போது நிலவிவரும் கடும் வரட்சி காரணமாக ஆசிரியரின் வீட்டில் இருந்த கிணற்றின் நீர் வற்றிப் போயுள்ளது.

இதனுள் இருந்த கழிவுப் பொருட்களைத் துப்புரவு செய்[illegible] வேலைகள் நடைபெற்றபோது. உரப் பைகளில் பொதிகள் செய்யப்பட்ட நிலையில் சில மர்ம பொருட்கள் இருப்பதை அவதானித்த வேலையாட்கள் அதனை ஆசிரியருக்கு தெரி[illegible]ர்கள். [illegible]படுத்து. ஆசிரியர் அவசர பொலிஸ் உதவித் தொலைபேசி இலக்கமான 119, ஊடாக பொலிஸாருக்கு தகவல்களை வழங்கியுள்ளார்.

இந்த தகவலை பெற்றுக் கொண்ட அவசர இலக்க உதவிப் பொலிஸார் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் நீதவானின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்கள்.

முல்லைத்தீவு பொலிஸாருக்கு நீதவான் வழங்கிய உத்தரவிற்கு அமைவாக கிணற்றைச் சுற்றி பொலிஸ் பாதுகாப்பை கடந்த ஞாயிற்றுக் கிழமையில் இருந்து ஏற்படுத்தியதுடன் விசேட அதிரடிப் படைப் பிரிவின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவிற்கு தகவலை வழங்கியுள்ளனர்.

இதற்கமைய, நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் கிணற்றுக்குள் இருந்து மிதிவெடிகள் -22, பல வகையான துப்பாக்கிகளின் ரவைகள் 789, கைக் குண்டுகள் 43, வெடி மருந்து ஒரு கிலோ என்பன அதிரடிப் படையினரின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினால் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட வெடிபொருட்களை முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள மக்கள் நடமாட்டம் இல்லாத பாதுகாப்பான இடத்தில் வைத்து வெடிக்கச் செய்துள்ளனர். (3-8-15-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய முறையில் பயன்படுத்தப்படும் வெற்றிலை பயன்பாட்டுக்கு தடையில்லை

## சுகாதார அமைச்சர் ராஜித தெரிவிப்பு

புகையற்ற புகையிலையடங்கிய பொருட்கள் தயாரிப்பு மற்றும் இறக்குமதியைத் தடை செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட புதிய விதிமுறைகளின்படி பாரம்பரிய முறையில் பயன்படுத்தப்பட்டு வரும் வெற்றிலைப் பாவனைக்குத் தடையில்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

புகையற்ற புகையிலைப் பொருட்களின் உற்பத்தியை தடை செய்வதற்கு புகையிலை மற்றும் மதுபானம் ஆகியவற்றிற்கு தொடர்பான தேசிய அதிகாரசபை அண்மையில் தீர்மானித்தது.

புகையற்ற புகையிலை அடங்கிய பொருட்களின் உற்பத்தி அல்லது கலவை அல்லது சிறு இனிப்புச் சுவையுடைய அல்லது நிறமுடைய புகையிலை அடங்கிய சிகரட் அல்லது புகையிலை அடங்கிய இலக்ட்ரிக் சிகரட் போன்றன தயாரிப்பு, இறக்குமதி, விற்பனை மற்றும் விற்பனைக்காகக் காட்சிப்படுத்தல் என்பன தடை செய்யப்படுவதாக, தேசிய புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான அதிகார சபை அறிவித்தது.

கடந்த காலங்களில் இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் அதிகளவில் அடிமையாகியிருந்த மாவா, பாபுல் போன்ற வஸ்துக்கள் அடங்கிய புகையிலை தயாரிப்பை தடை செய்யும் நோக்கில் இந்த விதிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதாக தேசிய புகையிலை மற்றும்மதுபானம்தொடர்பானஅதிகார சபை தெரிவித்துள்ளது.

அவற்றை பயன்படுத்துவதன் ஊடாக சுகாதார ரீதியாக பல நோய்கள் ஏற்படும் என்றும் பிரதானமாக வாய்ப்புற்று நோய், மனநல பாதிப்பு மற்றும் வயிற்றுடன் சம்பந்தப்பட்ட நோய்களும் ஏற்படலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சுகாதார அமைச்சரினால் 2016 செப்டெம்பர் 01ஆம் திகதி புகையற்ற புகையிலையடங்கிய பொருட்கள் தயாரிப்பு மற்றும் இறக்குமதியை தடை செய்வதற்கான விதிமுறைகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாக தேசிய புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான அதிகார சபையின் தலைவர் பாலித அபேகோன் கூறினார்.

இதனூடாக ஒருபோதும் பாரம்பரிய முறையில் பயன்படுத்தப்பட்டு வரும் வெற்றிலை பாவனைக்கு பாதிப்பு ஏற்படப் போவதில்லை என்று அவர் தெரிவித்தார். (இ-7)

# வெளிவிவகார அமைச்சர் ரவி சமர்ப்பித்த 3 அமைச்சரவைப் பத்திரங்கள் நிராகரிப்பு

## ஜனாதிபதி மைத்திரி நடவடிக்கை

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப்பத்திரங்கள் மூன்றும் நிராகரிக்கப்பட்டன.

கொழும்பு யூனியன் பிளேஸிலுள்ள விசும்பயவை (அக்லண்ட் ஹவுஸ்) தனது உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக்க வேண்டுமென அவர் கோரியிருந்தார்.

அரசாங்கத்தில் உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக விசும்பய உள்ளது. இது வெளிநாட்டுத் தலைவர்களினதும் அரசாங்க அமைச்சர்களினதும் வாசஸ்தலமாக பயன்படுத்தப்படுகின்றது.

இலங்கை தூதரகத்தின் கீழுள்ள புதுடில்லி யாத்திரிகர்கள் விடுதியின் நிர்வாகத்தை மகாபோதியின் இலங்கை கிளைக்கு மாற்றும்படி இரண்டாவது அமைச்சரவைப் பத்திரத்தில் கேட்டிருந்தார்.

மூன்றாவது அமைச்சரவைப் பத்திரத்தில் தனக்கு கீழ் அதிகாரிகளின் பிரதானி ஒருவரை நியமிக்கும்படி கேட்டிருந்தார். இந்த மூன்று பத்திரங்களையும் ஜனாதிபதி நிராகரித்து விட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும். நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விவகாரம் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச்சரவை இணைப் பேச்சாளர்களில் ஒருவரும், அமைச்சருமான தயாசிறி ஜயசேகர, என்னுடைய அமைச்சரவைப் பத்திரங்கள் கூட நிராகரிக்கப்பட்டுள்ளன. அது பெரிய விடயமல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# அர்ஜுன் அலோசியஸ் ரவி கருணாநாயக்கவின் வீட்டு வாடகை செலுத்தியமை அம்பலம்-நாமல்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் ரவிகருணாநாயக்க உள்ளிட்ட இந்த அரசாங்கம் பதவி விலக வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கோரியுள்ளார்.

பிணை முறி மோசடி தொடர்பில் அண்மையில் கிடைக்கப் பெற்றுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் அரசாங்கம் பதவி விலக வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

பேர்பெச்சுவல் ட்ரஸரீஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அர்ஜுன் அலோசியஸ் அப்போதைய நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் வீட்டு வாடகை செலுத்தியமை அம்பலமாகியுள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ராஜபக்ஷவினருக்கு எதிராக இவ்வாறு குற்றம் சுமத்தியிருந்தால் பாரிய சர்ச்சைகள் வெடித்திருக்கும் எனவும், ஆளும் கட்சி அமைச்சர் என்பதனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



பல்கலைக்கழக வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி.கமராக்கள் உடனடியாக அகற்றப்படவேண்டும் உள்ளிட்ட 5 கோரிக்கைகளை முன்வைத்து கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு - வந்தாறுமூலை வளாக முன்றலில், நேற்றுக் காலை, இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறிப்பட்ட கால எல்லைக் குள் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தல், "மஹாபொல" புலமைப்பரிசில் பிரச்சினையை நிவர்த்தி செய்தல், விடுதிப் பிரச்சினையை நிவர்த்தி செய்தல், அசாதாரணமான வகுப்புத்தடையை நீக்குதல், சி.சி.டி.வி கமராக்களை அகற்றுதல் ஆகிய கோரிக்கைகள், மாணவர்களால் இதன்போது முன்வைக்கப்பட்டன. (இ-7)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

தெய்வீக இசையரங்கு இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு 28.07.2017 முதல் 23.08.2017 வரை மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெறும்.

முதலாம் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை மங்கல இசை இடம் பெறும். இந்நிகழ்வில் நாதஸ்வரம்- ரி.எம். பாலாஜி (தமிழ்நாடு), எஸ். ஹரிகரன், பாலமுருகன் சாரங்கன்- தவில் -ரி.எம். ரவிக்குமார் (தமிழ்நாடு), சிவதாஸ் பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டு மங்கல இசை வழங்குவர். (இ-3)




## இந்துவாக வாழ்வோம்

கந்தனே கடம்பா கருணை முகத்தா
வணங்கித் துதித்து நின்றோம் இறைஞ்சி
பந்தமே இன்றி பரவுவார் தமக்கு
பரகதி அளிக்கும் புண்ணிய கீர்த்தா
செந்தமிழ்க் குமரா நல்லை நகர் கந்தா
உயர் கோபுரம் மேவிய சீர்
அந்தமிலா ஆனந்தம் அளிப்பவனே எமை
ஆதரித்து அழைத்து அருள் புரிவாயே.

திருமதி.சாந்தா வீரசிங்கம்,
சின்மயாமிஷன்.

## தர்மத்தை அறத்தை வளர்த்து

பணம் பதவி பெற்றிடும் நோக்கில்
பெருமுழுல் வஞ்சனையை வளர்க்காது
தினமும் தீயதைத் தொடாது விலக்கி
தர்மத்தை அறத்தை வளர்த்து
மனதில் அமைதியொடு மருவி நல்லூரில்
முருகாவுன் கொடியேற்றம் கண்டின்று
வணங்கி நாம் வேண்டுகின்றோம் எங்கள்
விடிவுக்கு வழிகாட்டி யருள்வாயே!

குளப்பிட்டி.க.அருமைநாயகம்.

## நாடி அருள் புரிவாய்

தோகை விரித்தாட தோன்றிய மயில்முருகா
எளில் நல்லை ஏறுகொடி நன்நாளில்
பாகம் அமர்ந்திடும் பத்தினி தேவியருடன்
வித்தகன் முருகா விரைந்தே வருவாய்
ஆடி அமாவாசை ஆறாம் நாள் தொட்டு
ஆவணி அமாவாசை தீர்த்தம் வரை
வாடிவரும் பக்தரின் வாஞ்சைகளை தீர்த்திட
நாடி அருள் புரிவாய் நல்லை நகர் நாயகனே.

ஏ.வீரசிங்கம்
அரியாலை.

## நின் கொடியேற்றி தீர்வு தா முருகா

நல்லைதனில் வீற்றிருந்து நல்லாட்சி புரியும் வேலவா!
அடியவர்க்கு அருள் மழை பொழியும் ஆறுமுக வேலவா!
அலங்காரக் கந்தனே அன்பு வடிவானவனே வேலவா!
கொடியேற்றம் காண உன் வாயில் வந்தோம் வேலவா!
கொடியேற்றி நம் மக்களுக்கொரு தீர்வைப் பெற்றுத் தா வேலவா!

நல்லை விசு இராசநாயகம்.

## "கேட்பது கிடைக்கும் பார்"

கொடியேறுது கொடியேறுது
குறைதீருது பார் பார்
கொடிதானதும் நோய் நொடிகளும்
குலைந்தோடுது பார் பார்

நெடிதானதும் தீர்வொன்றுக்காய்
நெருங்குகின்றோம் பார் பார்
நல்லூரிலே கொடியேறிட
நம் கேட்பது கிடைக்குமே பார்.

கே.எஸ்.சிவஞானராஜா.

## நல்லைக்கந்த சந்தப் "பா"

வான தேவரும் மண்ணில் மாந்தரும்
வந்து வேண்டவே வரங்க ளீந்திடும்
ஞான பண்டிதா நலங்க ளூறவே
நல்லை யம்பதிக் கொடியு மேறவே
ஈன மானதோ ரிடர்கள் மாறவே
இங்கு வெங்கனு மினிமை தேறவே
ஆன தெய்வமென் றகத்தி லேற்றினோம்
அல்லல் நீக்கவா நல்லைக் கந்தப்பா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர், நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டோ-துவிச்சக்கரவண்டி விபத்து; மாணவிக்கு தலையில் படுகாயம்!



(யாழ்ப்பாணம்)

ஆட்டோவுடன் துவிச்சக்கரவண்டி மோதியதில் பாடசாலை மாணவி தலையில் படுகாயமடைந்துயாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை 7.15 மணியளவில் நல்லூர் பின்வீதிக் கும் முடமாவடிச் சந்திக்குமிடையில் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, நல்லூர் பின் வீதியால் முடமாவடி நோக்கிச் சென்று கொண் டிருந்த ஆட்டோவுடன் கந்தன் கருணைக்கு அருகிலுள்ள ஒழுங்கை யிலிருந்து வந்த துவிச்சக்கரவண்டி மோதியது.

இதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த வேம்படி பெண்கள் உயர் தரப் பாடசாலையின் உயர்தர பிரிவில் கலைத் துறையில்கல்விகற்கும்லக்சிகா (வயது-18) எனும் மாணவி தலையில் படுகாய மடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இம் மாணவி அனலை தீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவராவார். இவ் விபத்தில் ஆட்டோ, துவிச் சக்கர வண்டி இரண்டுமே பாதிப்புக்குள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3-108)

# முதலீட்டுச் சபை மூடப்பட வேண்டும்

## நீதி அமைச்சர் தெரிவிப்பு



முதலீட்டுச் சபை மூடப்பட வேண்டுமென நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றத் தவறினால் முதலீட்டுச் சபையை மூடுவதனைத் தவிர வேறு மாற்று வழி கிடையாது என அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற பொருளாதார மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். முதலீட்டுச் சபை உரிய முறையில் தனது சேவைகளை வழங்கத் தவறியுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-7)

# வடக்கின் அனைத்து மாவட்டங்களிலும் வெளிச்ச வீடுகள் அமைக்க வேண்டும்

## மாகாணசபையின் 100 ஆவது அமர்வில் தீர்மானம் நிறைவேற்றம்

வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வெளிச்ச வீடுகள் அமைக்க வேண்டும் என்ற பிரேரணை வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் 100 ஆவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள் பேரவை செயலகத்தில் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே உறுப்பினர் து.ரவிகரனால் மேற்படி பிரேரணை முன் மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் முன்னைய காலத்தில் ஆழ்கடல் தொழிலுக்கு சென்று இரவு நேரத்தில் வெளிச்ச வீட்டின் துணையுடன் கரை திரும்பினர். பல ஆண்டுகளிற்கு முன்பு நிர்மாணிக்கப்பட்டிருந்த அவ் வெளிச்ச வீடு தற்போது அழிவடைந்து விட்டது. யுத்தத்தின் பின் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு எட்டு வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் மீனவர்கள தங்களின் அமைப்புக்களின் ஊடாக பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் இன்று வரை வெளிச்ச வீடு அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

இதற்கான வேலைத் திட்டங்கள் துறைமுகங்கள் கப்பல் துறை அமைச்சினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.சுமார் 73 கிலோ மீற்றர் நீளமான முல்லைத் தீவின் கடற்கரை 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவ குடும்பங்களின் அத்தியாவசிய தேவையாக காணப்படுகின்றது. இவ்வெளிச்ச வீடு இன்மையால் மீனவர்கள் திசை மாறி செல்கின்ற நிலைமைகள் பல இடம் பெற்றுள்ளதுடன் இதனால் பெரும் அசௌகரியங்களுக்கும்உள்ளாகியிருக்கின்றனர்.

எனவே வெளிச்ச வீட்டினை அமைத்து தர துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்த வேண்டும் என ரவிகரன் தனது பிரேரணையை முன்மொழிந்தார். இந்த பிரேரணையை வடக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும் வெளிச்ச வீடு அமைக்க வேண்டும் என மாற்றம் செய்து போக்குவரத்து துறை அமைச்சர் பா.டெனிஸ்வரன் முன்மொழிய சபையில் நிறைவேற்றப்பட்டது. (இ-4)

# ரவிராஜ் படுகொலை விவகாரம்; நேவி சம்பத்திற்குப் பிடியாணை!



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலையின் பிரதான சந்தேக நபரான நேவி சம்பத்திற்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை இவ் உத்தரவை பிறப்பித்துள்ளது.

ரவிராஜ் படுகொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்டிருந்த ஐந்து சந்தேக நபர்களும் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்ற ஜூரிகள் சபையால் விடுவிக்கப்பட்டனர்.

இதற்கு எதிராக ரவிராஜின் பாரியாரால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குறித்த சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்தே இப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக துணிந்து குரல்கொடுத்து வந்த நடராஜா ரவிராஜ், கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பத்தாம் திகதி கொழும்பு நாரஹென்பிட்டி பகுதியில் இனந்தெரியாதோரால் சுட்டு படுகொலை செய்யப்பட்டார். குறித்த கொலை தொடர்பாக கடந்த 10 வருடங்களாக விசாரணை நடத்தப்பட்டு வந்த நிலையிலேயே சந்தேக நபர்கள் விடுவிக்கப்பட்டனர். மேல் நீதிமன்றத்தின் இத் தீர்ப்பிற்கு எதிராக, ரவிராஜின் பாரியாருக்கு மேலதிகமாக சட்டமா அதிபரும் மேன்முறையீடுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 ஆம் ஆண்டு பிறந்த 7ல் செவ்வாய் 64 கிரக பாவம் உடைய பட்டதாரி (ஆசிரியர்) மணமகளுக்கு தனியார் தொழில், அரச தொழில் புரியும் மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். (9936)

தொடர்புகளுக்கு: 0770886283

## நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி

Dr.S.S.சர்மா குருஜீ

82/4 கலட்டி அம்மன் கோவிலடி, வண்ணார்பண்ணை.

077 784 1558

(சு. 8817)

## கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 32 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: NDT BE/ பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/6630 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 62<br>தகைமை/தொழில்: HND<br>தொ.இ: G/6797. |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 18<br>உயரம்: 6'1"<br>தகைமை/தொழில்: BSc, MSc/ அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/6631 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/6806 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>தகைமை/தொழில்: A/L லண்டன் PR<br>தொ.இ: B/6632 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 17<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSc<br>தொ.இ: G/6810 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BA, CIMA லண்டன் PR<br>தொ.இ: B/6633 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: செவ் 4இல் உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: MScIT/லண்டன் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் –<br>தொ.இ: G/6812 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

### காணி வழங்க விருப்பம் தெரிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு ஆயுர்வேத வைத்தியசாலை அமைப்பதற்காக சுன்னாகம் சந்தியிலிருந்து இணுவில் சந்திக்கு உட்பட்ட பிரதான வீதியை அண்மித்த பகுதியில் அல்லது மருதனார்மடம் சந்தியிலிருந்து உடுவில் மகளிர் கல்லூரி சந்தி வரையான பிரதான வீதியை அண்மித்த பகுதியில் 5 பரப்பு காணி தேவையாக உள்ளது. அக் காணியை நன்கொடையாக வழங்க விரும்புபவர்கள் அல்லது விற்பனை செய்வதற்கு விரும்புபவர்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். (தொலைபேசி இல:021 224 0017)

செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.


(சி-9162)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் மீதான தடை நீக்கத்

# வரவேற்கும் தமிழ

## மு.க.ஸ்டாலின் வரவேற்பு



(சென்னை)

பயங்கரவாத இயக்கங்கள் பட்டியலிலிருந்து புலிகள் அமைப்பை ஐரோப்பிய ஒன்றியம் நீக்குவதற்கு தமிழகத்தில் வரவேற்புகள் குவிந்துள்ளன.

பயங்கரவாத இயக்கங்கள் பட்டியலில் இருந்து புலிகள் அமைப்பை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியதற்கு மு.க.ஸ்டாலின் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாத இயக்கங்கள் பட்டியலில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை நீக்கியிருப்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்கிறேன்.

28 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் நீதிமன்றமே விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கியுள்ளது உலகத் தமிழர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கியிருப்பது மட்டுமின்றி. இந்த தடை நீக்கம் ஈழத்தமிழர்களின் உரிமை போராட்டத்தில் ஒரு முக்கியமான திருப்புமுனை என்றே கருதுகிறேன்.

ஈழத்தமிழர்கள் மீது இலங்கை ராணுவம் நடத்திய மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையை தொடர்ந்து முடக்கிவரும் இலங்கை அரசு இந்த தடை நீக்கத்தின் நோக்கத்தை உணர்ந்து ஈழத் தமிழர்களுக்கு அதிகார பகிர்வு. சிங்களவர்களுக்கு இணையாக சம உரிமை மற்றும் கண்ணியத்துடன் தமிழர்கள் வாழ்வதற்குத் தேவையான உறுதியான நடவடிக்கைகளை இனிமேலும் காலம் தாழ்த்தாமல் எடுக்க வேண்டும்.


போரின் போது காணாமல் போன தமிழர்களை அடையாளம் காணுவது. தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமித்துள்ள இலங்கை ராணுவத்தை அங்கிருந்து வெளியேற்றி அந்த நிலங்களை தமிழர்களிடம் திருப்பி ஒப்படைப்பது. மனித உரிமை மீறல்கள் குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவது. இனப்படுகொலைக்கு காரணமானவர்களை தண்டிப்பது. ஈழத்தமிழர்கள் விரும்பும் அரசியல் தீர்வை வழங்குவது உள்ளிட்ட அடுத்தகட்ட நடவடிக்கைகளில் இலங்கை அரசு விரைந்து செயற்பட வேண்டும்.

ஐரோப்பிய யூனியனே தடையை நீக்கியிருக்கின்ற நிலையில் ஈழத் தமிழர்களுக்கான உரிமைகள் கிடைப்பதற்கு மத்திய அரசு உரிய அழுத்தத்தை இலங்கை அரசுக்கு கொடுக்க வேண்டும் என்றும். ஐரோப்பிய யூனியன் உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பின் நல்லெண்ணத்தை முன்னெடுத்துச் சென்று ஈழத் தமிழர்கள் வாழ்வை சூழ்ந்துள்ள காரிருளை நீக்க மத்திய அரசும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உலகமெங்கும் உள்ள தமிழர்கள் மத்தியில் நியாயமான எதிர்பார்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஈழத் தமிழர்கள் விரும்பும் நிரந்தரமான அரசியல் தீர்வு காண்பதற்கு தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.



## விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை இந்திய அரசும் நீக்க வேண்டும் – வைகோ



விடுதலை புலிகள்அமைப்பு மீதான தடையை இந்திய அரசும் நீக்க வேண்டும் என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ வலியுறுத்தி உள்ளார்.

ஐரோப்பிய யூனியனில் கடந்த 2006ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் அமைப்புக்கு தடை விதிக்கப்பட்டது. தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கங்கள் பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பு சேர்க்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கங்கள் பட்டியலில் இருந்து ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் நேற்று முன்தினம் நீக்கியது.

இந்நிலையில், விடுதலைப்புலிகள் அமைப்பு மீதான தடையை இந்திய அரசும்நீக்க வேண்டும்என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

மேலும், விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கத்தால் உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கு நீதி கிடைத்துள்ளது என்று வைகோ தெரிவித்தார்.

## விவசாயிகளின் விசித்திர போராட்டம்



(டில்லி)

டில்லியில் தமிழக விவசாயிகள் நேற்று முன்தினம் வீதியில் உருண்டு போராட்டம் நடத்தினார்கள்.

விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும். வேளாண் விளை பொருட்களுக்கு இலாபகரமான விலை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய தென் இந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் டில்லி ஜந்தர் மந்தரில் தமிழக விவசாயிகள் 2ஆவது கட்டமாக போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

கடந்த 16ஆம் திகதி தொடங்கிய இந்த போராட்டம் நேற்று முன்தினம் 11 ஆவது நாளாக நீடித்தது. ஒவ்வொரு நாளும் விவசாயிகள் நூதன முறையில் போராட்டம் நடத்துகிறார்கள்.

ஜந்தர் மந்தர் பகுதியில் நேற்று முன்தினம் 4 விவசாயிகள் வீதியில் உருண்டு செல்லும் போராட்டத்தில் ஈடுபட்டனர். பிற விவசாயிகள் அவர்களை பின் தொடர்ந்து. 'மோடி ஐயா விவசாயிகள் வயிற்றில் அடிக்காதீங்கய்யா' என்பது போன்ற கோஷங்களை எழுப்பியபடி சென்றனர். இவர்கள் சுமார் 150 மீற்றர் தொலைவில் கேரள அரசு இல்லம் அருகே அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் தடுப்பு வேலி வரை சென்று விட்டு. பின்னர் அங்கிருந்து மீண்டும் போராட்டகளத்துக்கு திரும்பினார்கள்.

அப்போது. போராட்டம் குறித்து அய்யாக்கண்ணு தெரிவித்ததாவது.

பிரதமர் மோடி இந்திய குடிமக்களை தலைநிமிர வைப்பேன் என்று சொன்னார். ஆனால் இன்று விவசாயிகள் வீதியில் நடக்க முடியாமல் உருண்டு செல்லும் நிலைக்கு வைத்து விட்டார்.

எங்களது கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க மத்திய அரசு மறுக்கிறது. எனவே எங்கள் போராட்டம் தொடரும்.

எங்களுடன் பஞ்சாப், அரியானா, ராஜஸ்தான், உத்தரபிரதேசம் மற்றும் மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளும் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளனர் என்றார். (3-8)

## வெள்ளத்தில் சிக்
## ஒரே குடும்பத்தைச்

(அகமதாபாத்)

குஜராத் மாநிலத்தில் மழை வெள்ளத்திற்கு பலியான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 17 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளது.

குஜராத்தில் பனாஸ்காந்தா, சாபார் காந்தா, ஆனந்த், பதான் மற்றும் வால்சாத் மாவட்டங்களில் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளத்தினால் பாதிக்கப் பட்ட பகுதிகளில் மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் மாநில மீட்பு படை, தேசிய பேரிடர் மீட்பு படை, துணை ராணுவம் மற்றும் ராணுவம் தீவிரமாக இறங்கியுள்ளது.

பனாஸ்காந்தா மாவட்டத்தில் வெள்ளநீர் வடிந்துவரும் நிலையில் காரியா கிராமத்தில் பெரும் சேதம் நேரிட்டது தெரியவந்துள்ளது. அந்த கிராமத்தில் பனாஸ் நதியின் கரையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



த்தை

கம்



ஐ[illegible]ரோப்பிய யூனியனின் இந்த தீர்ப்[illegible] தமிழக தலைவர்கள் மு.க.ஸ்டாலின், நெடுமாறன், திருமாவளவன், வேல்முருகன் ஆகியோர் வரவேற்பு தெரிவித்துள்ளனர். (3-8)

## சிக்கி பலியான
## ச் சேர்ந்த 17 பேர்



பேரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. மீட்பு பணியை பார்த்த கிராம மக்கள் என்ன நடக்கிறது என்பதை உணர முடியாமல் மிகவும் அதிர்ச்சியுடன் பார்த்து உள்ளனர்.

சகதியில் இருந்து ஒருவர் பின் ஒருவரது சடலமாக மீட்கப்பட்டுள்ளது. இதேபோல் மேலும் பலர் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு இருக்கலாம், தண்ணீர் வற்றிய பின்னர் அவை வெளியே தெரியவரும் என அஞ்சப்படுகிறது.

இதன்முலம் குஜராத்தில் மழை வெள்ளம் தொடர்பான பல்வேறு விபத்து சம்பவங்களில் பலியானோர் எண்ணிக்கையானது 111 ஆக உயர்ந்துள்ளது. (3-8)

## ஜெருசலேமின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தளர்த்தப்பட்டன

### பலஸ்தீனியர்கள் மகிழ்ச்சிக் கொண்டாட்டம்



(ஜெருசலேம்)

இஸ்ரேல் தலைநகர் ஜெருசலேமில் அமையப் பெற்றுள்ள டெம்பல் மௌன்ட் என அழைக்கப்படும் புனித தலத்தின் வாயிலில் போடப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, நூற்றுக்கணக்கான பலஸ்தீனியர்கள் அதனை கொண்டாடியுள்ளனர்.

குறித்த பாதுகாப்பு ஏற்பாடுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை தளர்த்தப்பட்ட நிலையில், நேற்று அதிகாலையிலேயே பலஸ்தீனிய மக்கள் அதனைக் கொண்டாடியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அல் அக்சா பள்ளிவாசலில் உள்ள பிரதான வாயிற் கதவுகளில் உலோகத்திலான கண்டு பிடிப்புக் கருவிகள் பொருத்தப்பட்டதைத் தொடர்ந்து அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பல ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, குறித்த கண்டுபிடிப்புக் கருவிகளை அகற்றுவது தொடர்பான வாக்கெடுப்பு கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் பாதுகாப்பு அமைச்சரவையில் நடத்தப்பட்டு கண்டு பிடிப்புக் கருவிகளை அகற்றுவதென தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

முஸ்லிம்கள் மற்றும் யூதர்களின் முக்கிய தலமாக டெம்பல் மௌன்ட் புனித தலம் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-8)

## திருநங்கைகள் அகற்றப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம்

(வோஷிங்டன்)

அமெரிக்க இராணுவத்தில் திருநங்கைகள் பணியாற்ற முடியாது என ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்ததைத் தொடர்ந்து அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், சான் பிரான்ஸிஸ்கோ நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க ராணுவத்தில் திருநங்கைகளை சேர்க்கும் திட்டத்தை முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா கொண்டு வந்தார்.



இத்திட்டத்தை பலரும் ஆதரித்தனர். ஆனால், ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பொறுப்பேற்ற பின் அமெரிக்க ராணுவத்தில் திருநங்கைகள் சேருவது வரும் ஜனவரி 1 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

நம்முடைய ராணுவம் மிகப்பெரிய வெற்றிகளில் கவனம் செலுத்த வேண்டும். திருநங்கைகளால் ராணுவத்தில் ஏற்படும் அதிக அளவிலான மருத்துவ செலவுகள் மற்றும் பிளவுகள் இனி இருக்காது. நன்றி என்று குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்ட குறித்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், திருநங்கைகள் மற்றும் ஓரினச்சேர்க்கையாளர்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதாக தெரிவித்த ட்ரம்ப், தற்போது இவ்வாறு தெரிவித்திருப்பது பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.


மேற்படி தீர்மானத்திற்கு உலகளாவிய ரீதியில் கடும் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளதோடு, பல மனித உரிமைக் குழுக்கள் கண்டனமும் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், தற்போது இராணுவத்தில் பணியாற்றி வரும் திருநங்கைகள் உடனடியாக பதவியில் இருந்து நீக்கப்படுவார்களா என்பது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என வெள்ளை மாளிகையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (3-8)

## ரஷ்யா, ஈரான், வடகொரியா மீதான அமெரிக்காவின் பொருளாதார தடைகளும் அவற்றுக்கான அதிர்வலைகளும்

(வோஷிங்டன்)

ரஷ்யா, ஈரான், வடகொரியா ஆகிய நாடுகளுக்கு எதிராக அமெரிக்க பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பில் புதிய பொருளாதார தடைகளை விதிப்பதற்கான மசோதா நிறைவேறியுள்ளது. இதனை எச்சரித்து ரஷ்யாவும் கண்டித்து ஈரானும் பதிலடி கொடுத்துள்ளது.



ரஷ்யா, ஈரான், வடகொரியா மீது புதிய பொருளாதார தடை விதிக்க அமெரிக்க பாராளுமன்றத்தில் மசோதா நிறைவேறியது.

பொதுவாக அமெரிக்க நலனுக்கு எதிராக செயற்பட்டதாகவும், அபாயகரமானதாக விளங்குவதாகவும், அமெரிக்காவையும், அதன் நட்பு நாடுகளையும் பலவீனப்படுத்துவதாகவும் ரஷ்யா, ஈரான், வடகொரியா ஆகிய 3 நாடுகள் மீது குற்றச்சாட்டு உள்ளது. குறிப்பாக அமெரிக்காவில் கடந்த ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில், ரஷ்யா நேரடியாக தலையிட்டதாகவும், உக்ரைன், சிரியா ஆகிய நாடுகளில் தனது இராணுவத்தின் மூலம் ஆக்கிரமிப்பு செய்ததாகவும் கூறி அந்நாட்டின் மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

பயங்கரவாதத்துக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதாகக் கூறி ஈரான் மீதும் பொருளாதார தடை விதிக்க குரல் ஓங்கியது.

வடகொரியாவின் தொடர் அணு ஆயுத சோதனைகள், ஏவுகணை சோதனைகளுக்காக அந்த நாட்டின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்தது.

எனவே இந்த 3 நாடுகள் மீது புதிய பொருளாதார தடைகளை விதிப்பதற்கான மசோதா, அமெரிக்க பாராளுமன்றத்தின் கீழ் சபையான பிரதிநிதிகள்சபையில் கொண்டு வரப்பட்டது. விவாதத்துக்கு பின்னர் மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

குடியரசு கட்சி, ஜனநாயக கட்சி என இரு கட்சி உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவால் இந்த மசோதா அங்கு நிறைவேறியது. மசோதாவுக்கு ஆதரவாக 419 வாக்குகளும், எதிராக 3 வாக்குகளும் கிடைத்தன.

இந்த மசோதாவின் சிறப்பம்சம், 3 நாடுகள் மீதும் ஜனாதிபதி ட்ரம்ப் தண்டனையை குறைப்பதற்கான திறனை கட்டுப்படுத்தக்கூடியதாகும்.

தற்போது இந்த மசோதா செனட் சபைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அங்கும் இந்த மசோதாவுக்கு ஆதரவு உள்ளது. அதே நேரத்தில், வடகொரியா மீது தண்டனை விதிக்க வேண்டுமா என்பதில் விவாதம் உள்ளது. செனட் சபையில் இந்த மசோதா நிறைவேறிய பின்னர் ஜனாதிபதி ட்ரம்ப் கையெழுத்திட்டவுடன் சட்டமாகி விடும்.

**ரஷ்யா எச்சரிக்கை**

மொஸ்கோவுக்கு எதிரான புதிய பொருளாதார தடைகள் குறித்த சட்டமூலத்திற்கு அமெரிக்க பிரதிநிதிகள் சபை ஒப்புதல் அளித்துள்ளமையானது வோஷிங்டனுடன் உறவுகளை முன்னேற்றுவதற்கான வாய்ப்புக்களை அழிக்கும் தீவிர நடவடிக்கை என ரஷ்யா எச்சரித்துள்ளது.

இது குறித்து நேற்று முன்தினம் புதன்கிழமை கருத்து தெரிவித்துள்ள ரஷ்ய பிரதி வெளியுறவுத்துறை அமைச்சர் செர்கெய் லவ்ரோவ், ரஷ்யாவுக்கு எதிரான புதிய பொருளாதார தடைகள் தீர்வாக அமையாது என பலமுறை எச்சரிக்கப்பட்டுள்ளது. தடைகளை கையாள்வதில் மொஸ்கோ சோர்வடைந்துள்ளது. அதுமட்டுமன்றி பொருளாதார தடைகள் ரஷ்யா மற்றும் அமெரிக்காவை தள்ளிவைக்கின்றது' என்று குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவுக்கு எதிரான புதிய பொருளாதார தடைச் சட்டமூலத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எதிர்ப்பு தெரிவித்துள்ள போதிலும் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் கடந்த செவ்வாய்க்கிழமை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ரஷ்யாவுடனான உறவை மேம்படுத்துவதற்கான ட்ரம்பின் நம்பிக்கையை இந்த சட்டமூலம் சிக்கலாக்கலாம் என கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**ஈரானின் பதிலடி**

ரஷ்யா, ஈரான் மற்றும் வடகொரியா உள்ளிட்ட நாடுகளுக்கு எதிராக அமெரிக்க பிரதிநிதிகள் சபை பொருளாதாரம் உள்ளிட்ட தடைகளை விதிப்பதற்கு வழங்கியுள்ள ஒப்புதலை ஈரானிய ஜனாதிபதி ஹசன் ரொஹானே கண்டித்துள்ளார்.

தெஹ்ரானில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் உரையாற்றிய அவர் இந்த தடைகளுக்கு எதிராக தமது நாட்டு நாடாளுமன்றம் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் தெரிவித்தார்.

ஈரானின் தேவைகளுக்கு ஏற்ப சில தீர்மானங்களை எடுப்பதாவும், அதற்கு எதிரான நடவடிக்கைகளை கவனத்தில் கொள்வதில்லை எனவும் தெரிவித்தார்.

அமெரிக்கா ஈரானின் இஸ்லாமிய நடைமுறைக்கு விரோதமானது மட்டுமல்ல, ஈரானிய தேசத்தின் எதிர்ப்பிற்கும் எதிரானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 40 ஆண்டுகளில், ஈரானியர்கள் அமெரிக்க அரசியல்வாதிகள் மற்றும் பிரசார கருவிகளின் பொருளாதார, அழுத்தம் மற்றும் தவறான குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ள அவர் ஈரானிய தேசத்தின் உரிமைகள் மற்றும் இஸ்லாமிய கோட்பாடுகளை அமெரிக்கா மீறும்வகையில் செயற்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (3-8)

## புல்லட் புகையிரதங்களை மணிக்கு 350 கி.மீ. வேகத்தில் இயக்க சீன அரசு திட்டம்

(பீஜிங்)

சீனாவில் இயக்கப்பட்டு வரும் புல்லட் புகையிரதங்களை மணிக்கு 350 கி.மீ. வேகத்தில் இயக்க அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளதாக சீன ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு கிழக்கு ஜேஜியாங் பகுதியில் நிகழ்ந்த ஒரு புகையிரத விபத்தில் 30க்கும் அதிகமானோர் மரணமடைந்தனர். இந்த விபத்திற்கு புகையிரதம் அதிக வேகத்தில் இயக்கப்படுவதே [illegible]கண்டறியப் பட்டதையடுத்து புகையிரதத்தின் வேகத்தை மணிக்கு 300 கி.மீற்றராக சீன அரசு குறைத்தது.

இந்த நிலையில், புல்லட் புகையிரதங்களின் வேகத்தை மறுபடியும் மணிக்கு 350 கி.மீற்றராக அதிகரிக்க சீன அரசு திட்டமிட்டுள்ளதாக சீன ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. பீஜிங் - சாங்காய் இடையே இயக்கப்படும் புகையிரதங்களின் வேகத்தை வருகிற செப்டம்பர் மாதம் முதல் மணிக்கு 350 கி.மீ. வேகத்தில் இயக்க சீன அரசு திட்டமிட்டுள்ளதாகவும், இதன்மூலம் தற்போதைய பயண நேரமான 6 மணி நேரம் என்பது நான்கரை மணி நேரமாக குறையும் எனவும் அந்த ஊடகம் வெளியிட்ட செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் சீனாவில் அறிமுகப்படுத்தப்பட்ட புல்லட் புகையிரதங்கள் மணிக்கு 400 கி.மீ. வேகம் வரை செல்லக்கூடியது. அந்த புகையிரதங்களையே இத்திட்டத்திற்கு பயன்படுத்தவுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடி நேரத்தில் சீனா தான் உதவியது

## இராஜாங்க அமைச்சர் ருவான் நினைவுபடுத்தல்



(கொழும்பு)

தீவிரவாதத்தைத் தோற்கடிக்க உதவிய சீனாவுக்கு இலங்கை அரசாங்கம் பாராட்டுத் தெரிவித்துள்ளது. கொழும்பு காலிமுகத்திடல் விடுதியில் நேற்று முன்தினம் நடந்த சீன இராணுவத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார். மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் இலங்கைக்கு சீனா தான் உதவி வழங்கியது என்றும் அவர் தெரிவித்தார்.

ஒரே சீனா என்ற கொள்கையை இலங்கை தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்றும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீனாவுக்கு மேற்கொண்டிருந்த பயணத்தின் போது இதனை வலியுறுத்தியிருந்தார் என்றும், ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

சீன இராணுவத்தின் ஆண்டு விழாவை கொழும்பில் உள்ள இலங்கைத் தூதரகம் பெருமெருப்பில் கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்னும் இரண்டு நாட்களில் தெரியும்

# ராஜபக்ஷர்கள் கைது செய்யப்படுவதை தடுக்க தொடர்ந்தும் முயற்சி - ராஜித

(கொழும்பு)

ராஜபக்ஷர்களை கைது செய்வதைத் தடுக்கும் முயற்சியே தற்போது முன்னெடுக்கப்படுகின்றது.

எனினும், என்ன நடக்கப்போகின்றது என்பது தொடர்பில் இன்னும் இரண்டு நாட்களுக்குள் தெரியுமென, அமைச்சரவை இணைப் பேச்சாளர்களில் ஒருவரும் அமைச்சருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.



அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவிக்கையில், "அம்பாந்தோட்டை துறை முகத்தை முழுமையாக மூடிவிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மாலபேயிலுள்ள சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியை மூடிவிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

"கடந்த ஆட்சியின்போது. மேற்கொள்ளப்பட்ட அரச சொத்துகள் மோசடி தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துவருகின்றநிலையில் தங்களைக்கைதுசெய்வதைத் தடுப்பதற்கே, அவ் வாறானவர்கள் தேரர்களின் ஊடாக முயற்சிக்கின்றனர்" என்றார்.

இதன்போது குறுக்கிட்ட ஊடகவியலாளர், அவ்வாறானவர்கள் என்றால் யாரென்றார்? அவர்கள்தான், தேசப்பற்றாளர்கள் என்று பதிலளித்தார்.

இதேவேளை, முடிவெடுப்பதில் அரசாங்கத்துக்கு, முதுகெலும்பு இல்லையென குற்றம் சுமத்துகின்றனரே, என்ற கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித, நல்ல கேள்வி... நல்ல கேள்வி... அதுதான், நேற்று முதல், முதுகெலும்புள்ள நடவடிக்கையை எடுத்துள்ளோம்" எனப் பதிலளித்தார். (இ-7)

# அத்தியாவசிய சேவை அரச கொள்கையல்ல ஓர் அடக்கு முறை

## மகிந்த குற்றச்சாட்டு



(கொழும்பு)

பெற்றோலியத் துறையின் சகல நடவடிக்கைகளையும் அத்தியாவசிய மக்கள் சேவையாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியதன் நோக்கம் தொழிற்சங்க நடவடிக்கைக்கு பதிலளிப்பதற்காகவே ஆகும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார். டுவிட்டர் வலைத்தளத் தினூடாக அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இந்த மக்கள் அத்தியாவசிய சேவையை அரச கொள்கையாக அறிமுகம் செய்யவில்லை.

தொழிற்சங்கங்களை ஒடுக்கும் ஒரு நடவடிக்கையாகவே கைக்கொண்டுள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

எதிர்ப்பைத் தெரிவிப்பவர்களின் தேவைகளுக்கு, காது தாழ்த்தி, அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதே சிறந்த வழி எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### பேசிக்கொண்டிருக்கும் போது...

எனக்கு நஸீர் என்று ஒரு நண்பர் இருக்கிறார். இவர் பிரான்ஸில் வசிக்கிறார். இவரிடம் ஒரு பழக்கம். இவருடன் பேசிக் கொண்டிருக்கும் போது இவர் சொல்வதை நான் கவனமாகக் கேட்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார். சற்றே திரும்பிப் பார்த்தாலும் சரி, லேசாகக் கவனம் திசை திரும்பினாலும் சரி, அவர் சொன்ன விடயத்தைச் சரிவர வாங்கிக் கொள்ளாமல் அபத்தமாக ஏதும் கேள்வி கேட்டாலும் சரி, உடனே அவர், அட போங்க சார் உங் களுக்குப் போய் இதையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறேனே!என்று சொல்லிவிட்டு, சடன் பிரேக் போட்டதைப் போல சொல்லிக் கொண்டிருந்ததை அப்படியே நிறுத்தி விடுவார்.

செட்டி நாட்டரசர்முத்தையவேளிடம் இன்னும் கூடக் கவனமாக இருக்க வேண்டும். பேசிக் கொண்டிருக்கும் போதே, இப்ப நான் என்ன சொன்னேன்? என்று கேட்பார். சரியாகக் கவனிக்காமலும் கிரகித்துக் கொள்ளாமலும் இருந்தால் என்னாவது?

இந்த விடயத்தில் என்னை மிகவும் மாற்றியவர்கள் இந்த இருவர்.

மற்றவர்கள் சொல்வதைக் கவனமாகக் கேட்பது என்பது நாம் அவசியம் வளர்த்துக் கொள்ள வேண்டிய பண்புகளுள் ஒன்று.

என் பெயர் ரஸானுதீன் என்று அவர் அறிமுகப்படுத்திக் கொண்டு இரண்டு நிமிடம்தான் ஆகியிருக்கும்.

உங்க பேரென்ன?என்று மூன்றாவது நிமி டமே நாம் கேட்போம். அறிமுகப்படுத்திக் கொண்டவருக்கு என்னவோ போல் ஆகிவிடும். கவனத்துடன் கேட்டிருந்தால் இதைவிட அபூர்வமான பெயரைக்கூட நம்மால் நினைவில் கொள்ள முடியும். புறப்படுகிறேன் மிஸ்டர் ரஸானுதீன், உங்களைச் சந்தித்ததில் எனக்குப் பெருமகிழ்ச்சி என்று சொல்லிவிட்டுக் கிளம்புங்கள் பார்ப்போம். மனிதர் அசந்து விடுவார் அசந்து.

நான் நிறையப் பேரை கவனித்திருக்கிறேன். நம்மிடம் பேசிக் கொண்டு இருப்பார்கள். திடீரென்று சிந்தனை வயப்பட்டு விடுவார்கள். திரும்பவும் சிந்தனை உலகிலிருந்து இறங்கி வந்து இப்ப என்ன சொன்னீங்க?என்பார்கள்.

நம்மில் பலரிடம் இந்தக் குறைபாடு இருக்கிறது. அதாவது உடல் இங்கு. மனம் எங்கோ!

ஒருவர் என் மகனுக்கு உடம்பு சரியில்லை; எனவே நேற்று முன்தினம் நான் ஆபிஸிற்கு வரவில்லை. நீங்கள் போன் செய்தீர்களாம். என்ன விடயம்? என்று கேட்கிறார் என்று வைத்துக் கொள்வோம்.

பெரும்பாலானவர்கள், என்ன விடயம்னா... என்று தானே ஆரம்பிப்பார்கள்! நாம் இத்தவறை செய்யக் கூடாது. உங்க பையனுக்கு இப்போது தேவலையா? என்பதுதான் நம் கேள்வியாக இருக்க வேண்டும்?

மற்றவர்கள் ஏன் இத் தவறை செய்கிறார்கள் தெரியுமா? அவர்களுக்கு அவர்கள் விடயம்தான் முக்கியம். மற்ற எந்தச் செய்தியும் அவர்களது காதில் ஏறவே ஏறாது. சேணம் கட்டிக் கொண்ட குதிரை முன் பக்கத்தை மட்டும் பார்ப்பது போல தங்கள் விடயத்தை மட்டுமே இவர்கள் தலைப்புச் செய்தி போல் கேட்டுக் கொள்வார்கள். மற்றவற்றை விட்டு விடுவார்கள்.

மற்றவர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போது சிலர் தலையைச் சொறிந்து கொண்டும் உட்கார்ந்திருக்கும் நாற்காலி யைக் குடைந்து கொண்டும் இன்னும் சில அங்க சேஷ்டைகளைச் செய்து கொண்டும் இருப்பார்கள். இவர்களாலும் விடயத்தைக் கிரகிப்பது கடினம்.

சிலர் என்ன சொன்னாலும் அக்கறை இல்லாமல் கேட்டுக் கொள்வார்கள். இது கூடாது. உரையாடல் என்பது உயிரோட்டத்துடன், ஓ! அப்படியா? அடடே! என்று இருக்க வேண்டும்.

இங்கிலாந்தைச் சேர்ந்த அன்ட்ரூ என்பவர் வெற்றிகரமான மனிதர்களையெல்லாம் ஆராய்ந்து அவர்களது வெற்றிக் கான காரணங்களைக் கண்டு பிடித்துச் சொல்லியிருக்கிறார். அவர் சொல்லும் ஒரு காரணம். மற்றவர்கள் சொல்வதை இவர்கள் கவனமுடன் கேட்கிறவர்களாக இருக்கிறார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2008 வினாத்தாள் பகுதி-2

29. உருவிலுள்ள பொலிஸ்காரரின் செய்கை எதனைக் குறிப்பிடுகின்றது.



1) பின்னால் இருந்து வரும் வாகனங்களை மாத்திரம் நிறுத்துக.
2) முன்னால் இருந்து வரும் வாகனங்களை மாத்திரம் நிறுத்துக.
3) முன்னால் இருந்தும் பின்னால் இருந்தும் வரும் எல்லா வாகனங்களையும் நிறுத்துக.
4) முன்னால் இருந்தும்பின்னால் இருந்தும் வரும் எல்லாவாகனங்களையும் நிறுத்த வேண்டாம்.

30. போக்குவரத்துக்காக சைக்கில்களைக் கூடுதலாகப் பயன்படுத்துவதுடன் தொடர்புபட்ட பிழையான கூற்று
1) சுற்றாடல் மாசடைவதைக் குறைக்கலாம்.
2) போக்குவரத்துச் செலவுகளைக் குறைக்கலாம்.
3) விபத்துக்களைக் குறைக்கலாம்.
4) நோய்களைக் குறைக்கலாம்.

31. சந்திர கிரகணம் ஆரம்பிக்கும்போது
1) சந்திரன் படிப்படியாக கருமையடைகின்றது.
2) சந்திரன் ஒரே தடவையில் கருமையடைகின்றது.
3) சந்திரனின் பிரகாசம் படிப்படியாக அதிகரிக்கின்றது.
4) சந்திரனின் பிரகாசம் ஒரேதடவையில் அதிகரிக்கின்றது.


32. ஒருவருடைய பாதத்தில் துருப்பிடித்த ஆணி குத்தினால் அவருக்குத் தாமதமின்றிக் குடிக்கக் கொடுப்பதற்கு உகந்த மருந்து
1) கொத்தமல்லி 2) மரமஞ்சள் 3) வில்வம் பூ 4) ஆவரசம் பூ

33. நீர் நிரம்பிய ஒரு போத்தலின் வாயை தேநீர் வடியினால் மூடி உருவில் உள்ளவாறு கவிழ்த்துப் பிடிக்கும்போது போத்தலில் உள்ள நீர்




1) துளித்துளியாக விழும்
2) தனி அருவிபோல் கீழ் நோக்கிப் பாயும்
3) மெல்லிய அருவிபோல் விசிறப்படும்
4) விழாமல் இருக்கும்

34. நீர் நிரம்பிய கண்ணாடிக் குவளையின் அடியில் மாபிள் ஒன்று உருவில் உள்ளவாறு இருக்கின்றது. நீர்மட்டத்துக்கு மேலே கண்ணை வைத்துப் பார்க்கும்போது அந்த மாபிள் தெரிவது




1) குறித்த அளவுக்குச் சம்மாக குறித்த ஆழத்தில் இருப்பதுபோல்
2) குறித்த அளவுக்குச் சமமாக குறைந்த ஆழத்தில் இருப்பது போல்
3) குறித்த அளவுக்குப் பெரிதாக குறித்த ஆழத்தில் இருப்பதுபோல்
4) குறித்த ஆழத்திலும் பெரிதாக குறைந்த ஆழத்தில் இருப்பது போல்


35. கடதாசி சுற்றப்பட்ட ஒரு திண்மம் A யும் சுருள் கம்பி சுற்றப்பட்ட ஒரு இரும்பாணி B யும் உரு 1 இல் காணப்படுகின்றன.கம்பியின் இரு நுனிகளையும் ஒரு உலர்மின் கலத்துடன் தொடுக்கும்போது A இருக்கும் விதம் உரு 2 இல் காணப்படுகின்றது. Aஆனது




1) பித்தளைத துண்டாகும்.
2) இரும்புத் துண்டாகும்.
3) அலுமினியத் துண்டாகும்
4) காந்தத் துண்டாகும்.




36. ஒரு மின்குமிழை ஒரு உலர் மின்கலத்தைத் தொடுமாறு வைத்து கம்பித் துண்டு ஒன்றை பயன்படுத்தி ஒளிரச் செய்யத்தக்க ஒரு விதம் உரு 1 இல் காணப்படுகின்றது. அதே கம்பியைப் பயன்படுத்தி மின்குமிழை ஒளிரச் செய்யத்தக்க வேறோர் விதத்தை உரு 2 இன் அடைப்புக்குள்ளே வரைக.




◆ கட்டடத்தை அமைக்கப் பயன்படுத்தப்படும் சில உபகரணங்கள் கீழே காணப்படுகின்றன. பின்வரும் செயல்கள் ஒவ்வொன்றுக்கும் பயன்படுத்தப்படும் உபகரணத்தின் இலக்கத்தை உரிய வெற்றிடத்தில் எழுதுக.




37. சுவரைக் கட்டும்போது நிலைக்குத்து இயல்பைப் பேணல் ..............................
38. வளையின் கிடை இயல்பைப் பேணல் ..............................
39. சாந்தையும் கொங்கிரீட்டையும் கலத்தல் ..............................

உருவில் ஒரு நான்முகி காணப்படுகின்றது.



1) முகங்களின் எண்ணிக்கை யாது? ...............
2) உச்சிகளின் எண்ணிக்கை யாது ...............

41. "இருபதாயிரத்து ஐம்பது" என்பதை இலக்கங்களில் எழுதுக ...............


42. பயணத்தை ஆரம்பிக்கும் போது ஒரு வாகனத்தின் மானியில் இலக்கங்கள் பின்வருமாறு பதியப்பட்டிருந்தன.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 0 | 1 | 2 | 9 | 9 | 0 | km |

வாகனம் மேலும் 10 கி.மீ சென்றபின்னர் மானியில் பதிவாகும் இலக்கங்களை வெற்றுக் கூடுகளினுள்ளே எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

43. உருவில் உள்ள தராசின் தட்டு A இல் ஒரு குண்டும் தட்டு B இல் 1 kg படிக்கல் ஒன்றும் உள்ளன. உருவில் உள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வரும் வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.





குணடின் நிறை 1 kg இலும் ......................

45. ஒரு பூரணமற்ற சிட்டை கீழே காணப்படுகின்றது அதிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.

| பொருள் | எண்ணிக்கை | ஒன்றின் விலை | | பணம் | |
|---|---|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் | ரூபாய் | சதம் |
| பயிற்சிப் புத்தகங்கள் | 6 | 20 | 00 | 120 | 00 |
| பென்சில் | 2 | ........ | ....... | 16 | 50 |
| பேனை | ........ | 9 | 00 | 27 | 00 |
| கடித உறை | 3 | ........ | ........ | 4 | 50 |
| | | | மொத்தம் | ......... | ......... |

45.1 kg அரிசியின் விலை ரூபாய் 48 ஆகும். 2 kg 500 g அரிசியின் விலை எவ்வளவு?
..............................

46.ஒரு தோட்டத்துக்கு வரும் நான்கு வகைப் பறவைகளைக் குறிப்பிடும் பூரணமற்ற வரைபு உருவில் காணப்படுகிறது.அங்கு வரும் கிளிகளின் எண்ணிக்கை. அங்கு வரும் மைனாக்களின் எண்ணிக்கையினதும் புறாக்களின் எண்ணிக்கையினதும் கூட்டுத் தொகைக்குச் சமம். வரைபின் உரிய நிரலில் கிளிகளின் எண்ணிக்கையைக் குறித்து அந்த நிரலை நிழற்றுக.




47. ஒரு தொட்டியில் நிரப்பத்தக்க நீரின் கனவளவு 8750 ml ஆகும். அத்தொட்டியில் தற்போது 3695 l நீர் உள்ளது. எஞ்சியுள்ள பகுதியை நிரப்பத் தேவையான நீரின் கனவளவு யாது? ........................................

48.ஒரு தேக்கரண்டி கொள்ளத் தக்க திரவத்தின் கனவளவு 5 ml ஆகும். ஒரு நோயாளிக்கு ஒரு தடவைக்கு 2 தேக்கரண்டி வீதம் ஒரு நாளுக்கு மூன்று தடவை மருந்து கொடுக்கப்பட்டது. அவருக்கு ஒரு நாளைக்கு கொடுக்கப்பட்ட மருந்தின் கனவளவு ..............................


49. 5 m நீளமுள்ள ஒரு நாடாவிலிருந்து ஒவ்வொன்றும் 20 cm நீளமுள்ள துண்டுகள் வெட்டப்பட்டன. நாடாவில் எஞ்சியுள்ள பகுதியின் நீளம் யாது? ........................

50. காலை 10.00 இற்குப் புறப்படக் குறிக்கப்பட்டிருந்த பேருந்து ஒன்று 20 நிமிடங்களின் பின்னர் பயணத்தை ஆரம்பித்தது. அப்பயணத்திற்கு 4 மணித்தியாலம் 45 நிமிடங்கள் எடுத்தது.பேருந்து பயணத்தை பூர்த்தி செய்த நேரம் யாது? ..............................

51.கூட்டுக. $\frac{1}{6} + \frac{2}{3}$

52. 320 புத்தகங்களை ஒருவருக்கு 3 வீதம் எத்தனை பேருக்குப் பகிர்ந்து கொடுக்கலாம். மீதி எவ்வளவு? ....................................

53. ஆறு நகரங்களைத் தொடுக்கும் ஒரு பாதையின் படம் உருவில் காணப்படுகிறது. ஒருவர் நகரம் A இலிருந்து தொடங்கி B,C,D,E,F ஆகிய நகரங்களினூடாக பாதை வழியே சென்று மறுபடியும் A இற்கு வருகிறார். அவர் சென்ற மொத்தத் தூரம் யாது? ........................





54. முரளியும் அவனது நண்பர்களும் ஆற்றுக்குக் குளிக்கச் சென்றனர். அவர்கள் ஆற்றங்கரையில் வழமைபோல் விளையாடிவிட்டுக் குளிப்பதற்காக நீரில் இறங்கினர். குளித்துக்கொண்டிருக்கையில் அங்கே ஒரு முதலை அவர்களை நோக்கி வருகிறது.....

(இது ஒரு நிகழ்ச்சியின் தொடக்கமாகும் இதன் பின்னர் நடைபெறுவதாக நீர் கருதும் விடயங்களை ஒவ்வொன்றும் ஐந்து சொற்களுக்குக் குறையாத ஆறு வாக்கியங்களில் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாக அமையும் விதத்தில் எழுதுக.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2009 வினாத்தாள் பகுதி-1

♦ முதல் உருவுக்குச் சமமான உருவைத் தெரிவு செய்க.

01.



02.





ஒவ்வொரு கதையிலும் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

03. பூ விரிகின்றது
மணம் வீசுகின்றது
பூ வாடுகின்றது
இதழ் ...............
1) ஆடுகின்றது 2) விழுகின்றது 3) பறக்கின்றது

04. பிள்ளைகளின் கூட்டம்
இருக்கும் இடம்
பூக்கள் ஆயிரம்
மலர்ந்த ..........
1) தளம் 2) களம் 3) குளம்

♦ தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்றை வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.

05.




06.




♦ பின்வரும் வாக்கியங்கள் கருத்துள்ளனவாக இருப்பதற்குச் செய்ய வேண்டிய மாற்றத்தைத் தெரிவு செய்க.

07. வண்ணத்துப் பூச்சி ரோசா மலரில் நீரைக் குடிக்கின்றது.
1) வண்ணத்துப் பூச்சி என்பதற்குப் பதிலாக 'குளவி' என்பதை இடுதல்
2) வீதியில் என்பதற்குப் பதிலாக 'தாமரை' என்பதை இடுதல்
3) நீரை என்பதற்குப் பதிலாக 'தேனை' என்பதை இடுதல்


08. பிள்ளை வீதியில் பாடம் படிக்கின்றது
1) பிள்ளை என்பதற்குப் பதிலாக 'மகன்' என்பதை இடுதல்
2) வீதியில் என்பதற்குப் பதிலாக 'அறையில்' என்பதை இடுதல்
3) பாடம் படிக்கின்றது என்பதற்குப் பதிலாக 'ஆரம்பிக்கின்றது' என்பதை இடுதல்

♦ கூடுகளினுள்ளே பந்துகள் இடப்பட்டுள்ள விதத்திற்கேற்ப வெற்றுக் கூட்டுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

09.



10.




♦ ஒவ்வொன்றும் ஒரு சதுர மீற்றர் பரப்பளவுள்ள 16 சதுரங்களை பின்வரும் உரு கொண்டுள்ளது.




11. அதில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர cm

12. நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு மொத்தப் பரப்பளவில் என்ன பின்னம்?
1) 1/4 2) 1/2 3/4

♦ உருவில் காணப்படும் வடிவம் உள்ள தாளை முதலில் முறிந்த கோடு வழியே இரண்டாக மடித்து, இரு பக்கங்களையும் சேர்த்துப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டிய பின்னர் கிடைக்கும் முக்கோணிகளின் எண்ணிக்கையும், நாற்பக்கலின் எண்ணிக்கையும் முறையே


13.




1) 4 உம் , 2 உம்
2) 3 உம், 1 உம்
3) 2 உம், 2 உம்

14.




1) 3 உம் , 1 உம்
2) 3 உம், 2 உம்
3) 4 உம், 2 உம்

♦ 15. கோலத்திற்கேற்ப அடுத்துவரும்பொருத்தமான உரு , 1,2,3 அகியவற்றிடையே யாது?

15.




16.



17. வெற்றிடத்துக்குப் பொருத்தமான உரு யாது?





18.

இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?
1) 12 2) 17 3) 29

19.


இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?
1) 17 2) 29 3) 58

20. இலக்கங்கள் உள்ள சில்லு நேர் கோடு வழியே முன்னோக்கி உருளும்போது சந்திக்கும் ? குறி இடப்பட்டுள்ள கூடுகளுக்குப் பொருத்தமான எண்கள் முறையே




1) 2, 9 ஆகும்
2) 3, 2 ஆகும்
3) 3, 9 ஆகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 99 அமர்வுகளிலும் நாகரிகமாக நடந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள்

## சிவஞானம் புகழாரம்; 100 ஆவது அமர்வும் பிரயோசனமற்றது - தவநாதன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கடந்த 99 அமர்வுகளிலும் நாகரிகமாக நடந்து கொண்டதாக வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். எனினும் 100 ஆவது அமரவும் பிரயோசனமற்ற முறையிலேயே நடைபெறுவதாக எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ். தவநாதன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபையின் நூறாவது அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். வடக்கு மாகாண சபை கடந்த காலங்களில் பல்வேறு பிரேரணைகளை நிறைவேற்றி இருந்ததோடு பல்வேறு தீர்மானங்களையும் எடுத்திருந்தது.

இதில் இனப்படுகொலை தொடர்பான தீர்மானம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இந்த தீர்மானத்திற்கு ஆரம்பத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்த போதிலும், பின்னர் எமக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். கடந்த 99 அமர்வுகளிலும் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எமக்கு மிகுந்த ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்.

இவ்வாறு எதிர்க்கட்சி உறுப்பினர்க்ள் எமக்கு ஆதரவு வழங்கியிருந்ததற்கு நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

ஒரேயொரு விடயத்தை தவிர ஏனைய விடயங்கள் அனைத்தும் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கு குறிப்பாக எதிர்க்கட்சி தலைவருக்கும் விசேடமாக நன்றியை தெரிவித்து கொள்கிறேன். இந்த அமர்வுகளில் மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் நாகரிகமாக நடந்து கொண்டிருந்தனர்.

இனியும் சபை அமர்வுகள் ஒழுக்கமாகவும் நாகரிகமாகவும் நடைபெறும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த அமர்வில் உறுப்பினர் ரவிகரனால் கொண்டு வரப்பட்ட பிரேரணை குறித்து கருத்து தெரிவித்த உறுப்பினர் அ.பரஞ்சோதி. வடக்கு மாகாண சபையில் முறையற்ற பிரேரணைகள் கொண்டு வரப்படுகின்றன. மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கொண்டுவரப்பட வேண்டிய விடயங்கள் மாகாண சபையில் கொண்டு வரப்படுவதாக பரஞ்சோதி கூறினார்.

இதற்கு பதிலளித்த ரவிகரன் மாவட்ட அபிவிருத்தி கூட்டங்களில் கொண்டுவரப்படும் எல்லா விடயங்களும் நிறைவேற்றப்படுவதில்லை. அதனால் தான் இங்கு கொண்டு வரப்படுகின்றன என கூறினார். (இ-4)

## நெவில் வைத்தியசாலை பராமரிப்புக்கு மாதாந்தம் ரூ.200 மில்லியன் செலவு

நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையின் பராமரிப்பிற்காக மாதாந்தம் அரசாங்கம் 200 மில்லியன் ரூபா செலவிடவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல்மாதாந்தம்இந்த தொகை ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. மேலும் மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட ஏனைய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக 50 மில்லியன் ரூபா மாதாந்தம் வழங்கப்பட உள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலையின் நிர்வாக சபை தலைவராக வைத்தியர் அஜித் மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வெளிநாட்டுப் பெண்களின் இலங்கை வருகை அதிகரிப்பு

2016 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 2.05 மில்லியன் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு வருகை தந்தவர்களில் அதிகமானோர் பெண்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருகை தந்த 2.05 மில்லியன் சுற்றுலாப் பயணிகளில் 1.12 மில்லியன் பேர் பெண்கள் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


குறித்த எண்ணிக்கை 54.7 சதவீதம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த வருடத்தை விட இவ்வருடம் கூடுதலான பெண் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு விஜயம் செய்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1144

Search for people, places and things — Nagendram Home

**வரதன்**




**கேசவன்**




**வர்சா**





**குயிலினி**




**கயாழினி**




**தனுசா**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடியான தருணத்தில் போராட்டம் நடத்தப்படுகிறது

## பிரதமர் ரணில் விசனம்



நெருக்கடியான தருணத்தில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தொழிற்சங்கம் போராட்டம் நடத்தி வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

டெங்கு நோயை இல்லா தொழிப்பதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், இவ்வாறு போராட்டம் நடத்துவது பொருத்த மற்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

டெங்கு ஒழிப்பு தொடர்பில் ஊடகங்களும் தங்களுக்கு இடையிலான போட்டியை கைவிட்டு ஒத்துழைப்பு வழங்கி வருவதாகத் தெரிவித்துள்ளார். பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் போராட்டம் நடத்தினால் அது நாட்டை பல்வேறு வழிகளில் பாதிக்கும் என அவர் தெரிவித்தார். (இ-7)




# அம்பாந்தோட்டை துறைமுக பகுதியில் இராணுவச் செயற்பாடுகளுக்குத் தடை

## சீனாவுடன் இலங்கை உடன்படிக்கை

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் எந்தவொரு இராணுவ செயற்பாடுகளையும் முன்னெடுக்கத் தடை விதிக்கும் வகையிலேயே, சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உடன்பாடு கையெழுத்திடப்படும் என்று அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவின் மேர்ச்சன்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக, செய்து கொள்ளப்படவுள்ள உடன்பாட்டின் வரைவிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுக சொத்துக்களையோ, அல்லது சுற்றியுள்ள பிரதேசத்திலோ -இலங்கையின் இறையாண்மைக்குட்பட்ட தரை, வான் அல்லது கடல், கரையோரம் அல்லது ஆழ் கடலில் எந்தவொரு இராணுவ இயல்புடைய செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு கடுமையான தடை விதிக்கப்படும்.

-உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் துறைமுக சொத்து மற்றும் பொதுவான பயனர் வசதிகள் ஆகியவை துறைமுக மற்றும் கடல் சார்ந்த வணிக நோக்கத்திற்காக கண்டிப்பாக வரையறுக்கப்பட வேண்டும்.

துறைமுகமல்லாத மற்றும் கடல்சாராத வர்த்தக செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்கு கடுமையான தடை விதிக்கப்படும்.

இராணுவத்தினருடன் தொடர்புடைய செயற்பாடுகள், அல்லது எந்த வகையான, இராணுவ சூழலுடன் தொடர்புடைய செயற்பாடுகளையும் இங்கு மேற்கொள்ள முடியாது.

இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு மாத்திரமே உரிமை உள்ளது.

போர்க்கப்பல்களையோ, நீர்மூழ்கிகளையோ கொண்டு வருவதற்கும், நிறுத்தி வைப்பதற்கும், எந்த இராணுவ கருவிகள் மற்றும் இயந்திரங்களை களஞ்சியப்படுத்துவதற்கும், தொலைத் தொடர்பு வலையமைப்புகளை நிறுவுவதற்கும் தேவையான அனுமதிகளை வழங்கும் அதிகாரம் இலங்கை அரசாங்கத்துக்கு மட்டுமே உள்ளது என்றும் அந்த வரைவு ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தில் இந்த உடன்பாடு தொடர்பாக இன்று விவாதம் நடத்தப்படவுள்ளது. எனினும் இதன் மீது வாக்கெடுப்பு நடத்தப்படாது என்று கூறப்படுகிறது.

சீன நிறுவனத்துடன், நாளை சனிக்கிழமை இந்த உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்தப் புதிய உடன்பாட்டுக்கு அமைய துறைமுகத்தின் 69.55 வீத பங்குகள் சீன நிறுவனத்திடம் வழங்கப்படவுள்ளன. 30:45 வீதமான பங்குகள் இலங்கை அரசாங்கத்திடம் இருக்கும். இதற்காக இரண்டு புதிய நிறுவனங்கள் உருவாக்கப்படும்.

606 மில்லியன் டொலர் முதலீட்டில் ஆரம்பிக்கப்படும், அம்பாந்தோட்டை அனைத்துலக துறைமுக சேவைகள் நிறுவனத்தில், 50.7 வீத பங்குகளை இலங்கை துறைமுக அதிகார சபை கொண்டிருக்கும். 49.3 வீத பங்குகள் சீன நிறுவனத்துக்கு வழங்கப்படும்.

794 மில்லியன் டொலர் முதலீட்டில் ஆரம்பிக்கப்படும், அம்பாந்தோட்டை அனைத்துலக துறைமுக குழும நிறுவனத்தில் 85 வீத பங்குகளை சீன நிறுவனமும் 15 வீத பங்குகளை இலங்கையும் கொண்டிருக்கும்.

99 ஆண்டுகளின் பின்னர், சீன நிறுவனத்தின் அனைத்துப் பங்குகளும் தலா ஒரு டொலருக்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு மாற்றப்படும் என்றும் இந்த உடன்பாட்டு வரைவில் கூறப்பட்டுள்ளது. (இ-7)

# போதைப்பொருள் தடுப்பு தீவிரம்; கடற்படைக்கு ஆளுநர் பாராட்டு



யாழ்.குடாநாட்டிற்குள் போதைப் பொருள் கொண்டு வரப்படுவதைத் தடுப்பதற்கு கடற்படை மேற்கொண்டுவரும் பணி களை பாராட்டுவதாக வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட்கூரே தெரிவித்துள்ளார். வடமாகாண கடற்படைத் தளபதி ஜெயந்த டி.சில்வாவின் அழைப்பின்பேரில் காங்கேசன்துறை கடற்படைத்தளத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த வடமாகாண ஆளுநர் கடற்படை அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். தென்னிலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்காக கடற்படையினர் ஒன்றிணைந்து பொருட்களை சேகரித்து என்னிடம் வழங்கியமைக்காக இந்த சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிப்பதாக குறிப்பிட்ட ஆளுநர் யாழ்.குடாநாட்டில் அதிகரித்துவரும் போதைப் பொருள் வியாபா ரத்தினை கட்டுப் பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு கடற்படை மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை பாராட்டுவதாகத் தெரிவித்தார். இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுப்பதற்கும், தடைசெய்யப்பட்ட மீன்பிடி நடவடிக்கையில் ஈடு படுவோரை கைது செய்வதிலும் கடற்படை காட்டிக்கொள்ளும் அக்கறை திருப்தி அளிக்கின்றது. அதேபோன்று தீவகத்தில் வாழும் மக்களின் கடல் போக்குவரத்திலும் கடற்படையினரின் சேவை அளப்பரியது எனத் தெரிவித்தார். அண்மையில் விடுவிக்கப்பட்ட மயிலிட்டி துறைமுகம் மற்றும் காரைநகர் துறைமுகங்கள் உள்ளிட்டவற்றையும் ஆளுநர் பார்வையிட்டுள்ளார். (இ-60)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 200 | 140 | 150 | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 120 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 300 | 400 | 400 | 400 |
| தக்காளி | 150 | 200 | 110 | 150 | 140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 120 | 60 | 80 | 100 | 80 |
| கோவா | 140 | 200 | 100 | 160 | 140 | 140 |
| கரட் | 150 | 400 | 150 | 280 | 240 | 200 |
| பூசணி | 100 | 150 | 70 | 100 | 100 | 100 |
| புடோல் | 60 | 100 | 50 | — | 100 | 100 |
| வாழைக்காய் | 120 | 120 | 60 | 50 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 200 | 150 | 80 | 160 | 150 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 300 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 300 | 300 | 200 | 350 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 100 | 100 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 140 | 150 | 50 | 130 | 140 | 140 |
| பயற்றங்காய் | 80 | 200 | 50 | 100 | 100 | 200 |
| லீக்ஸ் | 100 | 100 | 70 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 60 | 50 | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 260 | 200 | 150 | 240 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 100 | 100 | 200 | 120 | 200 |
| போஞ்சி | 150 | 100 | 120 | 200 | 200 | 150 |
| கத்தரிதம்புள்ள | 140 | 100 | 100 | 150 | 120 | 120 |
| கீரை-1பிடி | 30 | 20 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 50 | 30 | 50 | 60 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 70 | 58 | 40-50 | 60 |
| இராசவள்ளி | 200 | 400 | 200 | 300 | 300 | — |
| வெங்காயப்பூ | 150 | 200 | 250 | 240 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 120 | 30 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 100 | 150 | 50 | — | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் ரவி பதவியை உடன் இராஜினாமா செய்ய வேண்டும்

## மகிந்த அணி அழுத்தம்



பிணைமுறி மோசடி விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையில் ரவி கருணாநாயக்கவின் ஊழல் விவகாரங்கள் அம்பலமாகியிருப்பதால் அவர் தனது அமைச்சுப் பதவியை உடனடியாகத் துறக்க வேண்டும் என மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அவர் கருத்து தெரிவிக்கும் போதே பந்துல இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

மத்திய வங்கிக்குள் நுழைந்து விசாரணை நடத்திய முதல் ஆள் நானே. பல்வேறு நிந்தனைகளுக்கும் அவதூறுகளுக்கும் மத்தியில் இந்தப் பணியை நான் தைரியமாகச் செய்தேன்.

இந்தப் பிணைமுறி மோசடிக்குப் பதிலளிக்க வேண்டியவர்கள் ரணில் விக்கிரமசிங்கவும், ரவி கருணாநாயக்கவுமே என்று அப்போதே நான் அழுத்தம் திருத்தமாகக் கூறினேன்.

எனினும், அவர்கள் இருவரும் நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் தங்களது மோசடிகளை மறைக்க பல்வேறு நாடகங்களை அரங்கேற்றி வந்தார்கள்.

நிதி அமைச்சர் என்ற ரீதியில் அரசுக்குப் பணம் தேவைப்படுவதாகக் கூறும் திகதியிடப்படாத ரவி கருணாநாயக்கவின் கடிதத்தை நான் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்திருந்தேன்.

நிதி அமைச்சரொருவர் ஒருபோதும் செய்யக்கூடாத விந்தையான வேண்டுகோள் கடிதம் இதுவென்பதை ஆணைக்குழுவின் முன்னிலையில் தெளிவுபடுத்தினேன்.

ரவி கருணாநாயக்கவுக்கும் அர்ஜுன் மகேந்திரனுக்குமிடையிலிருந்த நெருங்கிய உறவு பற்றி மகிந்தானந்த அளுத்கமகே எம்.பி. நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்தினார்.

அலோசியஸ், பல மில்லியன் ரூபா பெறுமதியான சொகுசு வீட்டுத்தொகுதியொன்றை ரவிக்கு வாங்கிக் கொடுத்திருக்கிறார் என்ற இரகசியமும் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்தப்பட்டது.

அந்தச் சமயத்தில் தன்னைத்தவிர மற்றவர்கள் அனைவருமே திருடர்கள் என்ற ரீதியில் ரவி கருணாநாயக்க முழக்கமிட்டது அனைவருக்கும் தெரியும்.

அந்நிய செலாவணி மோசடியில் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராகத் தொடரப்பட்டிருந்த வழக்கு பல வருடங்களாக விசாரிக்கப்பட்ட பின் பாரதூரக் (கிரிமினல்) குற்றப்பத்திரிகை அவருக்கு வழங்கப்பட்டது.

எனினும், அந்தக் குற்றப்பத்திரிகையில் ஏற்பட்டிருந்த சில தவறுகளைக் காரணங்காட்டி அவரது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. தீர்ப்பை வழங்கிய (பெண்) நீதிபதியும் அதன் பின் ஓய்வு பெற்று விட்டார்.

இவ்வாறான தில்லுமுல்லுகளைச் செய்து வந்த ரவி கருணாநாயக்கவை பற்றி நாட்டின் ஜனாதிபதியும், பிரதமரும் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான ஏராளமான முறைப்பாடுகள் ஊழல் துஷ்பிரயோக ஒழிப்பு ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ள போதிலும் அவை யாவும் மூடி மறைக்கப்பட்டு விட்டன. எனினும், பிணைமுறி மோசடி விவகாரத்தில் இப்போது அவரது குட்டு அம்பலமாகி விட்டது.

எனவே, அவர் உடனடியாக தனது அமைச்சுப் பதவியிலிருந்து விலக வேண்டும் என பந்துல குணவர்த்தன எம்.பி. அழுத்தம் திருத்தமாகக் தெரிவித்தார். (இ-7)

# ஹற்றன் நீதிமன்றம் முன்பு சட்டத்தரணிகள் போராட்டம்







ஹற்றன் நீதிமன்ற சட்டத்தரணிகள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதுடன் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றிலும் ஈடுபட்டனர்.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் மீதான தாக்குதல் முயற்சியின் போது பாதுகாப்பு கடமையில் ஈடுட்ட பொலிஸ் அதிகாரி துப்பாக்கி சூட்டில் பலியானமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே நேற்று முற்பகல் 10 மணியளவில் நீதிமன்ற வளாகத்தில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.


நீதிபதி இளஞ்செழியன் மீதான துப்பாக்கி சூட்டு தாக்குதல் சம்பவமானது நாட்டின் நீதித்துறைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் அமைந்துள்ளதாக சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

சுமார் ஒரு மணித்தியாலம் வரை இடம்பெற்ற இக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமானது. அமைதியான முறையில் இடம்பெற்றதுடன், ஹற்றன் நீதிமன்ற செயற்பாடுகள் முற்றாக செயலிழந்திரு--ந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆர்ப்பாட்டம் முடிந்த பின் நேற்று முழு நாளும் நீதிமன்ற செயற்பாடுகளிலிருந்து விலகியிருப்பதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் தெரிவித்தனர். (இ-7)

# குடிநீர் இன்மையால் தீவகத்திலிருந்து மக்கள் குடி பெயரும் நிலையில் நிவாரணம் என்ன?

## நாடாளுமன்றத்தில் டக்ளஸ் எம்.பி. கேள்வி



(கொழும்பு)

அண்மைக் காலமாக நாட்டில் தொடர்ந்து ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக வடக்கு, கிழக்கு, வட மேல் மற்றும் வட மத்திய மாகாணங்களைச் சேர்ந்த சுமார் 8 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

நாட்டின் தென் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட கடும் மழை மற்றும் மண் சரிவுகள் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் அப்பாதிப்புகளிலிருந்து முழுமையாக மீள இயலாத நிலையில் இன்றும் பலர் இருந்து வருகின்றனர்.

இம் மக்களது இயல்பு வாழ்க்கை குறித்து அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையிலேயே, மேற்படி வரட்சி காரணமாகவும் அதிகளவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என நாடாளுமன்றத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 453,195 பேரும், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 200,451 பேரும், வட மேல் மாகாணத்தைச் சேர்ந்த 178,047 பேரும், வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த 16,800 பேருமாக 8 இலட்சத்து 48 ஆயிரத்து 493 பேர் வரட்சி காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இன்றைய நிலையில் இத் தொகை மேலும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகளும் இல்லாமல் இல்லை.

இதன்படி பார்க்கின்ற போது, வடக்கு மாகாணத்திலேயே அதிகளவிலான பாதிப்புகள் வரட்சி காரணமாக ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்ற நிலையில், வடக்கில், குறிப்பாக தீவகப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வரட்சியின் கொடுமை தாங்காது, குடி நீருக்கான வசதிகளற்ற நிலையில் தற்போது இடப்பெயர்வுகளை எதிர்நோக்கி வருகின்ற ஒரு நிலையும் ஏற்பட்டுள்ளது.

மழை மற்றும் வரட்சி போன்ற இயற்கை அனர்த்தங்கள் காரணமாக வடக்கு மாகாணம் தொடர்ந்தும் பாரிய பாதிப்புகளுக்கு உட்பட்டு வருகின்ற நிலையில், இப் பாதிப்புகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பது தொடர்பில் முன்கூட்டிய நிரந்தர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அதே நேரம், எமது மக்களின் குடிநீர்ப் பாதிப்புகள் தொடர்பில் உடனடி நிவாரணங்களை வழங்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தின் நிலத்தடி நீர் பல்வேறு படிமங்கள் மற்றும் கழிவுகள் காரணமாகவும், உவர் நீர் உட்புகுதல் காரணமாகவும் மாசடைந்துள்ள நிலைமையும் காணப்படுகின்றது.

அத்துடன், உள்ளூராட்சி நிறுவனங்கள் செயற்றிறன்களை இழந்துள்ள நிலையும் காணப்படுகின்றது. எனவே, இவற்றையும் அவதானத்தில் கொண்டே நாம் மேற்படி வரட்சி காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு உடனடி ஏற்பாடுகள் குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

அந்த வகையில், நிலைமைகளை நேரில் ஆராய்வதற்கென அண்மையில் வடக்கு மாகாணத்திற்குச் சென்றிருந்த அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவுக்கு எமது மக்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அங்குள்ள நிலைமைகளை அவர் நன்கு புரிந்து கொண்டிருப்பார் எனவும் நம்புகின்றேன்.

வரட்சி காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண மக்களுக்கு உடனடி நிவாரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் என்ன? வடக்கு மாகாணத்தில் தற்போது நீருக்கு ஏற்பட்டுள்ள பாரிய சவால்களின் முன்பாக, தென் பகுதியிலிருந்து குடி நீரை ரயில் மூலமாக ஓர் விசேட ஏற்பாட்டில் கொண்டு செல்வதற்கு ஏற்பாடுகளை முன்னெடுக்க முடியுமா?


ஏனைய, கிழக்கு, வட மேல், வடமத்திய மாகாணங்களில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான உடனடி நிவாரணங்கள் என்ன?

வடக்கு மாகாணத்தில் மேற்படி இயற்கை அனர்த்தங்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் வகையில் நிரந்தர ஏற்பாடுகளுக்கான நடவடிக்கைகள் ஏதேனும் திட்டமிடப்பட்டுள்ளதா? ஆம், எனில் அது குறித்து விளக்க முடியுமா? இல்லையேல், அதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்த முடியுமா? என்றும் அமைச்சர் அநுர பிரிய தர்சன யாப்பாவிடம் டக்ளஸ் எம்.பி.கேள்வி எழுப்பினார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

## (27.07.2017 முதல் 13.02.2019 வரை)



(பெயரின் முதல் எழுத்துக்கள்: இ, உ, ஏ, ஓ, வ, வி, வு, வே, வோ உள்ளவர்களுக்கும்)

ஓய்வைத் தவிர்த்து உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் ரிஷப இராசி நேயர்களே!

பரபரப்பாகப் பேசப்பட்ட பாம்புக் கிரகங்களின் பெயர்ச்சி இப்பொழுது வந்து விட்டது. அதுமட்டுமல்லாமல் இராகு-கேது பெயர்ச்சியான ஒரு மாதம் கழித்து நவக்கிரகங்களில் சுபகிரகமாக விளங்கும் குருவும் பெயர்ச்சியாகப் போகின்றார். அஷ்டமாதிபதியான குரு 6இல் வரும் பொழுது கஷ்டங்கள் எல்லாம் ஓடி ஒளியும். கவலைகள் எல்லாம் துள்ளி ஓடும்.

2017 டிசெம்பர் மாதத்தில் நடை பெறும் சனிப்பெயர்ச்சி, அஷ்டமத்துச் சனியின் தொடக்கமாக இருந்தாலும் உங்களைப் பொறுத்தவரை உங்கள் இராசிக்கு யோகம் தரும் கிரகமாகச் சனி விளங்குகின்றார். அதுமட்டுமல்லாமல் உங்கள் இராசி நாதன் சுக்ரனுக்கு சனி நட்பு கிரகம் ஆவார். எனவே நட்பால் நல்ல காரியங்கள் நடைபெறும் நேரமிது.

இவ்வாண்டில் நிகழப்போகும் மூன்று முக்கிய கிரகப் பெயர்ச்சிகளும் நன்மை தரும் விதத்திலேயே உங்களுக்கு அமைந்திருக்கின்றது. உங்களுக்கு இந்த இராகு-கேது பெயர்ச்சி எப்படிப்பட்ட பலன்களைக் கொடுக்கப் போகின்றது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

முன்னேற்றப் பாதை காட்டும் இராகு!
ஒளிமயமான வாழ்வு தரும் கேது!

கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக இராகு உங்கள் இராசிக்கு 4ஆம் இடத்திலும், கேது உங்கள் இராசிக்கு 10ஆம் இடத்திலும் சஞ்சரித்து வந்தது. இதன் விளைவாக குடும்பப் பிரச்சினைகள் கூடுதலாக ஏற்பட்டு மனக்கவலை ஏற்பட்டிருக்கலாம். உத்தியோகத்தில் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்காமல் போயிருக்கலாம். தொழில் வளர்ச்சியில் தளர்ச்சி உருவாகி இருக்கலாம். எப்பொழுது நல்ல திருப்பங்கள் நாடிவரும் என்று எதிர் பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு இப்பொழுது இராகு-கேது பெயர்ச்சியாகி நலங்களையும், வளங்களையும் வழங்கப் போகிறது.

மூன்றினிலே கருநாகம் நின்றால் நாளும்
மூண்டெழுந்த பகைமாறி வெற்றி சேரும்!
கனிவான முன்னேற்றத்தை
கருநாகம் வழங்கிவிட கவலை தீரும்!
என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் மறைமுக எதிர்ப்புகள் இனிமாறும். எந்த எதிர் பார்ப்பும் இன்றி மணிக்கணக்காக நீங்கள் உழைத்ததற்கு இனிமேல் பலன் கிடைக்கப் போகின்றது.

சகாய ஸ்தானத்திற்கு இராகு வருகிறார் என்பதால் அது அனைத்து சகாயங்களையும் கொடுக்க வேண்டுமல்லவா? அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது பகையான நண்பர்கள் இனி உறவாவார்கள். பரம்பரைச் சொத்துகளில் உங்களுக்கு கிடைக்க வேண்டிய பங்கு இனி முறையாகக் கிடைக்கும்.

இதற்கிடையில் குருப்பெயர்ச்சியும் நிகழவிருக்கின்றது. இராகு-கேதுக்களின் பெயர்ச்சிக்கு பிறகு ஒருமாத காலத்தில் துலாம் இராசியில் சஞ்சரிக்கப்போகும் குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 2,10,12 ஆகிய இடங்களில் ப்திவாகின்றது. எனவே தனவரவு தாராளமாக வந்து கொண்டே இருக்கும். இனத்தார் பகை மாறி எடுத்த செயல்களில் வெற்றி கிடைக்கும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த வழக்கு சாதகமாக முடியும்.

சுயஜாதகத்தில் அல்லது 2, 4, 7, 8 ஆகிய இடங்களில் இராகு நின்றால் அதற்குரிய இராகுவின் ஆதிக்கம் கூடுதலாக இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள். அதற்கு ஏற்ப வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டால் தான் குடும்ப ஒற்றுமை பலப்படும். கூட இருப்பவர்களாலும் நன்மை கிடைக்கும்.


இந்த மூன்றாமிடத்து இராகு கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த தகராறுகள் அகல வழிவகுத்துக் கொடுக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் பகை மாறி மேன்மை கிடைக்கும். உடன்பிறப்புகளால் ரிஷப இராசியில் பிறந்த பெண்களுக்கு இது ஒரு பொன்னான காலமாகும். திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் தீரும். மங்கல ஓசையும், மழலையின் ஓசையும் இல்லதில் கேட்க வழிபிறக்கும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணி உயர்வும், சம்பள உயர்வும் கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் பாசம் கூடும். உங்கள் பெயரிலேயே சொத்துகள் வாங்க குடும்ப உறுப்பினர்கள் சம்மதிப்பர். குழந்தைகளின் முன்னேற்றம் எதிர் பார்த்த படி அமையும்.

உடல் ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகல மாற்று மருத்துவம் கைகொடுக்கும். தங்கம், வெள்ளி போன்றவை தடையின்றிச் சேரும். மொத்தத்தில் சுபவிரயம் அதிகரிக்கும் நேரமிது. இராகு-கேது வழிபாடு நன்மையைத் தரும்.

வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!

மூன்றாமிடத்து இராகுவால் முன்னேற்றம் அதிகரிக்கவும், 9ஆம் இடத்து கேதுவால் ஒப்பற்ற வாழ்வு அமையவும் இராகு சந்நிதியில் உளுந்து, கேது சந்நிதியில் கொள்ளு ஆகிய தானியங்களை தானமாகக் கொடுத்து வழிபட்டு வாருங்கள். வெள்ளிக்கிழமை அன்று அம்பிகை வழிபாட்டை மேற்கொண்டால்



பொழுது (12.12.2018 முதல் 12.02.2019 வரை)

விரயங்கள் கூடுதலாக இருக்கும். வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும் ஒருசிலருக்கு உருவாகும். இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும். உடல் ஆரோக்கியத் தொல்லைகளை மாற்று மருத்துவம் சீராக்கும். இக்காலத்தில் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. நண்பரகளை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் நிறைவேறாமல் தாமதப்படலாம். இக்காலத்தில் சிறப்பு வழிபாடுகள் தேவை. ஆலயங்களில் அடியெடுத்து வைப்பதன் மூலமே நல்லது நடக்கும்.

பாதசாரப்படி கேது தரும் பலன்கள்!

## மூன்றில் ராகு வருகிறது! முயற்சியில் வெற்றி தருகிறது!




இன்பங்கள் இல்லம் வந்து சேரும்.

பாதசாரப்படி இராகு தரும் பலன்கள்!

புதன் சாரத்தில் இராகு சஞ்சரிக்கும்பொழுது (27.07.2017 முதல் 03.04.2018 வரை)

தனவரவிற்கு பஞ்சம் இருக்காது. தனபஞ்சமாதிபதியாக புதன் விளங்குவதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். மனக்கவலை தீர ஒரு நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும்.

ஒன்பதாமிடத்து கேதுவின் பலன்!

இதுவரை 10ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேது பகவான் இப்பொழுது 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். பிதுர்ரார்ஜித ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கும் கேதுவால் தந்தை வழி உறவினர்களின் பகை மாறும். பூர்வீக சொத்துகளில் இருந்த சிக்கல்கள் விலக புதிய வழிபிறக்கும். குடும்பத்தில் அரைகுறையாக நின்ற காரியங்கள் நிறைவேறும். அலுவலகங்களிலோ அல்லது வங்கிகளிலோ இதுவரை கடன்கேட்டு விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு கால தாமதங்கள் அகன்று கைக்கு பணம் கிடைக்கலாம். குறிப்பாக கடன் பிரச்சினை முற்றிலும் தீர்க்கப்படும் அளவிற்கு முன்னேற்றம் வந்து சேரப்போகின்றது.

தெய்வத் திருப்பணிகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். கும்பாபிஷேக விழாக்களுக்கும், கோவில் திருப் பணிக்கும் கொடுத்து உதவுவதோடு, அதை முன்னின்றும் நடத்துவீர்கள். எத்தனை நாள் தான் இனி நடந்து சென்றே காலம் கழிப்பது என்று நினைத்தவர்கள் இப்பொழுது வாகனங்கள் வாங்கி அதில் பயணிக்க வாய்ப்புகள் வந்து சேரும்.

பெண்களுக்கு!

மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பொருளாதார மேம்பாடு காரணமாக புகழ், பெருமை, செல்வாக்கு அனைத்தும் உயரும். தகராறு செய்தவர்கள் தானாக விலகுவர். மகப்பேறுக்காக காத்திருப்பவர்களுக்கு அந்த வாய்ப்பு கைகூடும். விலகிச்சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். மங்கல ஓசை மனையில் கேட்க வாய்ப்பு கிட்டும்.

சனி சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது (04.04.2018 முதல் 11.12.2018 வரை)

தொழில் வளர்ச்சி மிகமிக சிறப்பாக இருக்கும். பணியிலிருந்து தொய்வு அகலும். கால்நடை வளர்ப்பில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். உங்கள் இராசிக்கு சனி பகவான் 9,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். எனவே பொன் பொருட்கள் சேரும். புதிய ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. முன்னோர் வழிச் சொத்துகளில் இதுவரை பஞ்சாயத்துக்கு வராத சகோதரர்கள் இப்பொழுது உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். வேலை வாய்ப்பிற்காக விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். பொதுநலத்தில் ஈடுபட்டவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும்.

குரு சாரத்தில் இராகு சஞ்சரிக்கும்

செவ்வாய் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (27.07.2017 முதல் 29.11.2017 வரை)

வீட்டில் சுபகாரியங்கள் கைகூடும். பொருளாதாரப் பற்றாக்குறை அதிகரிக்கும். ஒரு சிலர் கடன் வாங்கும் சூழ்நிலை கூட உருவாகலாம். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொள்வது நல்லது. பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு மேலிடத்து நிர்ப்பந்தம் அதிகரிக்கும். பொறுப்புகள் மாற்றப்படும். குடும்ப உறுப்பினர்களிடம் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. இதுபோன்ற காலங்களில் பிரதோஷ வழிபாட்டை மேற்கொள்வதன் மூலம் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும்.

சந்திரன் சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (30.11.2017 முதல் 07.08.2018 வரை)

மனோதைரியம் கூடலாம். உடன் பிறந்தவர்கள் உங்களுக்கு கைகொடுத்து உதவுவர். திரவப்பொருட்களால் லாபம் கிடைக்கும். திடீர் தனவரவு உண்டு. தாய்வழி ஆதரவோடு செயற்படுவீர்கள். கடல் தாண்டிச் செல்லும் யோகம் ஒரு சிலருக்கு உருவாகலாம். உடல் ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும். ஆபரணம் வாங்குவீர்கள்.

சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது (08.08.2018 முதல் 12.02.2019 வரை)

தந்தை வழி உறவில் விரிசல்கள் ஏற்படலாம். வாகனப்பழுதுச் செலவுகளால் வாட்டம் காண்பீர்கள். பிதுர்காரகன் சூரியன் என்று சொல்வதால் அவர்களுடைய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பிதுர்தோஷ நிவர்த்திப் பரிகாரங்களை செய்து கொள்வது நல்லது. அமாவாசையன்று தர்ப்பணம் செய்வதோடு முன்னோர்களின் நினைவு நாட்களில் இயன்ற அளவு அன்னதானம் அளித்து இறைவனை வழிபடுவது நல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தனைக் காணாத கண் என்ன கண்ணே!
கற்பூர ஒளி காணா கண் என்ன கண்ணே!
– ஓர் கவிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மிடுக்குக் கொண்ட நல்லூரானுக்கு என் கண்டன அறிக்கை இது

நல்லூர் முருகவேற் பெருமானுக்கு இன்று கொடியேற்றம்.

கண்டாமணிகள் ஒலிக்க, மேளதாளங்கள் முழங்க, வானுலகம் அதிரும் வண்ணம் அடியார்கள் அரோகரா என்று ஒலி எழுப்ப, சரி காலை 10 மணிக்கு நல்லூர்க் கந்தனின் கொடி ஏறும்.

அவனுக்கென்ன குறை. சண்முகவாசலில் நவதள இராஜகோபுரம், குபேர வாசலில் மிடுக்குடன் எழுந்து நிற்கும் வானுயர் இராஜகோபுரம். போதாக்குறைக்கு ஒவ்வொரு நாளும் தென் பகுதியில் இருந்து அவனை நாடி வருபவர்கள் பக்தியோடு வாங்கிக் கொண்டு வரும் பழ வகைகள்.

ஒரு பழத்துக்காக எல்லாம் உரிந்து உரிமைப் போராட்டம் நடத்தியவனுக்கு வெள்ளிக்கிழமை தோறும் பால், பழ அபிஷேகம். எப்படி அவன் எங்களைத் திரும்பிப் பார்ப்பான்.

குறை ஏதும் வையுங்கள் என்றால் மாப்பாணரும் கேட்பதாக இல்லை. வருடத்துக்கு வருடம் புதுப்புது ஏற்பாடுகள். ஏலவே செருக்குக் கொண்ட நல்லூர்க் கந்தனுக்கு மேலும் மேலும் அலங்காரம்.

தீபங்கள், ஆலவட்டம், கொடிகள் போதாக் குறைக்கு ஈசான மூலையில் திருவாசகத் தேன் மழை. இதெல்லாம் இருந்தால் அவன் ஏன்? ஏழை என்னைத் திரும்பிப் பார்ப்பான்.

ஆனாலும் ஒன்று சொல்லுவேன். இலட்சோப இலட்ச அடியார்கள் உன்னை நாடி வந்தாலும் நான் வரன்.

உனக்குச் செருக்கென்றால், எனக்கென்ன? கேட்டது தந்தாயா? தமிழர் குறை தீர் என்பதை யாவது நிறைவேற்றிக் கொடுத்தாயா? பிறகென்ன உன்னிடம் நான் வருவது.

வில்லெடுத்து, வாள் எடுத்து, மார் நிமிர்த்தி வா முருகா போர் தொடுக்க என்றால் சூரனுக்கும் உன் திருப்பெரு வடிவம் காட்டுவாய்.

ஆனால், கந்தா! வேலா! நல்லூர் முருகா! என்றால் உனக்கு நாங்கள் இளக்கரவு?

ஆகையால்தான் இந்த ஆண்டு உன்னோடு பகிஷ்கரிப்புப் போராட்டம். பகிஷ்கரித்தாலாவது உன் ஆறுமுகத்தில்; பன்னிரு திருவிழியில் ஒன்றாவது எம்மைப் பார்க்குதா? என்று பார்ப்போம்.

நீதிக்கான போராட்டம் ஒன்றுதான் தமிழருக்கு ஒரே வழி. அதற்கும் நீதானே வித்திட்டவன்.

உலகெல்லாம் சுற்றி வந்த போது சூழ்ச்சி நடந்தல்லோ உன் அண்ணன் மாங்கனி பெற்றான்.

அம்மையப்பனும் உலகமும் ஒன்றென்று கணக்கு முடித்து, விநாயகன் கையில் கனி கொடுத்த போது,

இது கதை பிழை. சூழ்ச்சி, நாடகம் என்றெல்லாம் அறிக்கை விட்டு; கண்டனம் தெரிவித்து, வீட்டை விட்டு வெளிக்கிட்டு, மலையேறி நின்று தொடர் போராட்டம் நடத்திய உனக்கு எங்கள் குறை புரியவில்லை என்றால், எம் இனத்தின் துயர் யாருக்குப் புரியும்.

ஆகையால், இந்த வருடம் உன்னோடு நான் பேசேன்; உன் முகம் பாரேன். வீட்டை விட்டு வெளிக்கிட்டு குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்று ஆக்கிய உன்னோடுதான் என் பகிஷ்கரிப்புப் போராட்டம். அதற்கான முதற்கட்ட கண்டன அறிக்கைதான் இது.

ஆனாலும் எதிர்க்கட்சிக்கும் அனைத்து வசதிகளும் ஆளும் தரப்பால் ஆவது போல் எங்கும் எப்போதும் எனைக் காக்கும் உன் பணியை விட்டிடாதே நல்லூர் வேலா.

## பாலத்தை மோதிய பஸ்! 12 பயணிகள் படுகாயம்

மட்டக்களப்பு - கல்முனை நெடுஞ்சாலையின் கல்லாறு பாலத்தில், தனியார் சொகுசு பேருந்தொன்று, நேற்று அதிகாலை 5.30க்கு மோதி விபத்துக்குள்ளானதில், 12 பேர் காயமடைந்துள்ளனர் என களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரி வித்தனர்.

இவ்விபத்தில், பாலத்தில் பல பகுதிகள் பெரும் சேதமடைந்துள்ளதுடன், பேருந்துக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து கல்முனை நோக்கி வந்த குறித்த பேருந்து வேகக் கட்டுப்பாட்டையிழந்து, பாதையை விட்டு விலகியமையால், இவ்விபத்துச் சம்பவித்துள்ளது.

காயங்களுக்கு உள்ளானவர்கள், களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுச்சென்றுள்ளனர் எனவும் விபத்து தொடர்பான விசாரணை களை மேற்கொண்டு வருவதாகவும் களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

## மின்சார வேலியில் சிக்கி ஒருவர் பலி!

(கொழும்பு)

துரியன் பழத்தை பாதுகாக்க போடப்படிருந்த மின்சார வேலியில் சிக்குண்ட ஒருவர் பலியானதாக கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர்.

கினிகத்தேன பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொல்பிட்டிய ஹிட்டிகேகம, புலத்தவத்த பிரதேசத்தை சேர்ந்த 62 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான வை. குலரத்ன என்பவரே நேற்றுக் காலை 6 .30 மணியளவில் மின்சாரம் தாக்கி பலியானார்.'

துரியன்தோட்டத்தில் துரியனை கள்வர்களிடமிருந்து பாதுகாக்க தோட்டத்தை சுற்றி மின்சார கம்பி வேலியமைத்திருந்த தோட்ட உரிமையாளரின் அயல் வீட்டை சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் வீட்டில் குடிநீர் வராத நிலையில் அத்தோட்ட பகுதிக்கு நீர் குழாயை திருத்த சென்றவேளை மின்சார கம்பியில் சிக்குண்டு ஸ்தலத்திலே பலியானார்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சட்டவிரோதமாக மின்சார வேலியமைத்த தோட்ட உரிமையாளரை கைது செய்ததுடன், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணையை முன்னெடுப்பதாக தெரிவித்தனர். (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநி யோக மார்ககங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ்.பிரதேசத்தில பொன்னாலை கிருஸ்ணன் கோவிலடி, பொன்னாலை வீட்டுத் திட்டம், நுணாவில், கைதடி, நாவற் குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி, பனைவள ஆராய்ச்சி நிலையம், கைதடி யுனைடட் மோட்டர்ஸ், கைதடி வடமாகாண சபை அலுவலகம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் பல்லவராயன்கட்டு, கிராஞ்சி, வேராவில், வலைப்பாடு, குமுழமுனை, முழங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், முழங்காவில் கடற்படை முகாம், முழங்காவில் ஐஸ் தொழிற் சாலை, வெள்ளாங்குளம் 651ம் பிரிகேட் இராணுவ முகாம், ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் தவசிகுளம், யங்கன்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)

## சாஸ்திரங்கள்

✦ ஞானத்தை விரும்பிய மேலோன் மான் தோலின் மீதும் மோட்சத்தை விரும்பிய மேலோன் தர்ப்ப ஆசனத்தின் மீதும் செல்வத்தையும் வீரத்தையும் விரும்பிய மேலோன் புலித்தோலின் மீதும் படுத்துறங்க வேண்டும். - உசன முனிவர்.

## நீண்டகால சிறுநீரக நோய்களை (CKD) தவிர்த்திட

விவசாய இரசாயனப் பொருள் பாவனையைக் குறைத்திடல் வேண்டும்.
விவசாய இரசாயனப்பொருட்கள்பிரயோகிக்கும்போது தற்காப்பு முறைகளை உபயோகித்தல்
காற்றின் திசையில் இரசாயனப் பொருட்களை விசிறுதல்
இரசாயனம் தெளிக்கும் உபகரணங்களை நீர் நிலைகளுக்கு அருகில் கழுவுதலைத் தவிர்த்தல்
விவசாய இரசாயன வெற்றுப் போத்தல்களை பாதுகாப்பான முறையில் அகற்றுதல்
விவசாய இரசாயனப் பொருட்களை தெளித்த பின்பு உடலை நன்கு கழுவிக் கொள்ளுதல்

**ஆரோக்கிய வாழ்க்கைக்கு சிறுநீரகங்களை பாதுகாத்திடுவோம்**

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ். மாநகர சபை



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### சத்சங்கம் பாதுகாப்பான இடம்

மக்களுக்கு வீடு ஏன் தேவை? மிருகங்கள் காட்டிலிருப்பது போல மக்கள் இருப்பிடம் இல்லாமல் ஏன் இருக்கக்கூடாது.

புத்தியுள்ள மிருகங்கள் கூடத் தங்களுக்கென வீடு கட்டிக் கொள்கின்றன.

மனிதனுக்கு இயற்கையின் மாற்றங்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு இடம் தேவையாகவுள்ளது. மனிதன் தன் உடல் சார்ந்த வசதிக்காக இருப்பிடத்தைக் கட்டிக் கொள்கிறான். அதுபோலவே ஆன்மாவிற்கும் மனமகிழ்ச்சிக்கும் சத்சங்கம் ஒரு பாதுகாப்பான இடம்.

சத்சங்கத்திற்கு வராத ஒருவன் காட்டு மிருகம் போன்றவன். சத்சங்கம் ஒருவனை நாகரிகமுடையவனாக்குகிறது. சத்சங்கம் தன் வாழ்க்கையின் கடுமையான மற்றும் மாறும் பதிப்புக்களிலிருந்து உனனைக் காப்பாற்றும் ஒரு பாதுகாப்பான இடம்.

சத்சங்கம் என்பது கூடு. அதில் நீ பெறக் கூடுமானது ஒய்வு.

நீ மகிழ்ச்சியை வாங்கிக் கொள்பவனாக இருந்தால், உனக்குத் துன்பம் கிடைக்கும்.

நீ மகிழ்ச்சியைக் கொடுப்பவனாக இருந்தால் உனக்கு மகிழ்ச்சியே என்றும் கிடைக்கும்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### சிவன் உடல் முழுவதும் சாம்பலை பூசியிருக்கும் காரணம் தெரியுமா?

இறந்த பிறகு எஞ்சியிருப்பது சாம்பல் மட்டுமே. சிவபெருமான் உடல் முழுவதும் சாம்பலை பூசிக் கொள்வதனால், இறந்தவர்களின் தூய்மையை பறை சாற்றும்.

இந்த சாம்பல் உணர்ச்சிகள், காமம், பேராசை மற்றும் பயம் போன்ற பூலோக தொடர்புகளுக்கு அப்பாற்பட்டது.

இவர் சாம்பலை உடல் முழுவதுமாய் பூசிக் கொள்வதற்கு காரணம் ஒரு புராண கதையொன்றில் கூறப்பட்டுள்ளது. ஆதிசக்தியின் அவதாரமான மற்றும் தன் முதல் மனைவியுமான சதி, தன்னை தானே தீக்கிரையாக்கிக் கொண்ட போது, சிவபெருமானால் தன் ஆத்திரம், வலி மற்றும் வேதனையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் அவரின் பிணத்தை எடுத்துக் கொண்டு தடுமாற்றத்துடன் ஓடினார்.

அப்போது விஷ்ணு பகவான் சதியின் பிணத்தை தொட்டவுடன் அவர் சாம்பலாகி போனார். தன் மனைவியின் இழப்பை தாங்கிக்கொள்ள முடியாத சிவபெருமான், அவர் எப்போதும் தன்னுடனே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தன் உடல் முழுவதும் தன் மனைவியின் சாம்பலை பூசிக்கொண்டார். இதனால் தான் சிவன் சாம்பல் நிறத்துடையான் என்று போற்றப்படுகின்றார். (முற்றும்)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### இருப்பதில் திருப்தியாக இரு

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நவின்றார்கள்:

❁ மனிதனுக்கு வயது ஆக ஆக அவனிடத்தில் இருவிடயங்கள் வளர்ச்சி அடைந்து வருகின்றன. பொருளின் மீது பேராசை, வயதின் மீது பேராசை.

❁ செல்வவளம் என்பது அதிக செல்வத்தைப் பெறுவதல்ல. போதுமென்ற மனதைப் பெறுவதே உண்மை ஸ்ரீயான செல்வமாகும்.

❁ இருவிடயங்கள் ஒருவனிடமிருந்தால் அவனை நன்றி உள்ளவன் என்றும், பொறுமை மிக்கவன் என்றும் இறைவன் குறித்துக் கொள்வான்.

❁ உலக வசதிகளைப் பொறுத்தவரையில் தன்னை விடக் கீழானவரைப் பார்த்து இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

❁ இருப்பதைக் கொண்டு திருப்தி கொள். அதுவே என்றும் அழியாத செல்வமாகும்.

❁ இறைவன் உங்களில் சிலருக்கு சிலரை விட எதனைக் கொண்டு சிறப்பளித்திருக்கின்றானோ அதனை அடைய நீங்கள் பேராசை கொள்ளாதீர்கள்.


(வேதவரிகளும் தூதர்மொழிகளும் நூலில் இருந்து)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 4X100 மீ. கலப்பு மெட்லி நீச்சல் போட்டியில் உலக சாதனையை முறியடித்தது அமெரிக்கா

அமெரிக்காவைச் சேர்ந்த நீச்சல் அணி 4X100 மீற்றர் கலப்பு மெட்லி நீச்சல் போட்டியில் அமெரிக்க அணி முந்தைய உலக சாதனையை முறியடித்துள்ளது.

ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரில் உலக சம்பியன்ஷிப் நீச்சல் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில், நான்கு வகையான நீச்சல் போட்டிகளை (பேக்ஸ்ட்ரோக், ப்ரெஸ்ட்ஸ்ட்ரோக், பட்டர்ஃப்ளை, ஃப்ரீஸ்டைல்) உள்ளடக்கிய மெட்லி போட்டிக்கான தகுதிச்சுற்று நேற்று நடைபெற்றது.




இதில் ஆடவருக்கான கலப்பு மெட்லி பிரிவில் அமெரிக்காவின் ரியான் மர்பி, கெவின் கார்டஸ், கெல்சி வாரல் மற்றும் மல்லோய் கோமர்போர்ட் ஆகியோர் கொண்ட அணி 4X100 மீற்றர் பந்தயத்தில் பங்கேற்று உலக சாதனை படைத்துள்ளது.

இந்த அணி பந்தய தூரத்தை 3 நிமிடங்கள், 40.28 விநாடிகளில் கடந்து முதலிடத்தைப் பிடித்தது.

இதற்கு முன்பு 2015 ஆம் ஆண்டு பிரிட்டன் அணி, ரஷ்யாவில் நடைபெற்ற போட்டியில் 3 நிமிடம் 41.71 விநாடிகளில் கடந்ததே முந்தைய உலக சாதனையாக இருந்தது. அந்த சாதனையை அமெரிக்க அணி முறியடித்துள்ளது.

இத்துடன் சேர்த்து இந்த ஆண்டு சம்பியன்ஷிப் போட்டியில், 6 உலக சாதனைகள் முறியடிக்கப்பட்டுள்ளன.

உலக சம்பியன்ஷிப் போட்டியில் கலப்பு மெட்லி போட்டி கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தான் சேர்க்கப்பட்டது.

2020 ஒலிம் பிக் போட்டியிலும் இடம் பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

# மெ்ன்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

மட்டுவில் வடக்கு கண்ணகை சனசமூக நிலையத்தின் 61 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கண்ணகை விளையாட்டுக்கழகம் நடத்தும் தென்மராட்சி ரீதியிலான மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.அணிக்கு 7 பேர் 6 ஓவர் கொண்ட போட்டி கண்ணகை விளையாட்டுக் கழக மைதானத்தில் எதிர்வரும் 05. 08.2017,06.08. 2017 சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறவுள்ளது. தொடர்புகளுக்கு 077 673 0015, 075 066 4303.

# ம.சூரியகுமாரன் ஞாபகார்த்த மாவட்ட ரீதியிலான கபடிப்போட்டி

## இறுதிப் போட்டியில் பலாலி விண்மீன்






மின்னொளியிலான கபடி அரையிறுதிப்போட்டியில் கொட்டடி துள்ளுமீன் அணியை வீழ்த்தி பலாலி விண்மீன் இறுதிப்போட்டிக்கு அணி தகுதி பெற்றது."

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமராட்சி கபடிச் சங்கத்தின் அனுமதியுடன் "அமரர் ம.சூரியகுமாரன்"ஞாபகார்த்த 20வயதுக்கு உட்பட்டோருக்கான யாழ்.மாவட்ட ரீதியிலான கழகங்களுக்கு இடையிலான கபடிச்சுற்றுப்போட்டி கடந்த 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மின்னொளியில் நடைபெற்றது.

இப்போட்டியில் துள்ளுமீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்கொண்ட பலாலி விண்மீன் மிகவும் நேர்த்தியான காய் நகர்த்தல் மற்றும் எதிரணி வீரர்களின் துடிப்பான சிறப்பான ஆட்டங்களை முன்கூட்டியே அனுமானித்தறிந்து அதற்கேற்ப வகுக்கப்பட்ட சிறந்த திட்டமிடலூடாக 37:24 என்ற புள்ளியடிப்படையில் இவ் வெற்றியை பதிவு செய்து இறுதிப்போட்டிக்குள் நுழைந்தமை குறிப்பிடத்தக்கது

இப்போட்டியின் சிறந்த விளையாட்டு வீரனாக பலாலி விண்மீன் வீரன் ஜெயசீலன் தெரிவு செய்யப்பட்டு பதக்கம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். (க)

## சைனிங்ஸ் வைரவிழா

# மென்பந்தாட்ட போட்டி றெயின்போ அணி வெற்றி



கனியக்கா ஞாபகார்த்தமாக சைனிங்ஸ் வைரவிழா மென்பந்தாட்ட போட்டியில் கடந்த 25 ஆம் திகதி அன்று நடைபெற்ற போட்டியில் தீருவில் அணியை 2 விக்கெட்டுகளால் வெற்றி கொண்டது றெயின் போ அணி.

முதலில் துடுப்பெடுத்தாடிய தீருவில் 6 விக்கெட் இழப்பிற்கு 84 ஓட்டங்கள் எடுத்தது. வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய றெயின்போ 8 விக்கெட்டினை இழந்து வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகன் க.கபிலன் (றெயின்போ) தெரிவானார். (க)

# யாழ்.மத்திய கல்லூரி இறுதியாட்டத்திற்கு தகுதி

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்திய 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 26.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக விஜயன் 28 ஓட்டங்களையும், கனிஸ்ரன் 22 ஓட்டங்களையும், தாசன் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி சார்பில் மதுசன் 6 இலக்குகளையும், திவாகரன் 3 இலக்குகளையும், இயலரசன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 13 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக ஜெயதர்சன் 38 ஓட்டங்களைப் பெற்றார். (க)



அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் -2017 ஆம் ஆண்டுக்கான கரப் பந்தாட்ட இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது வேலணை பிரதேச செயலக அணி. (க)

# திக்கம் சனசமூக நிலைய வைர விழா கால்பந்தாட்டம்

திக்கம் சனசமூக நிலையம் தனது வைர விழாவை முன்னிட்டு நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை சிவானந்தா மற்றும் நியூட்டன் அணிகள் அடுத்த சுற்றுக்குத்தகுதிபெற்றன.வடமாகாண ரீதியில் நடத்தப்பட்டுவரும் தொடரின் ஆட்டங்கள் திக்கம் சனசமூக நிலையத்தின் மைதானத்திலேயே இடம் பெற்று வருகின்றன.

நடைபெற்ற ஆட்டத்தில் சிவானந்தா அணியை எதிர்த்து வரணி யுத் அணி மோதியது. சிவானந்தா அணி வீரர் சுபாஸ் ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் மிகச் சிறப்பான கோலைப் பதிவு செய்தார். முதல் பாதியின் முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது சிவானந்தா. இரண்டாம் பாதியில் யுத் கடுமையான முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் பதிலடி கொடுக்க இயலவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது சிவானந்தா அணி.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் நியூட்டன் அணியை எதிர்த்து புத்தூர் வீனஸ் அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் பல நிமிடங்கள் இரு அணிகளாலும் கோல் எதனையும் பதிவுசெய்ய முடியவில்லை. 20ஆவது நிமிடத்தில் நியூட்டன் அணி வீரர் மனோ தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்ய இடைவேளைக்கு முன்னர் நியூட்டன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியின் 45ஆவது நிமிடத்தில் தார்மீகன் நியூட்டனின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் நியூட்டன் அணி வெற்றி பெற்று முன்னேற்றம்கண்டது. (க)

# என் மகன் கோலி ரசிகன் ஆஸியின் பிரெட்லி சொல்கிறார்

10 வயதான என்னுடைய மகன் விராட் கோலியின் தீவிர ரசிகன் என்று அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீ கூறியுள்ளார்.



அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீ. இவர் விளையாடிய காலத்தில் அதிவேக பந்து வீச்சாளராக திகழ்ந்தார்.

சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வுபெற்ற இவர், தற்போது வர்ணனையாளராக செயற்பட்டு வருகிறார். தற்போது தமிழ்நாடு பிரிமீயர் லீக் தொடர் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் வர்ணனையாளராக செயற்பட்டு வருகிறார். இவருக்கு 10 வயதில் மகன் உள்ளான். இவனுக்கு பிடித்த பட்ஸ்மேன் விராட் கோலிதான் என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து பிரெட் லீ கூறுகையில்.

"என்னுடைய 10 வயது மகனின் பிடித்த பட்ஸ்மேன் விராட் கோலி தான். ஒருமுறை விராட் கோலி என்னை கடந்து செல்லும்போது, அவருடன் நான் கைக்குலுக்கிக் கொண்டேன். அப்போது விராட் கோலியிடம், என்னுடைய மகனின் பிடித்த பட்ஸ்மேன் நீங்கள்தான் என்று கூறினேன். உடனே, கோலி தனது டெஸ்ட் போட்டிக்கான ஜெர்சியில் கையெழுத்திட்டு என் மகனுக்கு வழங்கி வாழ்த்தினார்" என்றார்.(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரட்சி நிவாரண...

முகாமைத்துவ அமைச்சு, இடர் முகாமைத்துவ மத்திய நிலையம், மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகள் இணைந்து பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு குடிநீர் மற்றும் அத்தியாவசிய தேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

வரட்சியுடன் கூடிய காலநிலையால் 10 இலட்சத்து 89 ஆயிரத்து மூன்று பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலவும் வரட்சியுடனான காலநிலையால் வட மாகாணமே அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் மாத்திரம் ஒரு இலட்சத்து 33 ஆயிரத்து 678 குடும்பங்களைச் சேர்ந்த நான்கு இலட்சத்து 62 ஆயிரத்து 815 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மக்களுக்கு குடிநீரை வழங்குவதற்காக இதுவரை வடமாகாணத்தின் 5 மாவட்டங்களுக்கும் 45 பவுசர்கள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (மு-11)

## ரவி கருணாநாயக்க...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத்திய வங்கி பிணை முறி ஊழல் சம்பந்தமாக ஆணைக்குழுவில் முன்னிலையாகி ரவி கருணாநாயக்க பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஜே.வி.பி தலைவர் அநுர குமார திஸாநாயக்க கருத்து தெரிவிக்கும் போது, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் மருமகன் அலோசியஸ் அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு வீடு கொடுத்துள்ளார்.

அலோசியஸ் வீடு கொடுக்க ரவி கருணாநாயக்க என்ன உறவினரா? அல்லது ஏழையா? இந் நடவடிக்கை மூலம் அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் அர்ஜுன் அலோசியஸ் சந்தித்துள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (மு-11)

## இளஞ்செழியனை...

சுதந்திரமாக நடக்க முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. ஜனநாயகம் மறுக்கப்படுகின்றது. துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

அண்மையில் யாழில் நீதிபதி இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இதன் பிரதான சந்தேகநபர் சரணடைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர் என நாமல் தெரிவித்துள்ளார்.

சுடச்சொன்னார் சுட்டேன் என குறித்த சந்தேகநபர் வாக்குமூலம் வழங்கியிருந்தார். இந்த நிலையில் யாரை வேண்டுமானாலும் அவர் சுடுவாரா? அப்படியாயின் நாட்டின் தலைவர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

யாழ்ப்பாணத்தில் இருந்து எமக்கு கிடைக்கும் தகவலுக்கு அமைய, நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து நடத்தப்பட்டதாக கூறப்படும் துப்பாக்கிச்சூட்டை நடத்திய பிரதான சூத்திரதாரி இந்த நாட்டை விட்டே தப்பிச் சென்றுள்ளார்.

ஆனால் அவர் சரணடைந்து விட்டதாக பொலிஸார் கூறுகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் நீதிபதி, பொலிஸார் மற்றும் தற்போது சரணடைந்த நபர் என மூவருடைய கருத்துக்களும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டு காணப்படுகின்றன.

எனவே இது தொடர்பில் பொலிஸார் உரிய விசாரணைகளை நடத்த வேண்டும் என இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (மு-11)

## மகிந்த பறித்தது...

கட்டடத்தை பறிமுதல் செய்ய, அப்போதைய பாதுகாப்பு அமைச்சரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிறப்பித்த உத்தரவை உச்ச நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை ரத்து செய்துள்ளது.

இதன்படி பயங்கரவாத புலனாய்வு பிரிவு இந்த கட்டடத்தை எட்டு வாரங்களுக்குள் அதன் உரிமையாளரிடம் கையளிக்க வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த கட்டடத்தை பறிமுதல் செய்த முன்னாள் பாதுகாப்பு அமைச்சரின் தீர்மானத்தை எதிர்த்து, அதன் உரிமையாளர்களான சுவிட்சர்லாந்தில் வசித்து வரும் சண்முகம் சிவராஜா மற்றும் சிவராஜா சரோஜினி தம்பதிகள் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

தங்களுக்கு சொந்தமான இந்த கட்டடத்தை விடுதலை புலிகளுக்கு சொந்தமான நிதியை பயன்படுத்தி வாங்கியதாகவும் அங்கு விடுதலை புலிகளுக்கு உதவும் மருத்துவ மனையை நடத்தியதாக குற்றஞ்சாட்டி பயங்கரவாத புலனாய்வு பிரிவினர் விசாரணையை ஆரம்பித்ததாக மனுதாரர்கள் தெரிவித்திருந்தனர்.

அதன் பின்னர் கடந்த 2009ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் திகதி, அப்போது பாதுகாப்பு அமைச்சராக பணியாற்றிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவுப்படி இந்த கட்டடம் பறிமுதல் செய்யப்பட்டதாக இந்த மனுவில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

மனுவை ஆராய்ந்த நீதிபதிகள் அவசர கால சட்டத்தின் கீழ் இந்த கட்டிடத்தை பறிமுதல் செய்யும் அளவிற்கு போதிய ஆதாரங்கள் இல்லை என்று கூறியுள்ளனர்.

எனவே, அதனை பறிமுதல் செய்வதற்கு முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ பிறப்பித்த உத்தரவு சட்ட ரீதியாக செல்லுப்படியாகாது என்று தீர்ப்பளித்துள்ள உச்ச நீதிமன்றம், இந்த நடவடிக்கையால் மனுதாரர்களின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.எனவே, அவர்களுக்கு ஐந்து லட்சம் ரூபாய் நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று நீதிமன்றம் அரசாங்கத்திற்கு உத்தரவிட்டுள்ளது. (மு-11)

## தடை நீடிக்கும்...

அதற்குப் பின்னர் விடுதலைப் புலிகளை தீவிரவாத அமைப்பாக பேரவையில் தீர்மானம் எடுக்கப்பட்ட 2015-2017காலப்பகுதியை இந்த தீர்ப்பு உள்ளடக்கவில்லை.

இதன் மூலம், விடுதலைப் புலிகள் தொடர்ந்தும், ஐரோப்பிய ஒன்றியத்தினால் தீவிரவாத அமைப்பாகவே பட்டியலிடப்பட்டிருக்கும்.

தற்போதைய தீர்ப்பானது கவனமாக பகுப்பாய்வு செய்யப்படும்.இந்தப் பட்டியலை சட்ட பூர்வமானதாக உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. (மு-11)

## நாட்டை சிறப்பாக...

எனவும் நாட்டை சிறந்த முறையில் நிர்வகிக்க வேண்டுமாக இருந்தால் அரசாங்கத் திற்கு முதுகெலும்பு இருக்க வேண்டும் என தாம் முன்னெச்சரிக்கை விடுப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

சரியான தீர்மானங்களை எடுக்க முடியா விட்டால் அது அரசாங்கத்தின் பலவீனமே. எடுக்கும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முடியாவிட்டால் எதிர்க்கட்சியின் இடையூறுகள் அதிகரிக்கும். வினைத்திறனான முறையில் நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. அதனை அரசாங்கம் நிரூபிக்க வேண்டும் என பாராளுமன்றத்தில் இரா.சம்பந்தன் வலியுறுத்தினார். (மு-11)

# முன்னாள் தளபதிக்கு இறுதி அழைப்பாணை

(கொழும்பு)

முன்னாள் விமானப் படைத் தளபதி ஹர்ஷ துமிந்த அபேவிக்கிரமவை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு நேற்று இறுதி அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் நவம்பர் மாதம் 02ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறும் இதற்காக இறுதி அழைப்பாணை விடுக்கப்படுவதாகவும், கொழும்பு மேலதிக நீதவான் புத்திக ஸ்ரீ ராகல குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் விமானப் படைத் தளபதி ஹர்ஷ துமிந்த அபேவிக்கிரமவை நேற்றைய தினம் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்ட நிலையில், அவர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் எச்சரிக்கை என அம்பாறை முன்னாள் நகராதிபதி இந்திக்க நலின் எனக் கூறிக்கொண்டு, முன்னாள் விமானப் படைத் தளபதிக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில், முன்னாள் கடற்படைத் தளபதியால் விமானப் படை ஊழியர் ஒருவருக்கு வழங்கப்பட்டதாக கூறப்படும் இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு கூறியதாக தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் முதலாவது சாட்சியாளராக ஹர்ஷ துமிந்த அபேவிக்கிரம பெயரிடப்பட்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து சாட்சியம் வழங்கவே அவருக்கு அழைப்பாணை விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

# ஷிரந்தி ராஜபக்ஷ விசாரணைக்கு வரவில்லை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ நேற்றைய தினம் குற்றப்புலனாய்வு பிரிவினர் முன்னிலையில் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தார்.

ஆனால், நேற்று சமுகமளிக்கமுடியாது என அவரது சட்டத்தரணிகள் மூலம் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

செஞ்சிலுவைச் சங்கத்தினால், சிறிலிய சவிய அறக்கட்டளை நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட ஜீப் வண்டியை யோஷித ராஜபக்ஷ பயன்படுத்தியமை தொடர்பான விசாரணையை மேற்கொள்வதற்காகவே இவரை குற்றப்புலனாய்வு பிரிவினர் அழைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (மு-11)

# வவுனியாவில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள்

## வட மாகாண சபை கவனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் வவுனியா தெற்கின் வெலி ஓயா, போகஸ் வெவ, ஓயா மடுவ பகுதிகளை சிவப்பு அபாய பகுதிகளாக அடையாளப்படுத்தி தொடர்ந்து அவதானிக்க வேண்டும் என வடமாகாணசபையில் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதுடன், மேற்படி பகுதிகளில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் தொடர்வதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடமாகாண சபையின் 100வது அமர்வு நேற்று கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றிருந்தது. இதன் போது மாகாணசபை உறுப்பினர்களான அயூப் அஸ்மின் மற்றும் து.ரவிகரன், இ. ஆனோல்ட் ஆகியோர் மேற்படி கோரிக்கையினை முன்வைத்திருந்தனர். மேலும் இந்த விடயம் தொடர்பாக மாகாணசபை உறுப்பினர் அயூப் அஸ்மின் தெரிவிக்கையில்,

குறித்த பகுதிகளுக்கு அண்மையில் சென்றிருந்தபோது அங்கே குடியேற்றப்படும் மக்களுக்கு ஒரு ஏக்கர் விவசாய நிலம், கால் ஏக்கர் குடியிருப்பு நிலம், தற்காலிக வீட்டு திட்டத்திற்காக 25 ஆயிரம் ரூபாய் பணம், 2 ஆடுகள், ஒரு தையல் இயந்திரம், ஒரு நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் ஒரு நீர் தாங்கி இதனோடு 6 மாதங்களுக்கான நிவாரணம் வழங்கப்படுகின்றமையை அவதானிக்க முடிந்தது.

இந்நிலையில் மேற்படி பிரதேசங்கள் மீது குறிப்பாக மேற்படி பிரதேசங்கள் அடங்கும் பிரதேச செயலக அதிகாரிகள் மீது தொடர்ச்சியான கவனத்தை நாம் செலுத்தவேண்டும் என கோரினார். தொடர்ந்து மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் கூறுகையில், மாகாண சபை உறுப்பினர் அயூப் அஸ்மின் குறிப்பிட்டிருந்த பகுதிகளுடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதசத்து காணிகள் மற்றும் கரைதுறைபற்று பிரதேசத்து காணிகளும் எடுக்கப்படுகின்றது.

கடந்த 10 நாட்களுக்கு முன்னர் கொக்கு தொடுவாய் பகுதிகளுக்கு சென்றிருந்தபோது அங்கே தமிழ் மக்களுக்கு சொந்தமான மானாவாரி பயிர்செய்கை காணிகளை திட்டமிட்ட குடியேற்றத்தின் ஊடாக குடியேற்றப்படும் மக்களுக்கு வழங்குவதற்காக எல்லையிடும் பணிகள் இடம்பெற்றிருப்பதை மக்களுடன் இணைந்து பார்த்தேன்.

ஏற்கெனவே மக்களுடைய நீர்பாசன காணிகள் எடுக்கப்பட்டிருக்கும் நிலையில் மீதமாக உள்ள மானாவாரி காணிகளையும் எடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றமை தொடர்பாக விசேட கவனம் தேவை என கூறினார். தொடர்ந்து மாகாண சபை உறுப்பினர் இ.ஆனோல்ட் கூறுகையில், மேற்படி பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்கள் தொடர்ந்தும் நடக்கின்றது.

இதனடிப்படையில் மேற்படி பகுதிகளை நிலங்கள் பறிபோகும் சிவப்பு அபாய பகுதிகளாக அடையாளப்படுத்தி தொடர்ந்தும் அவதானிக்கவேண்டும் என கேட்டுக் கொண்டார்.(மு-4)

# வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரத்திற்கு பதவி!

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினராக யாழ் வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் நியமிக்கப்படவுள்ளார். மாகாண சபையில் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்களுக்கான சுழற்சி முறை தேசியப் பட்டியல் ஆசனம் இறுதியாக இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கட்சியின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஜெயசேகரத்துக்கு வழங்குவதற்கு கட்சி தீர்மானித்துள்ளதாகவும் இதற்கான அறிவித்தலையும் கட்சியின் செயலாளர் தேர்தல் ஆணையாளருக்கும் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் சுழற்சி முறையிலான ஆசனம் கடந்த வருடம் தமிழீழ விடுதலை இயக்கம்(ரெலோக்கு) வழங்கப்பட்டு மயூரன் நியமிக்கப்பட்டிருந்தார். மயூரனின் ஒரு வருட பதவிக்காலம் முடிவடைவதால் அவரின் இடத்திற்கு ஜெயசேகரம் நியமிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (மு-4)

## மிருசுவில் ஆலயத்தில் தொடர்ந்த களவு சி.சி.ரிவியால் பிடிபட்டது

மிருசுவில் நீக்கிலார் ஆலயத்தில் தொடர்ச்சியாக களவு இடம்பெற்று வந்த நிலையில் இதனைத் தடுக்கும் முகமாக கண்காணிப்புக் கருவி பொருத்தப்பட்டு அவதானிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் ஆலயத்தில் புகுந்து உண்டியலை உடைத்து பணத்தினைத் திருடிய ஒருவரை பிடித்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக ஆலய தகவல்கள் தெரிவிக்கின்றன. (மு-8,85)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயூரனின்...

கைதடியில் உள்ள பேரவைச் செயலகத்தில், நேற்று நடைபெற்றது.

இதன் போதே செந்தில்நாதன் மயூரன் அவையிலிருந்து வெளியேறினார்.

இதன்போது, இன்றுடன் (நேற்று) நான் சபையில் இருந்து வெளியேறினாலும், வவு னியா மாவட்டத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும் மாகாண அமைச்சர் மற்றும் உறுப்பினர்களுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறேன் எனத் தெரிவித்தார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) சார்பாக வவுனியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, 2013ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலில் செந்தில்நாதன் மயூரன் போட்டியிட்டார். எனினும், தேர்தலில் தோல்வியடைந்தார்.

இந்நிலையில் கூட்டமைப்புக்குக் கிடைக்கப்பெற்ற 2 போனஸ் ஆசனங்களில் ஒன்று, வடமாகாண சபை உறுப்பினர் ஆயூப் அஸ்மினுக்கு வழங்கப்பட்டது.

மற்றைய ஆசனம் சுழற்சி முறையில், கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு வழங்கப்பட்டது.

இதன்போது, தமிழீழ விடுதலை இயக்கத்துக்கான சுழற்சி முறையிலான ஆசனம், செந்தில்நாதன் மயூரனுக்குக் கடந்தாண்டு வழங்கப்பட்டது.

சுழற்சி முறையிலான ஆசனத் தெரிவில் அடுத்த சந்தர்ப்பம், தமிழரசுக் கட்சி உறுப்பினருக்கே வழங்கப்படவுள்ளதாக அறிய முடிகின்றது. (மு-4)

## நல்லூர்க் கந்தனு...

கின்றது.

இத் திருவிழா காலத்திற்கான சகல ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகத்தினரும், யாழ்.மாநகர சபையும் மேற்கொண்டுள்ளன. பாதுகாப்பு ஏற்பாடுகளை பொலிஸார் ஒழுங்கு படுத்தியுள்ளனர். (மு)

## டெங்கு ஒழிப்பு நட...

வேலைத்திட்டம் இன்று முன்னெடுக்கப்படவுள்ளது. இந் நடவடிக்கையால் தற்போது நடைபெற்று வரும் 2ஆம் தவணை பரீட்சைக்கு எந்த இடையூறும் ஏற்படாதென வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (மு-11)

## தடை நீடிக்கும்...

துள்ள போதிலும், தீவிரவாத அமைப்புகளின் பட்டியலில் விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

லக்சம்பேர்க்கில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியான பின்னர், ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நீதிமன்றத்தின் தீர்ப்பு, விடுதலைப் புலிகளை தீவிரவாத அமைப்பாக பட்டியலிடுவதற்கு, பயன்படுத்தப்பட்ட நடைமுறைகளின் சட்டபூர்வ தன்மை தொடர்பானதே என்றும் ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளைத் தீவிரவாத அமைப்பாக பட்டியலிட்டதற்கான முக்கியமான காரணங்களை நீதிமன்றம் மதிப்பீடு செய்திருக்கவில்லை.

2011-2015 காலப்பகுதியை உள்ளடக்கியதாகவே நீதிமன்றத்தின் ரத்து நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

23

## விளக்க மறியல்...

ஒன்று நேற்றைய தினம் யாழ்ப்பாணம் நீதிமன்றில் இடம்பெற்றுள்ளது. தப்பி சென்ற கைதியை பொலிஸார் தீவிரமாக தேடிவருகின்றனர்

குறித்த விடயம் தொடர்பாக தெரியவருவதாவது,

கோப்பாய் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் 12 லட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டதாக சந்தேகத்தின் பேரில் கடந்த யூன் மாதம் 17 ஆம் திகதி புங்குடுதீவை சேர்ந்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

நேற்றைய தினம் குறித்த வழக்கு விசாரணைக்காக யாழ் நீதவான் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

அப்போது நேற்றைய தினம் காலை யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது, மீண்டும் சிறைச்சாலைக்கு அவரை கொண்டு செல்வதற்கு சிறைக் காவலர்கள் பொறுப்பேற்று மன்றின் வெளியே அழைத்துச் சென்றனர்.

நீதிமன்றில் உள்ள சிறைக் கூடத்தில் கைதிகளை விடுவதற்கு இடம் பற்றாக்குறை காரணமாக மன்றின் அருகாமையில் உள்ள இருக்கையில் இருத்தி வைக்கப்பட்ட போது சிறைச்சாலை உத்தியோகத்தருக்குத் தெரியாமல் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தப்பிச் சென்ற கைதியை சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸார் தேடிவருகின்றனர். (மு-9)

## அமைச்சர் விஜயகலாவிடம்...

மாறு ஊர்காவற்றுறை நீதவான் மொஹமட் மிஹால், குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

புங்குடுதீவு மாணவி கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு உதவியதாக குற்றம் சுமத்தப்பட்டு தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்கவின் சட்டத்தரணிகள், நீதிமன்றில் விடுத்த கோரிக்கைக்கு அமைய இவ்வாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த குற்றச்சாட்டு குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தவில்லை என பிரதிப் பொலிஸ்மா அதிபரின் சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பிலான வீடியோ சாட்சியங்களையும் சட்டத்தரணிகள் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளனர். இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்துமாறும், விஜயகலாவிடம் வாக்கு மூலமொன்றை பதிவு செய்து கொள்ளுமாறும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். அத்துடன் கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் சட்டபீட பீடாதிபதி வி.ரி.தமிழ்மாறன் எவ்வாறு சந்தேக நபருடன் தொடர்பு கொண்டார் என்பது தொடர்பிலும் விசாரிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (மு-11)

## வேலைநிறு...

வரை, போராட்டத்தை ஒத்திவைக்க தீர்மானித்துள்ளதாக, அனைத்து இலங்கை தொழிலாளர் சங்கத்தின் பிரதம செயலாளர் சந்திரசிறி மஹகமகே குறிப்பிட்டுள்ளார்.

எதுஎவ்வாறு இருப்பினும், விரைவில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை அரசாங்கம் துறைமுக அதிகார சபைக்கு பொறுப்பளித்து, சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தில் திருத்தத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமென நம்புவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறு இல்லையாயின் பெற்றோலிய வள ஊழியர்களுடன் இணைந்து தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகவும் சந்திரசிறி மஹகமகே மேலும் தெரிவித்துள்ளார். (மு-11)

## வாள்வெட்...

ஞரே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கலட்டிப் பகுதியில் வேலைக்காக வந்த குறித்த இளைஞரை நேற்று வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கழுத்து மற்றும் வயிற்றுப் பகுதியில் வாளால் வெட்டியுள்ளனர்.

வாள்வெட்டுக்கு இலக்காகிய இளைஞர் பொது மக்களினால் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வாள் வெட்டு சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை யாழ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மு-30)

## கெமுனு...

முறைக்கு மாறாக பல்வேறு நபர்களுக்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கும் வியாபாரம் சம்பந்தமாக விசாரிக்குமாறு தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜயரத்ன நேற்று பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு ஒன்றை செய்துள்ளார். (மு)

VACANCY IN JAFFNA
எதிர்காலத்தை வெற்றிகொள்ள நிரந்தர தொழில் சர்வதேச முன்னணி நிறுவனத்தின் New Office (4) நான்கிற்கு 18 வயதிற்கு மேற்பட்ட O/L தோற்றிய 30 பேர் வீதம் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.
Note - பயிற்சி தங்குமிட வசதிகள் இலவசம். பயிற்சியின் போது 12,000/- பின் 50, 000 /-

(9935)
அழைக்கவும் - 077 230 2795, 077 664 4442

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

(9947)
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

விற்பனையாகிறது...
தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு
15 எதிர் பார்க்கை மாதிரி வினாத்தாள்களுடன்
1 பூமாலை இலங்கையில் அதிகளவில் விற்பனையாகின்ற வினாத்தாள் தொகுப்பு
10 எதிர் பார்க்கை மாதிரி வினாத்தாள்களுடன்
2 யாழ் எக்ஸ்பிரஸ் விலை: 400/-
தொடர் மாதிரி வினாத்தாள்களுடன்
3 வெற்றிச்சிகரம்
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
தொ.பேசி : 077-6258778
(C-9178)

நடமாடும் மிருகவைத்திய சேவை
சுன்னாகத்துக்கு அண்மையில் மிருக வைத்திய தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும்.
Dr.K.கிருபாகரன்
0779738802
(9948) முருகேச பண்டிதர் வீதி, சுன்னாகம்.

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK-550/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
♦ யாழ்ப்பாணம் ♦ கிளிநொச்சி ♦ நெல்லியடி ♦ பருத்தித்துறை ♦ வல்வெட்டித்துறை ♦ சாவகச்சேரி

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
070 330 5500
அண்ணா அன் கோ
(C-9175)
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
கனடாவுக்கு (Canada) மிகக் குறைந்த கட்டணத்தில் கப்பல் ஊடாக அனுப்பிடவும்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்
யாழ்ப்பாணம் | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

A/L வரலாறு- 2017 மாபெரும் கருத்தரங்கு
இடம்:D.M.I
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
காலம்: 29.07.2017 சனி
30.07.2017 ஞாயிறு
நேரம்: காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை
(C-9148)
வளவாளர்கள்:
M. பத்மன் B.A (Hons) His.Spl
M.A. (History)
S.சுஜிகரன் B.A. (SL)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
2018 ஜனவரி பரீட்சைக்கான
aat (Sri Lanka)
(AA1, AA2 AA3)
Qualification :- G.C.E. O/L
6 Passes
Medium - Tamil & English.
ஆரம்பம் :- 29.07.2017
காலை 8.00 am
(9183)
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382 / 021 222 9149

செண்பகப் பறவைகள் பற்றிய தகவல்களைத் திரட்டுதல்
செண்பகப் பறவைகள் பற்றிய ஆய்வொன்றுக்கான தகவல்களைத் திரட்டும் பொருட்டு, யாழ் மாவட்டத்தில் செண்பகங்கள் கூடுகள் கட்டிய மற்றும் கட்டியுள்ள இடங்களைத் தெரிந்தவர்கள் அவைபற்றிய விபரங்களைக் கீழேயுள்ள தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு தெரிவித்து உதவுமாறு வேண்டுகின்றேன்.
பொ.ஐங்கரநேசன் திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 0777 969 644
(9945)

FALC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு வகுப்புக்கள்
France இல் பயிற்றப்பட்ட விரிவுரையாளரிடம் இலகுவான முறையில் French கற்றுக்கொள்ளுங்கள் (ஆங்கில அறிவு அவசியமில்லை)
2006 முதல் இன்று வரை 1291 மாணவர்கள்...
DELF A1, A2, B1, B2 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
40, பலாலி வீதி, ஆரியகுளம் ஆரம்பம்: 05.08.17 சனி 8 am 0779789456/ 0212217781
181, பிரதான வீதி, நெல்லியடி ஆரம்பம்: 14.08.17 திங் 4 pm 0213202973
IELTS Life Skills A1, B1 வகுப்புக்களும்...
(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் (முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.